V211.21 N65
N65.28

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

---

**Wednesday, the 24th March 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Report of the Expert Committee on proposed Madurai University*

* 313 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of the work so far done by the Expert Committee regarding the proposed University at Madurai;

(*b*) the issues that have been referred to the Committee; and

(*c*) when the Committee is expected to submit its final report?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*c*) The following issues were referred to be Expert Committee :

(i) Type of the new University—Whether it should be an affiliating-*cum*-teaching type or a unitary type,

(ii) location and jurisdiction of the University,

(iii) availability and selection of land and programme for construction of buildings,

(iv) affiliation of institutions,

(v) creation of University departments,

(vi) constitution of University bodies, and

(vii) financial implications.

64903

The final report of the Expert Committee has now been received and is under consideration.

**திரு. வை. சங்கரன் :** அந்த ரிப்போர்ட்டிலே இது சம்பந்தமாகக் குறிப்பிட்ட விஷயங்களிலே அவர்களுடைய அபிப்பிராயங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அந்த விவரங்களைச் சொல்ல முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் அந்த ரிப்போர்ட்டைப் பார்க்க வில்லை. இலாகாவில் பரிசீலனையில் இருக்கிறது. முக்கியமாக அஃபிலி யேடிங்-கம்-டீச்சிங் டைப்பா அல்லது யூனிடரி டைப்பா என்பதற்கு, இது அஃபிலியேடிங்-கம்-டீச்சிங் டைப் ஆக இருக்கலாம் என்று சிபார்சு இருக்கிறது. இடத்தைப் பற்றிப் சொல்லப்பட்டிருக்கிறது. நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த ரிப்போர்ட்டைப் பரிசீலனை செய்து 1965–66 நடைமுறைக் கல்வி ஆண்டிலேயே அந்தப் பல்கலைக் கழகத்தைத் துவக்குவதற்கான ஏற்பாடுகளைச் சர்க்கார் மேற்கொள்ளுமா ?

[24th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : [illegible] [illegible] சட்டசபை [illegible] [illegible] நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பூ. கார்ச்சாகஹர் : [illegible] [illegible] மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரிகளை [illegible] சேர்ப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது அரசாங்கத்தின் பரிசீலனையில் [illegible] முடிவு செய்யவில்லை. முடிவு [illegible] மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளைச் சேர்ப்பது [illegible].

திரு. கே. ஏ. மதியழகன் : [illegible] நிலை [illegible] [illegible] இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நில ஆர்ஜிதம் செய்யவேண்டு [illegible] [illegible] நடவடிக்கை எடுக்கப்பட்டு [illegible].

திரு. வை. சங்கரன் : [illegible] மூன்றாவது ஐந்தாண்டுத் [illegible] [illegible] பூர்வாங்க வேலைகள் [illegible] [illegible] நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் [illegible] ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நில ஆர்ஜிதம் [illegible] [illegible] திட்டத்திலே எந்த அளவு செய்ய [illegible]. [illegible] நிதி ஒதுக்கங்கள் நான்காவது ஐந்தாண்டுத் [illegible] [illegible] கொள்ளப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : அண்ணாமலை பல்கலைக் கழகம், சென்னை பல்கலைக் கழகம் [illegible] இருக்கின்றன. அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் [illegible] இருக்கின்ற கல்லூரி [illegible] சேர்க்கப்பட்டிருக்கிறது. [illegible] பல்கலைக் கழகத்தில் மாநிலத்திலுள்ள அந்தந்தக் கல்லூரிகள் [illegible]. புதிதாகத் துவக்கப்படும் மதுரை பல்கலைக் கழகத்தில் [illegible] தியாகக் கல்லூரிகளைப் பிரிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : [illegible] கல்லூரிகள் [illegible]. அந்தக் கல்லூரிகள் சென்னை பல்கலைக் கழகத்தோடு [illegible]. மதுரை பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டால் அந்தந்த மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் அந்தப் பல்கலைக்கழக எல்லைக்குள் இருக்கின்றனவோ, அந்தந்த மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் மதுரை பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனின் [illegible] ஒரு கோடி பேருக்கு ஒரு பல்கலைக் கழகம் இருக்க வேண்டுமென்று அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த மூன்றாவது பல்கலைக் கழகம் அமைந்தாலும், கோயம்புத்தூரில் விஞ்ஞானப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு கோடி பேருக்கு ஒரு பல்கலைக் கழகம் இருப்பது நலம் என்று யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் அபிப்பிராயம் தெரிவித்தது உண்மைதான். இருந்தாலும் யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனும் மத்திய அரசாங்கமும் அதிகமாகப் பல்கலைக் கழகங்களைப் பெருக்கிக்கொண்டு போகக்கூடாது என்று கருத்தையும் தெரிவித்தார்கள். தமிழ் நாட்டில் பல்கலைக் கழகங்கள் குறைவாகத்தான் இருக்கின்றன. ஆகையால் மதுரை பல்கலைக் கழகத்திற்குத் தடை இருக்கக் கூடாது என்று சொன்னோம். அதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இப்பொழுது மூன்று பல்கலைக் கழகங்கள்—மூன்று என்று கூடச் சொல்ல முடியாது. இரண்டரை என்றுதான் சொல்லவேண்டும்—மதுரையைச்



24th March 1965]

சேர்த்தால். விஞ்ஞானத்திற்கென்று ஒரு பல்கலைக் கழகம் ஒதுக்க வேண்டுமா ? பல்கலைக் கழகம் என்று சொன்னாலே எல்லாக்கலைகளையும் கொண்டிருக்கவேண்டுமென்ற அடர்ந்த கருத்து அடங்கியிருக்கிறதென்று கனம் அங்கத்தினர் அவர்களே உணர்வார்கள். ஆகையால் ஸயன்ஸுக்கென்று ஒரு பல்கலைக் கழகம், டெக்னலஜிக்கென்று ஒரு பல்கலைக் கழகம் என்றெல்லாம் பல்கலைக்கழகங்களைப் பெருக்கிக்கொண்டு போவது சரியல்ல என்பது என்னுடைய கருத்து.

திருமதி சி. குழந்தையம்மாள் : அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும், சென்னை பல்கலைக் கழகத்திலும் இல்லாத பல சப்ஜெக்டுகள் இப்பொழுது புதிதாக ஆரம்பிக்கப்போகும் பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்படுமா ? பல துறைகளில் மாணவர்கள் படிப்பதற்காக வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டியிருப்பதால் இப்பொழுது துவங்கப்படும் பல்கலைக் கழகத்திலே சில துறைகளை அதிகமாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பல்கலைக் கழகம் ஆரம்பித்த பிறகு கனம் அங்கத்தினர் கூறிய கருத்துக்கள் எல்லாம் பரிசீலனை செய்யப்படும்.

MR. SPEAKER : Questions 314, 315 and 316 will be taken up a few minutes later.

### போலீஸ் துணை இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைக்கிள்

* 317 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குற்றங்களை விரைவில் கண்டறிய வாய்ப்பளிக்கும் வகையில் ஒவ்வொரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் மோட்டார் சைக்கிள் கொடுக்க வேண்டும் என மதிப்பீட்டுக் குழு செய்த சிபாரிசின் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : மதிப்பீட்டுக்குழுவின் பரிந்துரையை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

The recommendation of the Estimates Committee is under the consideration of the Government.

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, குற்றங்களை விரைவிலே கண்டுபிடிப்பதற்குப் போக்குவாத்து வசதியை இப்போது இருக்கின்ற அளவைவிட இரட்டிப்பான அளவு கொடுக்க வேண்டுமென்று, சென்ற மாதத்தில் நடந்த கலவரத்திலிருந்து, அறிகிறோம். இந்த அடிப்படையிலே போக்குவரத்து சாதனங்களை அதிகரிப்பதற்குச் சர்க்காருக்கு அபிப்பிராயம் இருக்கிறதா ? அப்படி இருந்தால் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று முன்பே சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : சப்-இன்ஸ்பெக்டர்கள் மோட்டார் சைக்கிளில் போகிறார்கள். அப்படி எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் கொடுக்கமுடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கத்தின் மூலமாக கடன் பெற்று சப்-இன்ஸ்பெக்டர்கள் மோட்டார் சைக்கிள் வாங்கிக்கொள்கிறார்கள். வட்டி இல்லாக் கடனாக கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் இதற்காக அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது.

[24th March 1965

**திருமதி சி. குழந்தையம்மாள் :** கொடுக்கிற மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் குறைவாக இருப்பதினால், இப்பொழுது இருக்கின்ற அளவை அதிகப்படுத்தவேண்டுமென்று பலமுறை வற்புறுத்திச் சொல்லப்பட்டது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? நிதி ஒதுக்கீட்டிலே மோட்டார் சைக்கிள்களுக்கும் ஸ்கூட்டர்களுக்கும் அதிகமாக பணம் ஒதுக்கிக்கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது கொடுத்துவருகின்ற தொகை மூலம் 110 சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், 9 ரிசர்வ் இன்ஸ்பெக்டர்களுக்கும், சென்னையில் 16 சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் கொடுப்பதுபோல் மற்ற போலீஸ்காரர்களுக்கு சைக்கிள்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

**திரு. சா. கணேசன் :** போலீஸ் அதிகாரிகளில் குறிப்பிட்ட சிலருக்கு மோட்டார் பைக் அளிப்பதை சர்க்கார் உணர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதைவிட முக்கியமாக எல்லா போலீஸ் ஸ்டேஷன் களிலும் டெலிபோன் வசதிகள் நிச்சயம் இருக்கவேண்டும் என்பதை ஏற்று சீக்கிரம் போலீஸ் ஸ்டேஷன்கள் முழுவதிலும் அதை நிறைவேற்று வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதைப்பற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்கிறது.

**திரு. அ. ராகவ ரெட்டி :** குறைந்தது ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஒரு ஜீப் கொடுக்கவேண்டும். அதை கூடிய சீக்கிரத்தில் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** எல்லா இன்ஸ்பெக்டர்களுக்கும், சப்-இன்ஸ் பெக்டர்களுக்கும் வாகன வசதி கொடுப்பதற்கு இப்போது 71 லட்ச ரூபாய் ஆகிறது. மேலும் கொடுக்கவேண்டுமென்றால் அதிகமான பணம் செல வழிக்கவேண்டும். ஆகவே, எந்த அளவிற்கு அதிகமாகக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குக் கொடுப்பதற்கு முயற்சி செய்துவருகிறோம்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்த போலீஸ் இலாகாவிற்குப் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருப்பதால், ரெவின்யூ டிபார்ட் மெண்டில் இருப்பதுபோல் வேன் ஒன்றிரண்டுதான் இருப்பதால், ஒரு பெரிய வேன் ஒரு கூட்டத்திற்கு புறப்பட்டால், மற்றவர்கள் போவதற்கு முடிவதில்லை. ஒவ்வொரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆபீஸிலும், ஒரு மோட்டார் பைக், ஸ்கூட்டர், ஜீப் போன்றவைகளை வட்டார அளவில் வைக்க சர்க்கார் ஆலோசனை செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

### *Police Housing Scheme*

* 318 *Q.*—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of houses constructed during 1964 under the Police Housing Scheme in the State; and

(*b*) the amount spent for the above scheme in 1964?



24th March 1965]

THE HON. SRI P. KAKKAN : (*a*) 202.

(*b*) Rs. 25·65 lakhs (excluding the amount spent in the last quarter of 1964).

(அ) 202.

213

(இ) ரூ. 25·65 லட்சம். (1964-ம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் செலவழித்த தொகை இதில் அடங்காது).

**திரு. கே. ஏ. மதியழகன் :** போலீஸ் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் மொத்தம் இந்த மாநிலத்தில் 30,000-க்கு மேற்பட்ட போலீஸ்காரர்கள் இருக்கிறார்களே, அவர்களில் எத்தனை பேர் இந்த திட்டத்தினால் பலன் பெற்று இருக்கிறார்கள் ? மொத்தம் கட்டப்பட்டுள்ள வீடுகள் எவ்வளவு ?

**கனம் திரு. பூ. கக்கன் :** 1964 செப்டம்பர் 30-ம் தேதி வரை, 6,339 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இதற்கு ஆன செலவு ரூ. 462 லட்சத்து சொச்சம்.

**திரு. சா. கணேசன் :** போலீஸ்காரர்களுக்கு மற்ற வசதிகளைவிட குடி யிருப்பு வசதி மிக இன்றியமையாதது. அடிக்கடி அவர்கள் மாற்றப் படுவதால், பல இடங்களில் இடமில்லாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் நிதானமாகவும், நேர்மையாகவும் நடப்பதற்கு ஊறு விளைவிக்காத சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும் என்றால் எங்கும் அவர்கள் குடியிருக்காமல் போலீஸ் வீடுகளில் குடியிருக்க வேண்டும் என்பதை உணர்ந்து, அதிகமான வீடுகளை அதிகமான ஆபீசர்களுக்கும், அதிகமான போலீஸ்காரர்களுக்கும் கட்டிக்கொடுக்கும்படி உடனடியாக ஏற்பாடு செய்யச் சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது அவசியம் என்று கருதித்தான் மத்திய அரசாங்கம் கடனாக கொடுத்து உதவிசெய்து வருகிறது. வீடு கட்டிக்கொண்டே வருகிறோம். நூற்றுக்கு 80 அளவுக்கு வீட்டு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு எடுத்து இருக்கிறது. காலப் போக்கில் எல்லோருக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

**திரு. வை. சங்கரன் :** கீழ் நிலையில் உள்ள போலீஸ்காரர்கள் எல்லா ருக்கும் வீடு கட்டித் தருவது என்பது அரசாங்கத்தின் கொள்கையா ? அப்படி என்றால் எத்தனை காலத்திற்குள் இது முடிவு அடையும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** திட்டமிட்டு வேலை செய்கிறோம். வருங் காலத்தில் எல்லோருக்கும் வீடு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** 1964-ம் வருஷக் கடைசியில் சர்க்கார் கணக்குப்படி இன்னும் எத்தனை பேருக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டு மென்று கணக்கு இருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

### சேலத்தில் உணவு உற்பத்திக் கோட்ட அலுவலகம்

* 319 **கேள்வி—திரு. ம. கமலநாதன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உணவு உற்பத்தி கோட்ட அலுவலகம் (Food Production Division Office) எப்போது துவக்கப்பட்டது ?

(இ) எப்போது மூடப்பட்டது ? காரணம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) :—சேலம் மாவட்டத்தில் உணவு உற்பத்திக் கோட்டம் (Food Production Division) ஒன்றை ஏற்படுத்துவதற்குரிய ஆணைகள் 1963 நவம்பர் 18-ம் தேதியில் வெளியாயின. மேற்படி கோட்டம் 1963 டிசம்பர் 11-ம் தேதி முற்பகல் நிறுவப்பட்டது. ஆனால், சிக்கன ஏற்பாடாக அரசாங்கம் இதனை மறு பரிசீலனைசெய்து, அக் கோட்டத்தைக் கலைக்கும்படி 1963 டிசம்பர் 27-ல் ஆணையிட்டது. 1964 ஜனவரி 2-ம் தேதி பிற்பகலிலிருந்து இக் கோட்டம் கலைக்கப்பட்டது. பின்னர் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உணவு உற்பத்திக் கோட்டம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் மீண்டும் புதிதாக அனுமதி வழங்குகிறது. 1965 ஜனவரி 27-ம் தேதியில் நிறுவப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது.

**திரு. ம. கமலநாதன் :** இந்த "புட் ப்ரொடக்ஷன் ஆஃபீஸ்" சேலத்தில் திறக்கப்பட்டு 10 நாளில் மூடிவிட்டார்கள். முதலில் அலுவலகம் திறப்பதற்கென்று டேபிள், சேர் எல்லாம் வாங்கப்பட்டு ஆஃபீசர்கூட வந்துவிட்டார். பத்து நாளில் ஆஃபீஸை "க்ளோஸ்" பண்ண உத்தரவு வந்து ஆஃபீஸ் மூடப்பட்டது. தொடங்கப்படுவதற்கு முன்பேயே இந்த அலுவலகம் தொடர்ந்து பணி ஆற்ற முடியும் என்ற அளவிற்கு ஒரு நிலைமையை உருவாக்கவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கெனவே உத்தரவு இட்டு இங்கே அந்த டிவிஷனை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டம் இட்டு இருந்தார்கள். எமர்ஜென்ஸி காரணமாக, பணக் கஷ்டத்தின் காரணமாக இதை மீண்டும் திறப்பது நல்லதில்லை என்று சொன்னார்கள். நான் அந்த வட்டாரத்தில் டூர் பண்ணப் போனபோது, கலெக்டரைச் சந்தித்தேன். உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் பல வேலைகளைச் செய்ய இந்த ஆஃபீஸ் இருந்தால் நல்லது என்று கேட்டுக்கொண்டார்கள். மறுபடியும் பரிசீலனை செய்து, போர்ட் மெம்பர், சூப்பரிண்டெண்டிங் எஞ்சினீயர், சீஃப் எஞ்சினீயர் இவர்களோடு கலந்து பேசி, இந்த வட்டார மக்களுக்கு மீண்டும் உதவி செய்யப் புதிதாக டிவிஷனைத் திறக்க ஏற்பாடு செய்து இருக்கிறது.

### *Consumers Co-operative Stores for Industrial workers*

* 320 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the steps taken for the regular supply of rice to the consumer co-operatives of industrial workers; and

(*b*) the details of requirements of rice for these societies each month?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) இம் மாநிலத்தில், தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான பயன்கொள்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தேவையான அரிசியை, மாவட்டக் கூட்டுறவு சப்ளை-விற்பனைச் சங்கங்களிடமிருந்து அல்லது அவை இணைந்துள்ள சம்பந்தப்பட்ட மொத்த வாணிபப் பண்டகசாலைகளிடமிருந்து பெறுகிறார்கள். மதுரை ஆலைத்தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை போன்ற தொழிற்சாலைத் தொழிலாளர்களின் பெரிய பண்டகசாலைகளில் சில அறுவடைக்காலத்தில் உள்ளூரிலோ வெளியிடங்களிலோ நெல் அல்லது அரிசியைக் கொள்முதல் செய்து, அவைகளின் உறுப்பினர்களுக்கு அரிசிப் பங்கீடு செய்ய ஏற்பாடு செய்கின்றன. உள்ளூர் சிவில் சப்ளை அதிகாரிகளின் பங்கீட்டு ஆணைகள்மூலம் மேற்படி பண்டகசாலைகளுக்கும் அரிசி வழங்கப்படுகிறது. மொத்த வாணிபப் பண்டகசாலைகளும், தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்ளிட்ட பயன்கொள்வோர் பெரிய பண்டகசாலைகளும் உணவுத் தானியங்களையும் பிற இன்றியமையாப்பொருட்களையும் மொத்தமாக வாங்குவதற்கு மாநில அரசாங்கம் அளிக்கும் உத்தரவாதத்தின்பேரில், இந்திய ஸ்டேட் பாங்கு அவசியமான கடன் வசதிகள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



(இ) பயன்கொள்வோர் கூட்டுறவு பண்டகசாலைகளின் உறுப்பினர்களுக்கு வழங்க மாதம் ஒன்றுக்கு புழுங்கல் அரிசியும் பச்சரிசியும் சுமார் 5,000 டன் வரையில் தேவைப்படுகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கான பயன்கொள்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் மாநிலத்தில் மொத்தம் எவ்வளவுள்ளன ? எவ்வளவு தொழில்கள் இதனால் பலன் பெற்றிருக்கின்றன ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** இப்போது 132 இண்டஸ்ட்ரியல் வொர்க்கர்ஸ் ஸ்டோர்ஸ் இருக்கின்றன. நூற்றி நாற்பத்திரண்டு எஸ்டாப்ளிஷ்மெண்டும், 132 ஸ்டோர்ஸும் இருக்கின்றன. நாற்பத்திநான்கு ப்ளான்டேஷனுக்கு 36 கூட்டுறவு ஸ்டோர்ஸ் இருக்கின்றன.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** கோயம்புத்தூர் ஜில்லாவிலே நூற்பு ஆலைகளிலே கூட்டுறவு பயன்கொள்வோர் பண்டகசாலைகள் இருக்கின்றன. ஐம்பது அல்லது 100-க்குமேல் தொழிலாளிகள் வேலை செய்யவில்லை என்பதால் சில இடங்களில் முதலாளிகள் மறுக்கிறார்கள். தக்க காரணங்களை ஆராய்ந்து இப் பண்டகசாலைகளை அமைக்க அமைச்சர் முன்வருவாரா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** எல்லா ஆலைகளிலும் அநேகமாக 50 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களையும் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இதில் ஏதாவது தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னால் கனம் அங்கத்தினர் கூறியதுபோல் அங்கே இருக்கக் கூடிய முதலாளிகள் ஒத்துழைப்பு குறைவாக இருக்கிறது. இருந்தாலும் அவசியமாகச் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போது அமைச்சர் கொடுத்த கணக்கிலிருந்து இம்மாதிரி கூட்டுறவு பண்டகசாலைகள் மிகவும் குறைவு என்று தெரிகிறது. கோயம்புத்தூர் ஜில்லா தொழில் பிராந்திய ஜில்லா. அங்கே துரிதமாக இப்பண்டகசாலைகளைத் துவக்க சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** இந்த ஆண்டிலே அவசியமாகக் கருதியதால் " ப்ளான்டேஷனிலே " இந்த கூட்டுறவு ஸ்டோர்ஸ் அமைக்கப்பட்டு இருக்கிறது. இது போக பாக்கி இருக்கும் 203 இண்டஸ்ட்ரியல் எஸ்டாப்ளிஷ்மெண்டிலும் வைக்கவேண்டுமென்று நிச்சயமாக வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** தஞ்சை ஜில்லாவில் இம்மாதிரி 16 கூட்டுறவு விற்பனை சங்கங்கள் இருக்கின்றன. அவைகளிடம் வாங்காமல் வேறு தனிப்பட்ட வியாபாரிகளிடம் வாங்குகிறார்கள். அங்கங்கே நிறைய ஸ்டாக் இருக்கின்றன. இம்மாதிரி சங்கங்களிடம் தானியங்களை வாங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** இது தனிப்பட்ட கேள்வி. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

### *Rice mills in the Public Sector*

* 321 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to start rice mills in the Public Sector?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** இப்போது திருவாரூரிலுள்ள, தஞ்சை கூட்டுறவு விற்பனை பெடரேஷன் லிமிடெட், கூட்டுறவுத் துறையில் நவீன அரிசி ஆலை ஒன்றை நிறுவி வருகிறது. அடுத்த ஆண்டில் சுமார் 31 (முப்பத்தொன்று) பெரிய அரிசி ஆலைகளைக் கூட்டுறவுத் துறையில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கூட்டுறவுத் துறையில் நிறுவி இருக்கிற அந்த ஆலைகளைச் சர்க்கார் துறைக்கு மாற்றி நம்முடைய மாநில சர்க்கார் பொறுப்பிலே நடத்துவது பற்றி இந்தச் சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி எனக்குச் சரியாக விளங்கவில்லை. என்றாலும், தஞ்சை கூட்டுறவு விற்பனை ஃபெடரேஷன், கூட்டுறவுத் துறையில் ஒரு பெரிய அரிசி ஆலை ஒன்றை நிறுவுவதோடு, நான் ஏற்கனவே சொன்னது போல், அடுத்த ஆண்டில் சுமார் 31 பெரிய அரிசி ஆலைகளையும் கூட்டுறவுத் துறையில்தான் நிறுவத் திட்டம் இடப்பட்டுள்ளது என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Loss in Government Cinchona Department at Ootacamund in 1963–64*

* 322 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Government Cinchona Department at Ootacamund had incurred any loss during the year 1963-64; and

(b) if so, the amount of loss so incurred?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) ஆம்.
(இ) ரூபாய் 22,62,626.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தச் சின்கோனு துறையில் 1963-64-ம் ஆண்டில் மட்டும்தான் நஷ்டம் ஏற்பட்டது என்பது இல்லை. ஆண்டாண்டு காலமாகவே நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. அதற்கான அடிப்படைக் காரணம் என்ன ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அதற்கான காரணங்களை அன்றொரு நாள் இங்கே விளக்கிப் பேசியிருக்கிறார்கள். யுத்த காலத்தில் நமக்கு அது அவசியமாக வேண்டும் என்ற முறையிலேதான் செலவைப் பொருட்படுதாமல், வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். அந்த முறையில்தான் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** பெரு நஷ்டம் ஏற்பட்டதற்குப் பிறகு சின்கோனு செடிகளை அழித்துவிட்டு இப்பொழுது செண்ட் போன்ற வற்றிற்குப் பயன்படும் ஜெரேனியம் போன்ற செடிகளை வைத்துப் பயிர் செய்கிறார்கள். கொய்னுவுக்கு வெளிநாடுகளில் கிராக்கி இருப்பதாகவும், மறுபடியும் சின்கோனு பயிரிடக்கூடிய திட்டம் ஒன்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகவும் தெரிகிறது. ஜெரேனியத்தை அழித்து விட்டு சின்கோனுவைப் பயிரிடுவதானால் மீண்டும் நஷ்டம் ஏற்படக்கூடும் என்பதை உத்தேசித்து, ஜெரேனியத்தைத் தொடர்ந்து பயிரிட அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** ஜெரேனியம் பயிரிடுவதிலும் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஒன்றும் பயிரிடப்படாமல் வீணாக இருக்கும் நிலங்களில் காட்டிலாகாவினர் விறகு மரங்களை வைக்கவேண்டுமென்று முயற்சி செய்வதைவிட இத்தகையவைகளை வைத்து வளர்க்கலாம் என்பதற்காகத்தான் இவ்வாறு செய்யப்படுகிறது. இதெல்லாம் அடுத்த வருஷமே பலன் தருவதென்பதில்லை. பதினைந்து, இருபது வருஷங்கள் ஆன பிறகுதான் அவற்றிலிருந்து பட்டை எடுக்க வேண்டும். நஷ்டம் ஏற்பட்டதற்கு இன்னொரு காரணம், 25 ந.பை. அளவிலேதான் வெளிநாடுகளிலே இருக்கவேண்டும் என்ற நிலை இருந்தது. வெட்டி எடுத்து உரித்துப் பார்த்ததிலே நான்கைந்து மடங்கு அதிகம் ஆகும் நிலை இருந்தது.



**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சின்கோனுவிலிருந்து எடுக்கின்ற கொய்னுவை "சிந்தெடிக்" முறையில் மாத்திரைகளாகத் தயாரித்து வெளிநாடுகளிலிருந்து இங்கே இறக்குமதி ஆவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அந்த மாத்திரைகள் வந்த காரணத்தினால்தான் இங்கே சின்கோனுவிலிருந்து தயாரிக்கப்படும் கொய்னு மாத்திரை விற்பனையில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** இந்தக் கேள்வியை என்னுடைய சக அமைச்சர் கனம் அம்மையார் அவர்களுக்குப் போட வேண்டும்.

*Improvement of Slums and Housing Projects (Salem)*

* 314 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the details of the schemes under consideration for improvement of Slums and for Housing Projects in Salem; and

(b) whether there is any proposal to locate a separate unit of the Housing Board at Salem?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) A statement[a] is placed on the Table of the House.

(b) Salem comes under the jurisdiction of the Coimbatore Housing Unit. There is no proposal to set up a separate unit of the Housing Board at Salem. However, a section office of the Coimbatore Housing Unit is functioning at Salem.

**திரு. ர. ஜீவரத்னம் :** வடாற்காடு ஜில்லா தலைநகரமாகிய வேலூரிலும் சேரி ஒழிப்புப் பிரச்னை மிக முக்கியமானதாக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது வேலூரையும் எடுத்துக்கொண்டு அங்கு சேரி ஒழிப்புத் திட்டத்தை அமல் நடத்த அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வடாற்காட்டைப் பற்றித் தனிக் கேள்வி போடும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகம் கோவையில் ஆர்ஜிதம் செய்த நிலங்கள்**

* 315 கேள்வி—**திரு. எம். எஸ். மணி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவையில் தமிழ்நாட்டு வீட்டு வசதிக் கழகம் எவ்வளவு நிலங்களை வாங்கியிருக்கிறது ?

(இ) எந்தப் பகுதியில் வாங்கியிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) & (இ) மேற்குக் கோவைப்புறநகர் திட்டத்திற்காக சுண்டக்காமுத்தூர் கிராமத்தில் 250·68 ஏக்கர் பரப்புள்ள நிலமும், குமாரபாளையம் கிராமத்திலே பேரூர் சாலைக்கு வடக்கிலும் தெற்கிலும் 31·72 ஏக்கர் பரப்புள்ள நிலமும் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களின் அபிவிருத்தித் திட்டத்திற்காக மேற்கொண்ட பூர்வாங்க வேலைகளைப் பற்றிய விவரங்களைக் கனம் அமைச்சர் அவர்கள் கூற முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சுமார் 280 ஏக்கர் நிலத்தை நாம் "பல்க் அக்விஸிஷன்" ஆக வாங்கிவிட்டோம். அந்த இடத்தில் "லே-அவுட்" போட்டிருக்கிறோம். ஊரூர், கோடம்பாக்கம்-புதூர்

---

[a] Printed as Appendix on pages 576–579 inpra.

டவுன்ஷிப்களைப் போல அமைந்த டவுன்ஷிப் அமைக்கப்படும். அதற்காக நிலம் வாங்கி, பூர்வாங்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, கோவையில் தொழிற்சாலைகள் மிகுந்துள்ள கிழக்கு, தெற்கு, வடக்கு பகுதிகளில் ஆயிரக் கணக்கான ஏக்கரா காலி நிலங்கள் இருக்கும்போது, மூன்று மைல் சுற்றளவில் எந்த விதமான தொழிற்சாலையும் இல்லாத சுண்டக்காமுத்தூர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகம் சுமார் 400, 500 ஏக்கரா நிலங்களை வாங்கியிருப்பது ஏன் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** டவுன்ஷிப் அமைப்பதும், ஸப்ஸிடைஸ்டு இண்டஸ்ட்ரியல் ஹௌஸிங் ஸ்கீம் போடுவதும் வெவ்வேறு. இது நகர அபிவிருத்தித் திட்டம். இந்தப் புறத்தில்தான் நல்ல மேடான நிலமாகவும் வீடுகள் கட்டுவதற்கு சரியான நிலமாகவும் இருக்கிறது என்று கருதி டவுன்ஷிப் எக்ஸ்டென்ஷனுக்காக இது வாங்கப்பட்டிருக்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** வீட்டு வசதிக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது நிலத்திற்குச் சொந்தக்காரர்களில் பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ளாமல், கோர்ட்டுக்கு வந்திருக்கிறார்களே, அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** தலைவர் அவர்களே, கோயமுத்தூரில் வீட்டு வசதிக் கழகம் ஆர்ஜிதம் செய்திருக்கும் நிலத்தைப் பொறுத்த வரையில் எல்லாம் பொருத்தமாகத்தான் இருக்கிறது. என்றாலும், சென்னை கடற்கரை எஸ்டேட்டில் வீடுகள் கட்டப்பட்டிருப்பதுபோல, மூன்று, நான்கு மாடிகள் வைத்து இப்போதே கட்டுவதற்கான வழிவகை கண்டால் வீட்டுப் பஞ்சம் நீங்கக்கூடும் என்று பல அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன. அவற்றின்மீது அமைச்சர் அவர்கள் யோசனை செய்து ஏதாவது முடிவு எடுப்பார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த டவுன்ஷிப்பில் பலவிதமான கட்டடங்கள் இருக்கும். " லோன் செல்லிங் ப்ளாட் " என்ற வகையில் அவரவர் இஷ்டம்போல் எல்.ஐ.ஜி. வீடு கட்டும் திட்டத்தின்கீழ் கட்டக்கூடிய வீடுகளும், சென்னை கடற்கரை எஸ்டேட்டில் வாடகைக்கு விடக்கூடிய " **flats** . " போன்றவைகளும் அங்கே கட்டப்படும்.

**திரு. எம். எஸ். மணி :** இப்பொழுது ஆர்ஜிதம் செய்திருக்கிற பகுதியைச் சுற்றி தனியார் துறையிலோ அல்லது பொதுத் துறையிலோ ஏதாவது தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது தொழிற்சாலைத் திட்டமே அல்ல. இது நகர விஸ்தரிப்பு (டவுன் எக்ஸ்டென்ஷன்). பலதரப்பட்ட மக்கள் வசிப்பதற்கான ஒரு திட்டம். தொழிற்சாலைக்காக இது அமைக்கப் படவில்லை.

**திரு. எம். எஸ். மணி :** அப்படியானால், மேற்படி இடத்திலிருந்து தொழிற்சாலைக்குச் செல்கிற தொழிலாளர்கள் மாதமொன்றுக்கு 15 முதல் 30 ரூபாய் வரை பஸ் கட்டணம் கட்டவேண்டி நேரும் என்பதை அரசாங்கம் உணருகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கோவையில் ஸப்ஸிடைஸ்டு இண்டஸ்ட்ரியல் ஹௌஸிங் ஸ்கீமின்கீழ் ஐந்தாறு திட்டங்கள் போட்டிருக்கிறோம். அவையெல்லாம் தொழிற்சாலைகளுக்குச் சுற்றுப்புறத்தில் இருக்கின்றன. எல்லா வீடுகளையும் தொழிலாளர்களுக்காகவே கட்ட முடியாது. மற்ற பொது மக்களுக்காகக் கட்டும் திட்டம் இது. ஸப்ஸிடைஸ்டு இண்டஸ்ட்ரியல் ஹௌஸிங் ஸ்கீமின்கீழ் கட்டப்படும் வீடுகள் தொழிலாளர்களுக்காகக் கட்டப்படுகின்றன.



**திரு. ம. கமலநாதன் :** வீட்டு வசதிக் கழகம் கோவையில் இரண்டு இடங்களில் நில ஆர்ஜிதம் செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. கோவை டவுன்ஷிப்புக்கு முதல் நிலையில் 250 எக்கர் போக, இரண்டாவது நிலையிலும் 250 எக்கர் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முதலில் 250 எக்கர் நிலம் எடுத்துக்கொண்டுவிட்டோம். இரண்டாவது 250 எக்கருக்கு இப்பொழுது 4 (1) நோட்டிபிகேஷன் போட்டிருக்கிறோம். அப்பொழுதுதான் புது டவுன்ஷிப் ஏற்படமுடியும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அரசாங்கத்தின் நடவடிக்கை மூலம் நல்ல சலுகைகளை எல்லோருக்கும் கொடுக்கவேண்டும் என்பதுதான் நோக்கம் என்று நான் நினைக்கிறேன். அப்படியானால், ஏன் இந்தத் திட்டத்தை வீடு நெருக்கடியுள்ள உதகை நகரத்திற்கும் விஸ்தரிக்கக்கூடாது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** " டூரிஸ்ட் ஹோம் " போன்று கட்டுவதுதான் உதகைக்குப் பொருத்தமாக இருக்கும். சர்க்கார் அங்கே டூரிஸ்ட் ஹோம் கட்டியிருக்கிறார்கள்.

## வீடுகட்டும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு இனத்திற்கு மாற்றம்

*316 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் வீடு கட்டும் இனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை வேறு இனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், மாற்றக் காரணம் என்ன ? எவ்வளவு தொகை ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) வீட்டு வசதி திட்டத்தின்கீழ் உள்ள செலவு குறையலாம். ஆனால் குறிப்பிட்ட எந்தத் தலைப்பிற்கும் நிதி ஒதுக்கம் மாற்றப்படவில்லை.

(இ) இத் திட்டத்தின்கீழ், தோராயமாய் 191 லட்சத்திற்குச் செலவு குறையலாம். தேசப் பாதுகாப்பு, சிவில் பாதுகாப்பு சம்பந்தமாக சில இன்றியமையாத திட்டங்களில் கூடுதல் செலவு செய்ய வேண்டியிருந்ததாலும், வேளாண்மை, மின்சாரம், பாசனம் முதலிய திட்ட வேலைகள் நிறைவேறும் வேகத்தை அதிகப்படுத்தவேண்டியிருந்ததாலும், வீட்டு வசதித் திட்ட வேலைகள் நிறைவேறும் வேகத்தைக் குறைக்கவேண்டியிருந்தது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த ஹவுஸிங் போர்டு தனி போர்டாக இயங்கினாலும், நம்முடைய சர்க்காருடைய ஆதிக்கத்தின்கீழ் அதனுடைய நடைமுறைகள் இருக்கும் காரணத்தால், அந்த போர்டின் வரவு செலவுக் கணக்குகளை அக்கவுண்டன்ட்-ஜெனரலின் தணிக்கைக்குக் கொண்டு வருவதற்கான கருத்தை இந்தச் சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த சிபார்சு ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி சர்க்கார் முடிவு எடுக்கவில்லை.

**திரு. ம. கமலநாதன் :** இந்த வில்லேஜ் ஹவுஸிங் ஸ்கீம் கிராமங்களிலே சரிவர நடைபெறுவதற்குக் காரணம் டைட்டில் கிடைக்காதது என்று சொல்லப்படுகிறது. அந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்படுமா ? சென்ட்ரலி-ஸ்பான்ஸர்டு ஸ்கீம்கள் தேசீய நெருக்கடியின் காரணமாக ஒத்திவைக்கப் பட்டிருக்கின்றன என்பது உண்மையா ? இதற்கு எல்.ஐ.சி. உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த விவரங்கள், கணக்குகள் எல்லாம் புத்தகத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வில்லேஜ் ஹவுஸிங் ப்ராஜெக்டுக்காக அதிகமாகக் கொடுத்திருக்கிறோம் என்பது தெரியும். சில திட்டங்கள் குறைக்கப்பட்டன. அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. வில்லேஜ் ஹவுஸிங் ப்ராஜெக்ட் இன்னும் அதிகமாக நடைபெறுவதற்குத் தடைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். இருந்தாலும் அந்தத் தடைகளின் காரணமாக ஒதுக்கிய தொகையை செலவழிக்காமல் இருக்கவில்லை.

**திரு. வை. சங்கரன் :** ஒரு சில தொழிலாளர், நெசவாளர், கூட்டுறவுச் சங்கங்களில் வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இடமெல்லாம் பார்த்து, இடங்களை வாங்கிவிட்ட பிறகு, இப்பொழுது அவைகளை விற்றுவிடவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்துவது நியாயம் அல்லவே. ஆகவே, மறுபடியும் இந்தத் திட்டத்தில் சேர்ந்து இடங்களை வாங்கியவர்களுக்கு, ஓரளவு வேலைகளைச் செய்தவர்களுக்கு உதவிசெய்ய அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நிதி வசதிக் குறைவின் காரணமாக, அந்தத் திட்டத்தை அமுல் நடத்த முடியவில்லை.

**திரு. செ. மாதவன் :** இந்த வீடுகள் கட்டும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை நம்முடைய மாநில சர்க்கார் சரியாகச் செலவழிக்கவில்லை, அதில் தவறு இருக்கிறது என்று மத்திய சர்க்காரிடமிருந்து ஏதேனும் குறிப்பு வந்ததா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதுமாதிரிக் குறிப்பு ஒன்றும் வரவில்லை. மத்திய சர்க்காரிலே உள்ள ஒவ்வொரு மந்திரியும், அந்தந்த ராஜ்ய சர்க்காருக்கு ஒதுக்கப்படுகின்ற தொகை பூராவையும் தங்கள் இலாகாவோடு சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கே செலவழிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். மொத்தம் நமக்குக் கிடைக்கவேண்டிய தொகை 291 கோடி. அதற்குள் எந்தத் திட்டத்திற்கு தவிர்க்கமுடியாத அவசியம் இருக்கிறதோ அந்தத் திட்டத்திற்கு பிரையாரிடி கொடுத்து வருகிறோம். அந்தவிதமாகப் பார்க்கிறபொழுது, மின்சாரத்திற்கும், நீர்ப்பாசனத்திற்கும், உணவு உற்பத்திக்கும் அதிகமாக பிரையாரிடி கொடுக்கவேண்டியிருப்பதால் நமக்கு ஒதுக்கிய தொகையை ரீ-அட்ஜெஸ்மெண்ட் செய்துகொண்டோம்.

**திரு. செ. மாதவன் :** அப்படி ரீ-அட்ஜெஸ்மெண்ட் செய்வதால் மீண்டும் இந்தத் திட்டத்திற்காகக் கொடுக்கப்படுகின்ற தொகை குறைக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மத்திய சர்க்கார் கொடுக்க முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். ஏற்கனவே நம்முடைய பிளான் பெர்ஃபார்மன்ஸ் 340 கோடி. நமக்கு ஒதுக்கியது 290 கோடி. ஆகையால் மத்திய சர்க்காரிடமிருந்து நிதி வசதி பூராவையும் பெற முடியும். ஆனால் நாம் செலவழிக்கின்ற அளவுக்கு அவர்களால் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கிராமங்களிலே வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் 1964-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி முடிய 46 வீடுகள்தான் கட்டி முடிக்கப்பெற்றிருக்கின்றன என்று இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த கிராமங்களிலே வீடு கட்டுவதற்கு அந்த டைப் டிசைனை மாற்றிக்கொடுத்தால் அதிகமாக வீடு கட்டுவதற்கு கிராம மக்கள் முன் வருவார்கள். ஆகவே, அந்த அளவுக்கு ஏற்பாடுகள் செய்ய சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் உறுப்பினர் அவர்கள் " தேர்டு ஃபைவ் இயர் பிளான் " என்ற புத்தகத்தில் 184-வது பக்கத்தைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கையிலே வைத்திருக்கின்ற அறிக்கையில் ஒரு வருஷக் கணக்குத்தான் இருக்கிறது. நாம் போட்டிருக்கிற பிளான் ஐந்து வருஷங்களுக்கு. ஆகவே, ஐந்து வருஷக் கணக்குகளைப் பார்த்தால்தான் தெரியும். ஐந்து வருஷங்களில் வில்லேஜ் ஹவுஸிங் ப்ராஜெக்ட்டுக்கு ஒதுக்கிய தொகை ரூ. 25 லட்சம். இப்பொழுது 1965-66 பட்ஜெட்டிலே ஒதுக்கியுள்ள தொகை ரூ. 38,60,000. அதே போல் நாம் எவ்வளவு வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்றும் கணக்கு இருக்கிறது.



| | | |
|---|---|---|
| Number of houses programmed | .. | 1,350 |
| Number of houses constructed up to 1963-64. | | 1,612 |

ஆகையினால் நாம் திட்டத்திற்கு மேல்தான் செய்து இருக்கிறோம்.

MR. SPEAKER : questions are over.

**[*Note.*—An asterisk(*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II—ANNOUNCEMENT.

### NOMINATION TO THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

MR. SPEAKER : Under rule 201 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following Members of the Assembly to be members of the Committee on Subordinate Legislation for the year 1965-66 :—

1. Sri K. PARTHASARATHY.
2. Sri G. RAJARAM.
3. Sri V. SANKARAN.
4. Sri N. SHANMUGASUNDARAM.
5. Sri C. SRINIVASAN.
6. Sri C. CHIRANJEEVULU NAIDU.
7. Srimathi A. SUARES.
8. Sri M. V. KARIVENGADAM.
9. Sri S. MADHAVAN.
10. Sri P. K. MOOKIAH THEVAR.

Under rule 202 of the said rules, I nominate Sri K. Parthasarathy, Deputy Speaker, to be the Chairman of the Committee.

## III.—GOVERNMENT MOTION.

### ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That this House recommends to the Legislative Counci that they do nominate three Members from the Council to associat with the Committee on Subordinate Legislation of this House fo the financial year 1965-66 and communicate to this House th names of the Members so nominated."

The motion was put and carried.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965–66—*cont.*

DEMAND NO. XIX—CO-OPERATION AND DEMAND NO. XL—CAPITAL OUTLAY ON CONSUMERS' CO-OPERATIVES.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,42,68,900 under Demand No. XIX—Co-operation."

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், இடையீடு இல்லாமல், தொடர்ந்து பல ஆண்டுகள் பதவியிலிருக்க வழிசெய்யும் வகையில் சட்டங்கள் இருப்பதால், ஊழல்கள் பெருக இடமேற்படுகிறது என்பதால் ஒரு முறை தலைவராக வந்தவர், மறுமுறையும் தேர்ந்தெடுக்கப்படுதல் கூடாது, இடையில் ஒரு முறையாவது இடைவெளியிருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்த நான் இந்த 525 என்றுள்ள வெட்டுப் பிரேரணையை முன்மொழிகிறேன்.

"That the allotment of Rs. 2,42,68,900 under Demand No. XIX—Co-operation be reduced by Rs. 100."

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,82,000 under Demand No. XL—Capital Outlay on Consumers' Co-operatives."

SRI V. KRISHNAMOORTHY: Sir, I move—

"That the allotment of Rs. 3,82,000 under Demand No. XL—Capital Outlay on Consumers' Co-operatives be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கூட்டுறவு மானியத்தின் மீது விவாதம் நடைபெறுவதில் முக்கியமான ஒரு அம்சமாக கைத்தறி இருக்கிறது. கைத்தறியைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசலாம். கூட்டுறவைப் பற்றியும் பேசலாம். கனம் அங்கத்தினர்கள் எல்லாவற்றைப் பற்றியும் ஒன்றாகச் சேர்த்துப் பேசுவதற்குப் பதிலாக, கைத்தறியைப்பற்றிப் பேசுவதற்கு 1 மணி நேரம் என்று ஒதுக்கி, எல்லா அங்கத்தினர்களும் அதுபற்றிப்பேசிய பிறகு, தொழில் அமைச்சர் அவர்கள் அதற்கு விடையளிக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்து, பின்பு மற்ற கூட்டுறவு மானியங்களைப்பற்றிப் பேசினால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். இதுபற்றி கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் கலந்தேன். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டார்கள். ஆகவே, அந்த வகையில் இந்த விவாதத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I think the House agrees to the suggestion.

* **திரு. காஞ்சி மணிமொழியார்:** தலைவர் அவர்களே, இந்த கைத்தறித் துறையானது கூட்டுறவுத் துறையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாகத் தொழில் துறையோடு இணைக்கப்படாமல், கூட்டுறவுத் துறையோடு, கைத்தறி, நெசவுத் தொழில் துறைகளை இணைத்திருப்பதற்குக் காரணம், கைத்தறி, நெசவுத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் ஏழைகளாக இருக்கிறார்கள், அவர்கள் நிலை உயரவேண்டும் என்பது தான். உலகத்திலே வாழுகின்ற ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அடிப்படைத் தேவைகளாக இருக்கின்றவை, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், இன்னும் இதரச் செலவுக்குக் கொஞ்சம் பணம். இவைகள்





ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையாக இருக்கின்ற அடிப்படைத் தேவைகளாகும். ஏழை மக்களுக்கு வேண்டியவைகள் கிடைப்பது அவர்களுடைய முயற்சியிலே மிகமிகக் குறைவாக இருக்கக்கூடும். ஆகையால், ஏழைகளாக இருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வை நிமிர்த்துவதற்காக, அவர்களை அடித்தளத்திலிருந்து கொஞ்சம் பொருளாதாரத் துறையிலே உயர்த்துவதற்காக இந்த கைத்தறி நெசவுத் தொழிலைக் கூட்டுறவுத் துறையிலே சேர்த்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். பொதுவாக ஏழைகளைக் கைதூக்கிவிடுவதற்காக, சமுதாயத்தில் ஒரு சமரச நிலையை உண்டாக்குவதற்காக, பொருளாதாரத்திலே மிகவும் முற்பட்டவர்கள், மிகவும் கீழ்ப்பட்டவர்கள் என்ற நிலையைத் தகர்த்து ஒரு சோஷலிச நிலையை கொண்டுவருவதற்காகத்தான் தொடக்கத்திலே இந்தக் கூட்டுறவுத் துறையே ஏற்படுத்தப்பட்டது என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட துறையில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கதாகும். கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமை—இன்றைக்கு அல்ல—பல ஆண்டு காலமாகவே மிகமிகத் தாழ்ந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கைத் தேவைக்கான வசதிகள் எதுவும் கிடைப்பது இல்லை. அவர்கள் குடும்பத்தோடு—ஆண், பெண் குழந்தைகள் அத்தனைபேரும் சேர்ந்து பாடுபட்டாலும் கூட ½ வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வருமானத்தைப் பெற முடிவதில்லை. அடிக்கடி அந்தத் தொழிலுக்கு ஏதாவது இடையூறு, கஷ்டங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு அவர்களைக் கூட்டுறவுத் துறையின் அடிப்படையில் கொண்டு வந்திருப்பதானது சிலகாலமாக நல்ல முறையில் பயன்பட்டு வருகிறது என்பதை உண்மையிலேயே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் ஏற்படுகிற சிறப்பும் முன்னேற்றமும் இந்த நாட்டுக்கே ஏற்படுகிற முன்னேற்றம் என்று என்னால் சொல்லக் கூடும். ஆயினும் நாம் எந்த ஏழைகளின் வாழ்வை நிமிர்த்த வேண்டும், முன்னேற்றம் அடையும்படியாகச் செய்ய வேண்டும் என்பதாக இந்தக் கூட்டுறவுத் துறையை ஏற்படுத்தினோமோ அந்த ஏழைகளின் வாழ்வு முன்னேற்றம் அடைவதற்கு முழு அளவில் பயன்படுகிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டியதாக இருக்கும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால் ஏழைகளாக இருக்கிற மக்கள், வாழ்வில் அடித்தளத்தில் இருக்கிற மக்கள், இன்றையதினம் கூட்டுறவுத் துறை நிர்வாகத்தில் பங்குபெற முடியாமல், ஒரு சிலரே தொடர்ந்து தம் செல்வாக்கினால் இருந்து வருகிறார்கள் என்பதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். கைத்தறி நெசவாளர் சங்கங்களை இன்றையதினம் எடுத்துக் கொண்டால் நூற்றுக்கு 95 சங்கங்கள் ஒரு சிலர் கையிலேயே மாற்ற முடியாத வகையில் இருந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியும். மாநில கூட்டுறவு சங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; பதினைந்து ஆண்டு காலமாக ஒரு சிலரின் கையிலேயே இருப்பானேன்? அப்படி இருப்பதனால் தான் ஒரு சில இடங்களில் ஊழல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு பதில் சொல்கிறபோது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்—"ஊழல் மிகமிகக் குறைவு; நமது ராஜ்யத்தில் பதினாயிரக்கணக்கான சங்கங்கள் இருக்கின்றன; இருந்தும் 120 இடங்களில் தான் ஊழல் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறது" என்று சொன்னார்கள். ஏன் இந்த அளவு கூட இருக்க வேண்டும்? இது 60 ஆண்டு காலத்திற்கு முன்னால் தொடங்கப்பட்ட இயக்கம். கடந்த 60 ஆண்டு காலமாக இதன் மூலம் நல்ல பயிற்சியும், அனுபவமும் பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். இன்னமும் கூட்டுறவுத் துறையில் ஊழல் இருக்கிறது என்று சொன்னால் அது இந்த அரசுக்குப் பெருமைதரத்தக்கது அல்ல என்று சொல்ல விரும்புகிறேன். ஒரு சிறு ஊழல் கூட இந்தச் சங்கங்களிலே இருக்கக் கூடாது என்றால் அரசாங்கம் நடைமுறை விதிகளை மாற்றி அமைக்க வேண்டும். கண்டு பிடிக்கப்பட்ட இடங்கள் 120 இருக்கலாம். அநேகமாக எல்லா இடங்களிலும் ஊழல் மலிந்து இருக்கிறது. இதற்குக் காரணமே ஒரு சிலர் இவற்றில் பல ஆண்டுகாலமாகவே மொனொபொலி செய்துகொண்டிருப்பதுதான்—பரம்பரைச் சொத்தாக ஆக்கிக் கொண்டிருப்பதுதான்.

[திரு. காஞ்சி மணிமொழியார்] [24th March 1965

நெடுங்காலமாக ஒரு சிலரே இருந்து கொண்டிருப்பதனால் காரணமாக பல தவறுகளை அவர்களால் செய்ய முடிகிறது. அவை வெளிப்படாமல் மூடி மறைக்கவும் முடிகிறது. கூட்டுறவுத் துறையில் ஊழல்களே இல்லாதவாறு—ஏற்படாதவாறு—தடுக்கவேண்டுமானால் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு யாரும் தொடர்ந்து அதன் நிர்வாகத்தில் இருக்க அனுமதிக்கக் கூடாது. பச்சையப்பன் கல்லூரி டிரஸ்டில், ஹைகோர்ட்டார் 2 தடவைகளுக்கு மேல் தொடர்ந்து இருக்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருப்பதற்குக் காரணம் என்ன? பலமுறை ஒருவரே தொடர்ந்து இருக்கச் செய்தால் அவர்கள் ஊழல்களை பலவற்றைச் செய்வதற்கும், அதை மூடி மறைத்துவிடுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிறது என்பதுதான். கணக்கு தணிக்கை முறை இருக்கிறது என்று சொல்லலாம். ஒரு ஆண்டு முடிந்தவுடன் மூன்று நான்கு மாதங்களுக்குள் கணக்கு தணிக்கை செய்யப்படவேண்டும் என்கிற நிலை கிடையாது. அடுத்த ஆண்டு இறுதி வரை, தணிக்கை நடக்கிறவரை ஊழல்களைக் கண்டுபிடிக்கக்கூட முடியாது போகிறது. ஆகவே தொடர்ந்து ஒருவரே பதவி வகிக்க முடியாதவாறும், அந்த அந்த ஆண்டு மூன்று, நான்கு மாதங்களுக்கொருமுறை தணிக்கையை முடிக்குமாறும் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதுவும் குறிப்பாக கூட்டுறவுத் துறையில் ஒரே ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களுடைய ஆதிக்கம் இருக்கும்படியாகச் செய்யக் கூடாது. பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இருப்பார்களானால்—எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக வேண்டுமானாலும் இருக்கட்டும்—அப்பொழுதுக்கப்போது நிர்வாகத்தில் ஏற்படும் குறைபாடுகளை எடுத்துக்காட்டு களைவதற்கு முடியும். ஒரு ஆண்டுக்கு முன்னே என்று கருதுகிறேன், நமது தேசத்தில் அமைச்சர் அவர்கள் ஓரிடத்தில் பேசுகின்றபோது இந்தக் கூட்டுறவுத் துறையில் கட்சிக்கண்ணோட்டம் கிடையாது 'Politics had no place in the Co-operative movements' என்று சொல்லியிருக்கிறார். அதேபோன்று கட்சிக் கண்ணோட்டம், ஒரு கட்சியின் ஆதிக்கம், இல்லாதவாறு செய்ய வேண்டும். எந்தத் துணியை மக்கள் விரும்புகிறார்கள், எந்த ரகத் துணியை உற்பத்தி செய்யவேண்டும் என்பதை சங்கத்தவர்களே தங்கள் அனுபவத்தைக் கொண்டு தீர்மானம் செய்து கொள்வார்கள். இதில் அரசாங்கத் தலையீடு இருக்கக் கூடாது. குறிப்பாக ஒரு ரகத் துணியை—அதில் கறுப்பும், சிவப்பும் கலந்த கரை போட்டிருக்கிற காரணத்தினால்—கட்சிக்கண்ணோட்டத்தோடு, அந்த ரகத் துணியை உற்பத்தி செய்யக் கூடாது என்று அரசாங்கமே உத்தரவு போட்டது. அதன் காரணமாக அந்தத் துணி உற்பத்தி செய்யப்படாமல் நிறுத்தப்பட்டதா என்றால் இல்லை. வெளியில் உள்ளவர்கள் உற்பத்தி செய்தார்கள். அதிக வியாபாரமும் ஆகிறது: இப்படி சர்க்கார் தலையிடாது, எந்தத் துணியை எந்தக் காலத்தில் எப்படி நெய்தால் அதிகச் செலவாகும் என்பது தெரிந்து நெய்வதற்கு நெசவாளர் சங்கங்களுக்கே உரிமை கொடுக்கப்படவேண்டும். கிராமங்கள் அனைத்தும் கூட்டுறவுத் துறையில் கொண்டுவரப்பட்டுவிட்டன. என்றாலும் நெசவாளர்களுடைய நிலைமை கஷ்டமான நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில் ஆறு, ஏழு லட்சம் தறிகள் இருக்கின்றன; இவை 25 லட்சம் மக்களுக்கு வாய்ப்புத் தந்து கொண்டிருக்கின்றன. அகில இந்தியாவிலும் மொத்தமாகப் பார்ப்போமானால் இன்றையதினம் கனரகத் தொழில்கள் மூலம் 30 லட்சம் மக்கள்தான் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். அதிலும் நெசவு ஆலைகள் மூலமாக மட்டும் பத்து லட்சம் மக்களே வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கைத்தறிகள் அகில இந்தியாவில் 75 லட்சம் மக்களுக்கு வாய்ப்பு அளித்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தொழில் கிராமங்களிலும் செய்யப்படுகிறது, நகரங்களிலும் செய்யப்படுகிறது. இதனால் வாய்ப்புப் பெறுகிறவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் விவசாயத்தைப் போல கைத்தறி நெசவுத் தொழிலும் உதவி புரிந்து வருகிறது.

**திரு. டி. கதம்பவனசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு மானியத்திலே கைத்தறி மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரிந்த விஷயம். ஆகவே,



24th March 1965] [திரு. டி. கதம்பவனசுந்தரம்]

தனியாக இதைப் பற்றிப் பேசுவது மிகவும் பொருத்தமானது என்று நினைக்கிறேன். கைத்தறி நெசவாளர்கள் எப்போதுமே நிரந்தர வருமானம் இல்லாமல் கஷ்டப்படுகிறவர்கள். வருஷத்தில் பாதி நாட்கள் அவர்களுடைய தொழில் சிறப்பாக நடைபெறும்; பாதி நாட்கள் சிறப்பாக நடப்பதில்லை. ஆகவே, சர்க்கார் கூட்டுறவுத் துறையிலே இந்தக் கைத்தறியைச் சேர்த்துக் கொண்டு கைத்தறித் தொழிலுக்குக் கஷ்டங்கள் ஏற்படும் சமயத்தில் எல்லாம் கழிவுத் தொகை என்ற முறையில் உதவி செய்து அந்தத் தொழிலுக்கு ஒரு பாதுகாப்பு அளித்து வந்திருக்கிறார்கள். அந்த வகையில் கூட்டுறவு நெசவாளர் சொஸைட்டிகளில் உற்பத்தி செய்யக் கூடிய கைத்தறி பருத்தித் துணிகளுக்கு மட்டும் சர்க்கார் ரிபேட் கொடுக்கிறார்கள். எங்கள் பகுதியில்—மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில்—அதிகமாகச் செயற்கைப்பட்டு ரகங்கள் உற்பத்தி செய்வதை நாம் பார்க்கிறோம். கூட்டுறவு சொஸைட்டிகளில் கூட அம்மாதிரி உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் அவை விற்கப்படும்போது அவற்றுக்குக் கழிவுத் தொகை வழங்குவதில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யக்கூடிய செயற்கைப் பட்டு ரகங்களுக்குக் கூட கழிவுத் தொகை வழங்காமல் இருப்பது அந்த சொஸைட்டிகளில் செயற்கைப் பட்டு நெய்யக்கூடிய தறிக்காரர்களுக்குத் தடையாக இருக்கிறது. சொஸைட்டி நிர்வாகிகள், சர்க்கார் எந்த ரகங்களுக்கு ரிபேட் கொடுக்கிறார்களோ அந்த ரகங்களை உற்பத்தி செய்யத்தான் விருப்பம் கொள்கிறார்கள். இப்போதெல்லாம் செயற்கைப் பட்டு ரகங்கள் நெய்யக்கூடியவர்களுக்கு அதிகப்படியாகக் கூலி கொடுக்கிறார்கள். அதன் காரணமாக சொஸைட்டியில் நெய்யக்கூடிய தறிக்காரர்கள் செயற்கைப்பட்டு நெய்ய ஆசைப்படுகிறார்கள். அவர்கள் சொஸைட்டிகளில் அங்கத்தினர்களாக இருந்தாலும் கூட, தனிப்பட்ட மாஸ்டர்களிடம் செயற்கைப் பட்டு நெய்யப் போய்விடுகிறார்கள். இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தயவு செய்து இதைப் பற்றி ஆலோசனை செய்து கூட்டுறவுச் சங்கங்களில் தயாரிக்கப்படுகிற செயற்கைப் பட்டு ரகங்களுக்கும், விற்கப்படும்போது பருத்தி ரகங்களைப் போன்றே ரிபேட் கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, கைத்தறித் துணிகள் இப்போது அதிகமாகச் செலவழிவதில்லை. ஆலைத் துணிகளைப் போல் அவை சிறப்பாக, முறமுறப்பாக இருப்பதில்லை என்ற காரணத்தால் கைத்தறித் துணிகள் அதிகமாகச் செலவாவது இல்லை. பல வருஷங்களுக்கு முன்பு கூட, இங்கே ஒரு ரிசர்ச் யூனிட் ஒன்றை ஏற்படுத்தி, கைத்தறித் துணிகளையும், ஆலைத் துணிகளைப் போன்று "மெர்சிடைஸ்" செய்வதற்கோ, ஆலைத் துணிகளைப் போன்று "சான்பரைஸ்டு" செய்வதற்கோ வழி இருக்கிறதா என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்கு ஒரு குழுவை அமைக்கவேண்டுமென்று ஆலோசனை சொல்லப்பட்டது. உண்மையில், அப்படிப்பட்ட ஒரு ஆலோசனைக் குழு ஏற்பாடு செய்யப்பட்டு அதைப் பற்றி ஆலோசனை செய்தால் மிகவும் நலமாக இருக்கும். ஜனங்கள் விரும்பக்கூடிய அளவுக்கு கைத்தறித் துணிகளின் தரம் உயரவும் வழிவகை செய்ய முடியும் என்பதை இந்தச் சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு கூட கூட்டுறவில் சேராத நெசவாளர்களுடைய நன்மையைப் பாதுகாக்கும் வகைக்கான கருத்துக்கள் பல தடவை இதே மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கத்தில் சேராத நெசவாளர்களுக்காக, அவர்களுடைய நன்மைக்காக நிதிக் கார்ப்பரேஷன் ஏற்படுத்த வேண்டுமென்று பல தடவை கூறப்பட்டது. அது சமீபத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. இன்னும் அது செயல்பட ஆரம்பிக்கவில்லை. சீக்கிரம் மத்திய சர்க்காருடைய உதவி இல்லாமலேயே, மாநில சர்க்காருடைய முழு ஆதரவோடு, நிறுவப்பட்டு அதைச் சிறந்த முறையில் கூட்டுறவில் சேராத நெசவாளர்களுக்குப் பயன்படும் முறையில் செயல்படுத்துவதற்காக காரியங்களைத் துரிதப்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சாதாரணமாக, நெசவாளர்களுக்குக் கஷ்டங்கள் வரும்போதெல்லாம் அரசாங்கத்தினுடைய உதவியை நாடி வந்திருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே சேலத்திலும், அருப்புக்கோட்டையிலும்

[திரு. டி. கதம்பவனசுந்தரம்] [24th March 1965

நெசவாளர்களுக்காக 200 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. சுமார் 3,600 ரூபாய் அளவிலே அந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டது. அதிலே கடனுக்குக் கொடுக்கப்பட்ட தொகைக்கு வாங்கக்கூடிய வட்டி அதிகமாக இருக்கிறது என்று நெசவாளர்கள் சொல்கிறார்கள். அதே சமயத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்கள் கொடுத்த முதலீட்டுக்காக அசலும் வட்டியும் சேர்த்து வாங்கிக் கொள்கிறார்கள். ஆக, அவர்களுடைய வருமானத்திலே நாலில் ஒரு பகுதி இந்த வீட்டுக் கடனுக்காகவும், சொசைட்டி கொடுத்த கடனுக்காகவும் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த விஷயத்திலே இன்னும் கொஞ்சம் சர்க்கார் கவனம் செலுத்தி நெசவாளர்கள் அதிகக் கஷ்டம் இல்லாமல் அவர்களுடைய கடனை அடைப்பதற்கு வழிவகை செய்யும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். எந்தெந்த வகையிலே சலுகை கொடுக்க முடியுமோ அவற்றையெல்லாம் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பல சந்தர்ப்பங்களில் தொழில் அமைச்சர் அவர்கள் கூட்டுறவுக் காலனிகளுக்கு விஜயம் செய்யும்போது, "நெசவாளர்களுக்குப் பவர் லூம்ஸ் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொடுக்கவேண்டும்; அதன் மூலம் அவர்கள் அதிக வருமானம் பெற்றுத் தங்கள் கடனை சீக்கிரமாக அடைக்க முடியும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பவர் லூம்ஸ் நெசவாளர்களுக்குக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு மானியத்திலே மிகவும் முக்கிய அங்கம் வகிக்கிற கைத்தறியைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கைத்தறித் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தது நமது சர்க்கார். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அதற்குப் பலவகையான சலுகைகளை அளித்து இன்றைக்குக் கைத்தறித் தொழில் இவ்வளவு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் இந்தத் திட்டங்களிலே செலவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஊக்கம் அளித்ததுதான் என்பதைப் பெருமையாக நாம் சொல்ல முடியும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறிக்காக 800 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, கடந்த நான்கு ஆண்டுகளில் 601·90 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு, 1965–66-ம் வருஷத்தில் 143·43 லட்சம் செலவு செய்யப்பட இருக்கிறது.

கைத்தறித் தொழிலிலே இரண்டு பிரிவு இருக்கிறது. ஒன்று, கூட்டுறவில் சேர்ந்திருக்கும் நெசவாளர்கள்; இரண்டாவது கூட்டுறவில் சேராத நெசவாளர்கள். இரண்டு பிரிவிலேயும் இன்று நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். ஆனால், இன்றைய சூழ்நிலையில் மெல்லிய ரகத் துணிகளிலே தேக்கம் மிகவும் ஏற்பட்டிருக்கிறது. மதுரை, இராமநாதபுரம், பரமக்குடி போன்ற பகுதிகளில் நெசவு செய்யப்படுகிற அந்தத் துணிகளிலே மிக மிகத் தேக்கம் ஏற்பட்டு அந்தத் தொழிலாளர்களுக்குத் "தொழில் கிடைக்கக் கூட வசதி இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஸ்டேட் சொசைட்டியிலும் தேக்கம் இருக்கிறது. 1,65,00,000 லட்சம் ரூபாய் துணிகள் தேங்கி இருப்பதாகத் தெரிய வருகிறது. அவர்கள் ஏப்ரல் மாதத்தில் நடைபெறப்போகிற கைத்தறிப் பொருட்காட்சியைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் துணிகள் விற்பனையாகும் என்று சொல்லப்படுகிறது. மதுரை, பரமக்குடி போன்ற இடங்களில் மெல்லிய துணிகள் நெசவு செய்கிற கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் தொழில் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களிடம் போதிய மூலதனம் இல்லாமல் இருக்கிறது. ஸ்டேட் சொசைட்டியில் இருந்து வாங்கிய துணிகளுக்கும் இன்னும் பணம் அனுப்பவில்லை. மேற்கொண்டு தொழிலாளர்களுக்குத் தொழில் கொடுக்கமுடியவில்லை. அதற்காக பாங்கிடம் எஸ்.டி. லோன்—குறுகிய காலக் கடன்—கேட்டிருக்கிறார்கள். அந்தக் கடனைக் கொடுப்பதி



24th March 1965] [திருமதி. பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்]

லேயும் அவர்கள் மிகக் காலதாமதம் செய்கிறார்கள். குறுகிய காலக் கடன்கள் வேண்டுமென்று மனுச் செய்து இரண்டு மாதங்கள் ஆகியும் கூட, அந்தக் கடன்கள் கொடுக்க வேண்டியது அவசியந்தானா என்பதைப் பற்றிக் கூடக் கவனிக்காமல் அப்படியே பேப்பர்கள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. எனவே மேற்கொண்டு தொழில் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் மதுரையில் நானும் கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்களும் சேர்ந்து ஒரு குழுவாகச் சேர்ந்து டி. ஆர். இடம் சென்று முறையிட்டோம். கூட்டுறவில் மேலும் மேலும் தொழிலாளர்களைச் சேர்க்கவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கும்போது கூட்டுறவில் உள்ள தொழிலாளர்களுக்கு மேலும் வேலை கிடைக்காத காரணத்தினால் அவர்கள் மாஸ்டர் வீவர்களிடம் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு சங்கத்திலும் தேங்கிக் கிடக்கிற துணிகளை செக்யூரிடியாக வைத்துக் கொண்டு கடன் கொடுக்க வேண்டுமென்று பலமுறை சொல்லியும் கூட பல நாட்களாக அது கவனிக்கப்படாமலே இருந்து வந்திருக்கிறது. இன்று கூட, அவர்களுக்கு கடன் கிடைத்ததா என்பது பற்றி தகவல் எனக்கு கிடையாது. ஆகவே இம்மாதிரி மூலதனம் இல்லாது கஷ்டம் ஏற்படுகிறபோது அவசியமாக ஸ்பெஷல் கடன் கொடுத்தாவது மேலும் மேலும் தொழில் கொடுப்பதற்கான ஒரு உத்தரவாதத்தை சர்க்கார் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாதாரணமாக மூலதனக் கடன் கொடுக்கும்போது ஒரு தறிக்கு 500 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. அந்த 500 ரூபாயும் எல்லா சங்கங்களுக்கும் கிடைப்பதில்லை. 300, 400 என்று தான் கொடுக்கிறார்கள். ஆகவே இம்மாதிரி தேக்கம் ஏற்படும் காலத்தில் பணம் போதாது இருப்பதால் தறிக்கு 500 ரூபாய் என்று இருப்பதை 1,000 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அப்படிக் கொடுப்பதற்கு முடியவில்லை என்று சொன்னால் பங்குத் தொகையின் பேரில் எட்டு மடங்கு என்றாவது கொடுக்கவேண்டும். ஏனெனில் தறி அடிப்படையில் கடன் கொடுக்கும்போது தறிகள் குறைந்து விட்டால், வேலை செய்கிற தொழிலாளர்கள் வேலை கிடைக்காத காரணத்தால் மாஸ்டர் வீவர்களிடம் சென்று விட்டால் தறிகள் குறைந்து விடுகின்றன. அப்படி தறி விகிதத்தில் கொடுக்கப்படுகிற கடன் போதாமல் இருக்கிறது. ஆகவே பங்குத் தொகையின் பேரில் 8 மடங்கு கடன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ராஜ்ய கூட்டுறவு சொஸைட்டியில் ஜவுளித் தேக்கம் அதிகமாக இருக்கிறது என்பதற்கு பணம் கொடுக்க முடியவில்லை என்றால் பல காரணங்கள் சொல்லலாம். பிரதம சங்கங்களுக்கு வாங்கிய துணிகளுக்கு ஒன்று நம் ஸ்டேட் சொஸைட்டிக்கு வருமான வரி விதித்திருக்கிறார்கள் என்றும். 6 லட்சம் ரூபாய் வருமான வரிக்காக கொடுக்க வேண்டியிருப்பதால் பணம் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்றும் அறிகிறேன். ஆகவே ஸ்டேட் சொஸைட்டியில் விற்கப்படுகிற கைத்தறித் துணிகளுக்கு வருமான வரி விதிக்கக் கூடாது என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். கைத்தறிக்கு பல ஆண்டுகளாக நாம் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தாலும் காலம் மாறிக் கொண்டிருக்கிறது. மில்களில் உற்பத்தியாகும் புது புது மோஸ்தர் துணிகளெல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளில் மோகம் பெறுகிறார்கள் பெண்மணிகள். ஆகவே கைத்தறி துணி விற்பனையில் சுணக்கம் ஏற்படுகிறது. ஆகவே கைத்தறிக்கு என்று ஒரு சில ரகங்களை ஒதுக்கவில்லை என்று சொன்னால் வருங்காலத்தில் கைத்தறியை நம்பியிருக்கின்ற தொழிலாளிகள் மிக மிக கஷ்டப்படுவார்கள் என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே கைத்தறிக்கு என்று கலர் சேலைகளும், கரை போட்ட சேலைகளும் ஒதுக்கப்படவேண்டும். அதோடு கரை போட்ட வேஷ்டியும் கைத்தறிக்கு என்று ஒதுக்கினால் ஒருவாறு நிலைமையைச் சமாளிக்க முடியுமென்று நான் கருதுகிறேன். கூட்டுறவு சங்கங்களுக்கு வீடு கட்டும் திட்டம் எமெர்ஜன்ஸிக்காக நிறுத்திவைக்கப்பட்டது. இப்போது இந்தத் திட்டம் மறுபடியும் செயல்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இப்போது அளிக்கப்படுகிற இந்த வீடு கட்டும் திட்டத்திற்கு மான்யம் கொடுக்கப்படமாட்டாது என்று கனம்

அமைச்சர் அவர்கள் என்னிடத்தில் கூறினார்கள். அது மிகவும் வருந்தத் தக்கது. எப்படியாவது கனம் அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லி, நெசவாளர்களுக்குள்ள கஷ்டங்களை அவர்களிடம் எடுத்துக்கூறி, மானியம் கொடுக்கவேண்டும் என்று சிபாரிசு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே வீடு கட்டிக்கொடுத்திருக்கிற சங்கங்களுக்கு கொடுத்திருக்கிற கடன்களுக்கு 2 சத விகிதம் வட்டி போட் டிருக்கிறார்கள். செஸ் நிதியிலிருந்து ஒரு சத விகித வட்டி அளிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரைக்கும் கொடுக்கவில்லை. ஆகவே அதை அளிக்கவேண்டுமென்று வற்புறுத்தி யாவது சொல்லவேண்டும். இல்லை என்றால் நம் அரசாங்கமே அந்த நிதிய வட்டியைக் கொடுத்து அந்த வட்டியிலிருந்து நெசவாளர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாஸ்டர் வீவர்கள் உற்பத்தி செய்கிற துணிகளுக்குத்தான் இப்பொழுது தேக்கம் அதிகமாக இருக்கிறது. முன்பெல்லாம் மாஸ்டர்களிடம் துணி தேக்கம் அதிகமாக இருந்தது. ஆனால் சங்கம் [illegible] துணிகள் இப்பொழுது மாஸ்டர் வீவர்களிடம் தேங்கிக் கிடக்கிறது. அதனால் அவர்களும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர் களுடைய துணிகளை விற்பதற்கான ஒரு வசதியையும் செய்துதரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரையில் மாஸ்டர் வீவர்கள் கொண்ட ஒரு மார்க்கெட்டிங் சொஸைட்டி இருக்கிறது. அந்த சொஸைட்டியில் இருந்து துணிகள் அனுப்பினார்கள் என்று சொன்னால் கூட்டுறவு முறையில் அது சேரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே ஒன்று துணிகளை எடுத்துக்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் ஹாண்ட்லூம் ஹௌஸ், எம்போரியம் போன்றவை அந்தத் துணிகளை எடுக்க விரும்பினால் அத் துணிகளை வாங்கிக்கொள்ள அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களுக்கு தொழிலுக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இதுவரை கிடையாது. ஆகவே அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய முறையில், இன்னும் கூட்டுறவு சங்கங்கள் மேலும் மேலும் வளர, நல்லமுறையில் அவர்களுக்கு கடன் வசதி செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக ஒரு வார்த்தை. சிறு சிறு கூட்டுறவு சங்கங்கள்—அவர்கள் அப்பாவிகள், சட்டம் முதலியவைகள் தெரியாதவர்கள்.—ஆகவே ஏதாவது குறைகள் ஏற்பட்டுவிட்டால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு அவைகளை மூடும்படியான நிலைக்கு [illegible] கொண்டுவந்து விடுகிறார்கள். ஆகவே கூட்டுறவு சீனியர் இன்ஸ்பெக்டர்களை போட்டு அவர்களை அதற்கு பொறுப்பாக்கி, சட்ட ஆலோசகர்களாக அவர்களை ஏற்படுத்தி அன்றாட நடவடிக்கைகளில் அவர்களும் பங்குகொள்வதற்கான வகையில் சட்டத்தை திருத்தியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு இயக்கம் உண்மையிலே ஒரு மகத்தான இயக்கம். அந்த இயக்கத்தைப் பொறுத்தவரையில் ஓரளவு முன்னேற்றம் இருந்தபோதிலும் கூட அந்த முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக கூட்டுறவு இயக்கத்திற்குள்ளே ஒரு சிலர் புகுந்துகொண்டு செய்கிற காரியங்கள் அந்த இயக்கத்தை நாசமாக்கி விடுகிறது. கைத்தறியானாலும் சரி, மீதி கூட்டுறவு இயக்கங்களானாலும் சரி அதற்குள்ளே சில புல்லுருவிகள் எப்படியாவது புகுந்துகொண்டு, விடுகிறார்கள். சமூகத்தில் யார் எல்லாம் தவறு செய்கிறார் களோ அவர்களில் பெருவாரியானவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் புகுந்து கொள்கிறார்கள். அதேபோல் கைத்தறி சம்பந்தப்பட்ட கூட்டுறவு இயக்கத்திலும் பல பேர்கள் புகுந்திருக்கிறார்கள். அதுவும் ஆளும் கட்சியைப் பயன்படுத்திக்கொண்டு எப்படி பாதுகாப்பு பெறமுடியுமோ அந்தப் பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் ஆதாரங்களோடு கூற முடியும். குறிப்பாக சேலம் ஜில்லாவில் பொன்னம்மாபேட்டை கூட்டுறவு சங்கம் என்று ஒன்றிருக்கிறது. அங்கு சுமார் 15,000 ரூபாய் வரை கையாடியிருப்பதாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரித்து, கூறப்படுகிறது. 1963 ஆகஸ்ட் 17-ல் என் ஒரு கேள்விக்கு பதில் கூறும்போது தகுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறினார்கள். 1964-ல் கூட ஒரு கேள்வி போட்டபோது, ஏன் இவ்வளவு தயவு தாட்சண்யம் காட்டவேண்டும், என்று கேட்டேன்.





காங்கிரஸ்காரர்கள் என்ற பெயரில் இந்தக் காரியத்தை செய்துகொண்டி ருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள்கூட நடவடிக்கைகள் எடுக்கத் தயங்குகிறார்கள். அது மட்டும் அல்ல. அமைச்சர் அவர்களும், சர்க்கார் அதிகாரிகளும் தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏன் தயவு தாட்சண்யம் காட்டப்படுகிறது என்று புரியவில்லை. இதுபோன்ற ஐந்தாறு புல்லுருவிகள் ஒரு ஜில்லாவில் சேர்ந்துவிட்டால் இந்த இயக்கம் நாசமாக, வேறு ஒன்றும் தேவையில்லை. அம்மாபேட்டை கூட்டுறவு சங்கம் சிறப்பான கூட்டுறவு சங்கமாக இருக்கிறது. அதன் தலைமையில் செய்துகொண்டிருக்கும் காரியங்கள் உண்மையிலேயே பயங்கரமாக இருக்கிறது. முதலாளிகள்கூட அம்மாதிரிச் செய்வார்களா என்று தோன்றுகிறது. அங்குள்ள, கூட்டுறவுத் துறையில் உள்ள, ஊழியர்களை நேராக அடிப்பது, ஆள் வைத்து அடிப்பது போன்ற காரியங்கள் செய்யப்படுகிறது. அவர்கள்மீது விசாரணை போட முயற்சித்தால் அங்கு நடக்கிற பெரியதொரு திருட்டைக் கண்டுபிடிக்க முடியும். என்னால் நிச்சயமாக சொல்லமுடியும். அதற்கு பொறுப் பேற்றுக்கொள்ளக்கூட தயாராக இருக்கிறேன். ஆனால் விசாரணை மிகச் சீக்கிரமாக விரைவாக இருக்கவேண்டும். அவர் சாதாரண ஆள் அல்ல, என்பதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். யார் என்று குறிப்பிட நான் விரும்பவில்லை. சேலம் ஜில்லாவில் பெரிய சங்கம் அது. பெயரும் புகழும் உள்ள, சமூகத்தின்முன்பு நன்கு தெரிந்தவர். பாதிக்கப்பட்ட பல ஊழியர்கள் நோட்டீஸ் போட்டு சர்க்காருக்கு அனுப்புகிறார்கள், எங்களுக்கு அனுப்புகிறார்கள். திருப்பித் திருப்பி அங்குள்ள ஊழல் களைப் பற்றி சொல்லிக்கொண்டிருக்கிறேன். யாராக இருந்தாலும் சரி, கூட்டுறவுத் துறையிலானாலும் சரி, விவசாயத் துறையிலானாலும் சரி, நெசவுத் துறையிலானாலும் சரி இதுபோன்ற புல்லுருவிகள் எங்கிருந் தாலும் அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்க தயக்கம் காட்டக்கூடாது. சமீபத்தில் ஒரு ஜட்ஜ்மெண்ட் வந்தது. அதற்குள் போகவில்லை. அதில், 'குற்றவாளிகளே சாட்சிகளாக வந்திருக்கிறார்கள். ஆகவே தண்டிக்க முடிய வில்லை சம்பந்தப்பட்டவர்களை, என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுபோன்று இருக்கக்கூடாது. கூட்டுறவு இயக்கத்தை நாம் காப்பாற்ற வேண்டுமென்றால் இது போன்றவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்க முழு முயற்சியும் எடுத்துக்கொள்ள வேண்டும். பொன்னம்மாபேட்டை சொஸைட்டி, அம்மாபேட்டை சொஸைட்டி பேரில் தக்க நடவடிக்கைகள் எடுத்து அதன்மூலம் சேலம் ஜில்லாவில், தமிழ்நாட்டில், கூட்டுறவு இயக்கம் நல்லமுறையில் எதிர்காலத்தில் இயங்கச்செய்ய வேண்டும். அப்படி தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதில்தான் அந்த இயக்கத்திற்கு எதிர்காலம் இருக்கிறது என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எஸ். ஜே. ராமசாமி:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, எனது கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் அவர்கள் கொடுத் திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். எகிப்து நாட்டில் கிளியோபாட்ரா எப்படி தமிழ் நாட்டின் முத்துக்களை வாரிக் கொண்டுபோய் அவர்களுடைய நாகரீகத்தை பெருக்கிக்கொள்வதற்காக விரும்பி அணிந்தார்களோ, அதைப்போலவே காஞ்சிபுரத்திலுள்ள பட்டுச் சேலைகள் உலகத்திலுள்ள சேலைகளை எல்லாம் விட விரும்பி அணியக்கூடிய வகையில் கவர்ச்சியாக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட பட்டுச் சேலைகளுக்கு சர்க்கார் போதிய அளவு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துவருகிறதா என்று பார்த்தால் கொடுக்கப்படும் உதவி போதிய அளவில் இல்லை என்று சொல்லலாம். சமீபத்தில் விமான உபசரணிகள்கூட அணிந்துகொள்வதற்கு இந்த பட்டுச் சேலைகள் சிறந்த தாக இருக்கிறது என்று வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இதற்கு போதுமான அளவு ஆக்கமும் ஊக்கமும் தருவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக பட்டு சரிகை வாங்குவதற்கு நம் மாநிலத்தி லிருந்து டைரக்டர் அவர்கள் ஹாதியாணா போன்ற வடக்கே இருக்கக்கூடிய இடங்களுக்குச் சென்று வருகிறார்கள். அங்கே போய் [illegible]

சரிகை இவைகளை 40 லட்சம், 50 லட்சம் ரூபாய்களுக்கு வாங்கியிருக்கிறார்கள். இவ்விதம் வாங்கப்படும் பட்டுச் சரிகை நல்ல சரிகையாக இருக்கிறதா என்று பார்த்தால் வெறும் "ஹேம்பக்" காகத்தான் இருக்கிறது. உதவாக்கரையாக இருக்கக்கூடிய சரிகைகளைத்தான் அங்கேயுள்ளவர்கள் இவர்கள் தலையில் கட்டிவிடுகிறார்கள். அதை இங்கேயிருக்கின்ற சாதாரண நெசவாளர்களின் தலையில் கட்டிவிடக்கூடிய நிலைதான் இப்போது இருந்து கொண்டிருக்கிறது என்று எனக்கு தகவல் இருக்கிறது. இதை உதாசீனம் செய்துவிடுவதற்கில்லை. மோசமான சரிகைகளை அங்கேயுள்ள மில்காரர்கள் இங்கேயிருந்து போகின்றவர்களிடம் கட்டிவிடுகிறார்கள். அதைத்தான் நாம் இங்குள்ள சொஸைட்டிகளின் மூலம் வாங்கவேண்டியிருக்கிறது. பட்டுச் சேலைகளை விரும்புகின்ற இந்த நேரத்தில் இம்மாதிரி மட்டமான சரிகைகளை நமது தலையில் கட்டினால் எப்படி நாம் உலக மார்க்கெட்டை பிடிக்க முடியும் என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கொடுக்கப்படுகிற நூல் ரகங்களுக்கும், நெய்யப்படுகின்ற ரகங்களுக்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லை. நூல் விலை அதிகமாக ஏறிக்கொண்டேயிருக்கிறது. இதே நேரத்தில் இதற்காக காட்டப்படும் சலுகை மிகக் குறைவு. கதர் துணிக்காக காட்டப்படும் சலுகை பட்டுச் சேலைகளுக்கு கொடுக்கப்படுவதில்லை. ரிபேட் கொடுக்கின்ற விஷயத்தில் பொங்கலுக்கு மட்டும் கொடுக்கிறார்கள். அன்றோடு பட்டுச்சேலை விற்பனைகள் நின்றுவிடுவதில்லை. மாட்டுப் பொங்கல், அதற்கு பிறகு பல நாட்கள், இந்த நாட்களில் எல்லாம் பட்டுச் சேலைகள் விற்பனையாகின்றன. இந்த நாட்களுக்கு ரிபேட் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே ஒரு மாசம் அளவுக்காவது ரிபேட் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பக்கத்திலிருந்து நூல் வாங்குவதற்காக சென்னைக்கு வருகிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கிருந்து நூல் வாங்குவதற்காக சென்னையிலுள்ள சொஸைட்டிக்கு வருகிறார்கள். அங்கே அவர்களுக்கு தேவையானது 60—40 நம்பர் நூல். ஆனால் அவர்கள் கேட்கும் நூல் இங்கே சொஸைட்டியில் கொடுக்கப்படுவதில்லை. அப்பேர்ப்பட்ட நூல் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள்? உண்மையில் என்ன தேவையோ அந்த நூலை கொடுப்பது கிடையாது. அதிலும் இன்னும் சொல்லப்போனால் சென்னையிலுள்ள சொஸைட்டி இந்த வழியில்தான் சென்றுகொண்டிருக்கிறது. தேவையுள்ள நேரத்தில் நூல் கொடுப்பது கிடையாது. ஏதாவது ஒரு தரம் அற்ற நூலை வைத்துக்கொண்டு, இதை வேண்டுமானால் எடுத்துக்கொண்டு போங்கள், இல்லையானால் போங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் வெளியே 10 ரூபாய், 15 ரூபாய் கூடுதலாகக் கொடுத்து நூலை வாங்கிக்கொண்டு வருகிறார்கள். இந்தக் குறையை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேவிகாபுரம், கலசபாக்கம் போன்ற இடங்களில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, எனக்கு முன்னால் பேசிய கனம் நல்லசிவம் அவர்கள் சொன்னது போல், என்னிடத்திலும் சில புகார்கள் இருக்கின்றன. பாந்தியன் ரோட்டிலுள்ள வீவர்ஸ் சொஸைட்டியைப் பற்றியும் எவ்வளவோ தகவல்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்துபார்க்க வேண்டும். ஒரு சிலர் மட்டுமே எப்போதும் ஆதிக்கம் செலுத்திக்கொண்டு மற்றவர்களை வெளியேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாக எனக்கு தகவல் வந்துகொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் கூட்டுறவுத்துறை மானியங்களை வரவேற்கிறேன். குறிப்பாகக் கடந்த 10 ஆண்டு கால



முடிவிற்குள் கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்ட சிரமங்கள் முற்றிலும் போக்கக்கூடிய நிலை ஏற்படாவிட்டாலும், ஓரளவுக்கு ஸ்திரத் தன்மை ஏற்பட்டு, நிம்மதியாக வாழக்கூடிய நிலைமையை உண்டு பண்ணியது இந்த அரசாங்கம். அதை தொடர்ந்து கைத்தறிக்கு மாட்சிமையும் மகிமையும் ஏற்படுவதற்கு பல்வேறுத் துறையில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. மில் துணிக்கும் கைத்தறித் துணிக்கும் ஏற்படக்கூடிய போட்டியின் விளைவாக, இந்த நாட்டின் இயல்புக்கு ஏற்ற அளவில், இந்த கைத்தறி தொழிலுக்கு ஊனம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, அரசாங்கம் வசூலித்து வரக்கூடிய செஸ் நிதியிலிருந்து வழிவகை செய்து வந்திருக்கிறது. இவ்விதம் கொடுக்கக்கூடிய உதவித் தொகை எந்த அளவுக்கு சரிவர பயன்படுத்தப்படுகிறது என்பதை அங்கங்கே இருக்கக்கூடிய கூட்டுறவு அமைப்புகளின் மூலம், தறிகளின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறது, அதற்கு எந்த அளவிற்கு மான்ய உதவி அளிக்கவேண்டும், அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதையெல்லாம் கவனிக்க போதிய கண்காணிப்பு இருக்கிறது என்றாலும்கூட, இன்னும் சரியான முறையில் கண்காணிப்பு தேவை. அவ்விதம் ஏற்படுத்திவிட்டால், இது போன்ற குறைகள் யார் வாயிலிருந்தும் நிச்சயமாக வராது.

ஹாண்ட்லூம் சம்பந்தமாக, ஏற்படுகின்ற குற்றச்சாட்டுகளை விசாரிக்க தனியாக ஒரு பிரிவு (ஸெல்) இயங்கிவருகிறது. அந்தப் பிரிவை இன்னும் விஸ்தரிக்கவேண்டும். அதை இன்னும் நல்லமுறையில் பலப்படுத்த வேண்டும். ரிபேட் கொடுக்கப்படுவதெல்லாம் ஒரு புறம் இருக்க, ஆடிட் சம்பந்தமாக, தற்போதைய நிலையில் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய ஆடிட்டர்கள் கூட்டுறவு ரெஜிஸ்டிராரின்கீழ்தான் இருக்கிறார்கள். ரெஜிஸ்டிராரின்கீழ் உள்ள ஜாயிண்ட் ரெஜிஸ்டிரார் என்ற அளவில்தான் இதிலுள்ள ஆடிட்டர் இருக்கிறார். சுயேச்சையான அதிகாரம் பெற்றிருக்கக் கூடிய அளவில் இந்த ஆடிட் அமைப்பு எதிர்காலத்தில் இருக்கும். பல்வேறு துறைகளிலும் இருக்கக்கூடிய ஆடிட் அமைப்புகளைப்போல், தனியாக இந்தத் துறைக்கும் ஆடிட் அமைப்பு இருப்பது அவசியம் என்பதை அமைச்சர் அவர்கள் தீர்க்கமாக ஆலோசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆடிட் துறையில் இருக்கக்கூடிய தலைவர் அவர்களுடைய தகுதி எந்த அளவுக்கு இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிப்பதன் மூலமாகவும், இதை தனியாக பலப்படுத்துவதின் மூலமாகவும், இதில் நடைபெறக்கூடிய ஒழுங்கீனங்களை அறவே ஒழிக்க முடியும் என்பதையும் தீர்க்கமாக ஆலோசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

கைத்தறித் தொழிலில், கைத்தறித் துணிக்கு பல்வேறு நாடுகளிலும் விரும்பும் அளவுக்கு மோஸ்தர்களை நாம் தயாரிக்கவேண்டியிருக்கிறது. இதன்மூலம் நமது நாட்டுக்கு நல்ல திரவியத்தை—தங்கத்தை—தேடித் தருகின்ற தொழிலாக கைத்தறி தொழிலை நடத்த முடியுமா என்பதையும் தீர்க்கமாக ஆலோசிக்கவேண்டும். கிழக்குத்திசையில் இருக்கக்கூடிய ஜப்பான், சீனா போன்ற நாடுகளோடு போட்டி போடக்கூடிய நிலைமையில், சிங்கப்பூர், ரங்கூன், இலங்கை போன்ற நாடுகளிலுள்ள சந்தைகளில் நம்மை உள்படுத்திக் தயாரித்துகொள்ளக்கூடிய அளவில் நிலைமை ஏற்பட வேண்டும். அதற்கு ஏற்ற வகையில், விசைத்தறிகளை ஆங்காங்கு எப்படி அமல் நடத்துவது என்பதையும் அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. அதை தைரியமாக "இண்ட்ரடூஸ்" செய்யவேண்டும். அதே நேரத்தில் கைத்தறிக்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படாத வகையில் விசைத் தறிகளை அமலுக்குக்கொண்டுவர முடியும் என்று நான் கருதுகிறேன். இன்று ஹாண்ட்லூம் இண்டஸ்ட்ரியைப் பொறுத்த வரையில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று இயங்கி வரத்தான் செய்கிறது. புதிய புதிய நவீன மோஸ்தர்கள் தோற்றுவிப்பதிலே ஆராய்ச்சிப் பிரிவு கவனித்து வந்தாலும், தனியாக இதற்கென்று ஒரு ரிஸர்ச் பிரிவு நிரந்தரமாக இருக்கவேண்டும். அது வலுவுள்ளதாக, நுணுக்க ஞானம் உள்ளவர்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்றும் நினைக்கிறேன். ஆங்காங்கு இயங்கி வருகிற சொஸைட்டிகள் பொருளாதாரத் துறையில் எந்த நிலையில் இருக்கிறது என்று பார்ப்பது, ஏற்றுமதியைப் பொறுத்த மட்டில் எந்த அளவுக்கு

அதிகப்படுத்துவது, அதற்கான வழியில் உற்சாகப்படுத்துவது என்று பார்ப்பது, நவீன மோஸ்தர்களை உண்டு பண்ணுவது, விலையேற்றம் விலை வித்தியாசம் ஆகிய நிலைகளைக் கண்காணிப்பது ஆகியவைகளை அந்த ரிஸர்ச் பிரிவில் உட்படுத்த முடியும். சமீப காலத்தில் கூட்டுறவுத்துறை வாயிலாக இயங்கி எல்லோருக்கும் மரியாதை கிடைக்கும் அளவுக்கு, பல்லாயிரக் கணக்கான பேர்களுக்கு வேலை கிடைக்கும் அளவுக்கு கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் மில்கள் அமைந்திருக்கின்றன. கவர்ச்சி தரும் அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கின்றன. சமீபத்தில் ஏற்பட்டிருக்கும் ஒரு நிலைமையில், பர்மாவிலிருந்து, இலங்கையிலிருந்து வருகின்றவர்களுக்கு தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கும் முறையில் கூட்டுறவுத் துறையில் இயங்கும் மில்கள் அந்தப் பணியினை ஏற்றுக்கொள்ளும் என்று நினைக்கிறேன். அந்த முறையில் திருச்செந்தூர் கூட்டுறவு மில்லில் இன்றைய தினம் 400 பேர்கள் வேலை செய்கிறார்கள். எதிர் காலத்தில் 1,000 பேர்கள் அங்கே வேலை செய்ய முடியும். இன்னும் மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏராளப் பொருள் உதவி பெற முடியும். அந்த உதவியைப் பெற்று, அந்தப் பணியை ஏற்று நடத்த கூட்டுறவு மில்களால் முடியும் என்று கருதுகிறேன். ராஜ்யத்தில் இருக்கின்ற எல்லாக் கூட்டுறவு மில்களையும் எந்த அளவுக்கு விருத்தி செய்ய முடியும் என்பதைப் பொறுத்து பல்லாயிரம் பேர்களுக்குத் தொழில் வாய்ப்புக் கொடுக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். கூட்டுறவுத் துறையில் இருக்கும் மில்களிலே, நாசரேத் மில்லில் தொழிலாளர்களுக்குப் பங்கு இருப்பதைப் போல, தொழிலாளர்களைப் பங்காளிகளாக ஆக்கி, எந்தவித வில்லங்கமும் இல்லாத அளவுக்கு வேலை நடக்கும் நிலைமையைக் கூட்டுறவு மில்களால் உண்டுபண்ண முடியும். அந்த அளவுக்கு கூட்டுறவு மில்கள் எடுத்துக்காட்டாக இருக்கும். என்னுடைய ஆசை தொழிலாளர் சம்பள நிர்ணயம் சம்பந்தப்பட்ட மட்டில் கோயம்புத்தூர் அவார்ட் என்று அதைப் பொறுத்து மற்றவர்கள் நிர்ணயம் செய்கின்ற முறையை மாற்றி, கூட்டுறவு மில்களில் இருக்கும் நிலைமையைப் பார்த்து மற்ற மில்களில் நிர்ணயம் செய்கின்ற அளவுக்கு நிலைமையை உண்டுபண்ண முடியும் என்று கருதுகிறேன். அந்த முறையில் சௌஜன்ய உறவோடு தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய வாய்ப்பை உண்டுபண்ண முடியும் . . . .

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, கைத்தறித் தொழிலைப் பற்றி எங்களுடைய கட்சியின் சார்பில் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் நான் கூறலாம் என்று இருக்கிறேன்.

இந்தத் தொழிலிலே தமிழகத்தைச் சார்ந்த பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பண்டைகாலம்தொட்டே தமிழகத்தையும் இந்தியாவையும் வெளி உலகத்திற்குக் காட்டி பெருமை தேடித் தந்த தொழில் இந்த கைத்தறித் தொழில். ஆனால் காலத்தினால் நம்முடைய சமுதாயம் முன்னேற முன்னேற அவர்களுடைய நிலை தாழ்ந்துகொண்டே வந்திருக்கிறது என்பதனை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காரணம் கைத்தறித் துணிக்கும், மில் துணிக்கும் ஏற்பட்டிருக்கிற போட்டி காரணமாக அடியோடு இந்தத் தொழில் நசிந்து வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இதற்காக ஒரு நிலையான கொள்கையை நம் அரசாங்கம் ஏற்படுத்தித் தீர வேண்டும் என்பதைத்தான் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இப்போது வேண்டுமானால் ப்லீடிங் மெட்ராஸ் என்று அமெரிக்க மார்க்கெட்டிலே விற்கப்படுகிறது, அதற்கு நல்ல கிராக்கி இருக்கிறதே தவிர, அது பர்மனெண்ட் மார்க்கெட்டாக, எப்போதுமே தேவைப்படுகிற பொருளாக இல்லை. சில சமயங்களில் ஃபாஷன் மாற, மாற, போட்டுக்கொள்ளக்கூடிய துணிகளும், ப்ளீடிங் மெட்ராஸ் துணியின் வண்ணங்கள் மாறுவதைப் போல, அமெரிக்காவிலே டிமாண்ட் மாறிக் கொண்டு வருகிறது. ஆகையால் அந்தச் சமயங்களிலே கைத்தறித் தொழில் க்ஷீணதசை அடையத் தான் செய்யும். அதைத் தவிர்க்க நம்





அரசாங்கம் ஒரு நிலையான கொள்கையை வரையறுக்கவேண்டும். இப்போது எவ்வளவு தறிகள் இருக்கின்றனவோ, அவைகளை நாடி எத்தனை குடும்பங்கள் இருக்கின்றனவோ, அந்தக் குடும்பங்களின் வாழ்வுக்கு ஏற்ற முறையில் நம் கொள்கையை அமைக்கவேண்டும். இதைக் கருதித்தான் இதற்கு முன்பு 10 வருஷங்களுக்கு முன் இங்கே முதல் அமைச்சராக இருந்தவர்கள் இரண்டு திட்டங்களைக் கொடுத்தார்கள். ஒன்று, கரை போட்ட வேட்டியையும் சேலையையும் நெய்கிற உரிமையை கைத்தறிக்கு ரிஸர்வ் செய்யவேண்டுமென்று இந்தச் சென்னை சட்ட சபையிலே முடிவு செய்தோம். அந்தமுறையில் செய்த முடிவை மத்திய சர்க்காருக்கு அனுப்பினோம். அதன் பேரில் மத்திய சர்க்கார் முடிவு செய்யவில்லை. சில ரகத் துணிகளைக் கைத்தறிக்கு என்று ஒதுக்கிக் கொடுத்தால் அது ஒரு நிரந்தரமான ஏற்பாடாக இருக்கும். இப்போது ப்ளீடிங் மெட்ராஸ் துணிக்கு நல்ல கிராக்கி இருக்கிறது என்றால் அது ஆறு மாதங்களுக்கோ, அல்லது ஒரு வருஷத்திற்கோ இருக்குமே தவிர, அதற்குப் பிறகு நிலைமை என்ன என்று நாம் கணிக்க முடியாது. ஆகையால் இது போன்ற பிரச்னைகளை நம் அரசாங்கம் துருவிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல மாஸ்டர் வீவர்களிடத்திலே தான் இன்றைக்கு இருக்கிற கைத்தறித் தொழிலாளர்களில் 75 அல்லது 80 சதவீதம் பேர்கள் கட்டுப்பட்டிருக்கிறார்கள். வேண்டும்போது 100 ரூபாய் கடன் வாங்கி விட்டால் போதும், அதன் பிறகு அவர்கள் மாஸ்டர் வீவர்களிடத்தில் கட்டுப்பட்டுப் போகிறார்கள். நூறு ரூபாய் கடன் வாங்கிக்கொள்கிறார்கள் என்றால் 200 ரூபாய்க்கு அவர்களிடமிருந்து எழுதி வாங்கிக்கொண்டு, அவர்கள் வேண்டுமென்ற சமயத்தில் நெய்த துணிகளைக்கொடுத்துக்கொண்டு, அவர்கள் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கைத்தறியாளர்களைப் பொறுத்தவரையில் கூட்டுறவு சங்கத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் என்று போர்டு இருக்கிறதே தவிர, மாஸ்டர் வீவர்களால் கண்ட்ரோல் செய்யப்படுகின்றவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். இருபது சத வீதம் தொழிலாளர்கள்கூட கைத்தறி நெசவாளர்கள் சங்கத்தில் இல்லை. எண்பது சத வீதம் பேர்கள் மாஸ்டர் வீவர்களிடத்தில் கட்டுப்பட்டிருக்கிறார்கள். இதனால் பல இன்னல்கள் இருக்கின்றன. கைத்தறி தொழிலில் ஈடுபட்டவர்கள் நல்ல முறையில் செயல்பட விசாரணைக் கமிஷன் போல நியமித்து, எங்கெங்கே நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் மாஸ்டர் வீவர்களைக் கேட்காமல், தொழிலாளர்களைக் கேட்டு என்ன குறைகள் இருக்கின்றன. எப்படி அவைகளைத் தீர்ப்பது என்று அலசிப் பார்க்கவேண்டும். அதற்கு அரசாங்கம் முன்னுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல மில்கள் ஆரம்பிக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அது உள்ளபடியே கைத்தறி நெசவாளர்களுக்கு உதவியாக இருக்கவேண்டும். டெக்ஸ்டைல் கமிஷனர் இருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய நூலுக்கு விலை வைக்கிறார்கள். அந்த விலையில் நூலைக் கொடுக்கிறார்கள் என்றாலும் வருகின்ற லாபம் பூராவும் கைத்தறித் தொழிலாளர்களுக்கு வருமாறு பார்த்துக்கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹாண்ட்லூம் ஃபைனான்ஸ் கார்ப்பொரேஷனுக்குக் கொடுத்திருக்கும் பணம் போதாது. இன்னும் அதிகப் பணம் கொடுத்து, கைத்தறித் தொழில் க்ஷீணித்து விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் வந்திருக்கிற இந்த டிமாண்டின் மீது என்னுடைய கருத்துக்களைப் புலப்படுத்திக்கொள்கிறேன்.

பொதுவாக, இப்போது வரவர கிராம, குடிசைக் கைத்தொழில்களெல்லாம் நசித்துப் போகக் கூடிய நிலையிலேயே விதி முறைகளும் அல்லது சலுகைகளும் பெருகிக்கொண்டு வருகின்றன என்பதை

ஒவ்வொன்ருகச் சிறிது நாம் ஊன்றி கவனித்துப் பார்த்தால் நமக்கு நன்ருகப் புலனுகும். உதாரணத்திற்காக, ஒன்றிரண்டை மட்டும் சுட்டிக்காட்டி மேலே செல்ல விரும்புகிறேன். பொற்கொல்லர்கள் நிலே, பொற்கொல்லர்களேப் போல் தச்சர்கள், கன்ஞர்கள், கொல்லர்கள், நெச வாளர்கள், இவர்களெல்லாம் தமக்குத் தாமே வேலே கொடுத்துக்கொண்டு, தம்மைத் தாமே வேலே வாங்கிக்கொள்ளும் அருமையான தொழில் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ஊறு வருமாளுல் தேச சமுதாயத்திலே பெரும் துயரம் நேருகிறது என்பது தான் பொருள். உதாரணத்திற்கு இவர்களில் ஒருவரை மட்டும் எடுத்துக்கொண்டு சொல்லு கிறேன். கன்ஞர்கள் முதலியவர்கள் மக்களுக்குப் பாத்திரங்களே அவரவர் களுக்குப் பிடித்த உருவிலே செய்து கொடுக்கிருர்கள். அவர்களுக்கெல்லாம் இதுவரையிலே தகடுகள் தட்டின்றி கிடைத்துக்கொண்டிருந்தன.

0–00 .m. சமீபத்தில் இந்த உலோகத் தகடுகள் சப்ளே செய்கின்ற கம்பெனிகள் அவர்களுக்கு, பல ஆண்டுகளாக " கஸ்டமர்ஸ் "-ஆக இருந்தவர்களுக்கு, " இனி இயந்திர சாதனமற்ற, பெரும் தொழிற்சாலேகள் அல்லாத தனிப் பட்டவர்களுக்கு அல்லது சிலர் சேர்ந்த பட்டறைகளுக்கு தகடுகள் சப்ளே செய்யக்கூடாது என்று சர்க்கார் உத்திரவிட்டிருப்பதிளுல் இனிமேல் உங்களுக்கு அத்தகைய தகடுகள் சப்ளே செய்யப்படமாட்டாது " என்று எழுதிய கடிதத்தை நான் என் கண்ணுலேயே கண்டேன். இதுமாதிரி பல்வேறு துறைகளில் நடந்துகொண்டிருக்கிறது. அது நான் பாவம். நேரம் கொள்ளும் என்பதளுல் முழுதும் விளக்கிப்பேச முடியவில்லே. இது மாதிரி தன்னேத் தானே வேலே வாங்கிக்கொள்ளக்கூடிய உத்தம மான தொழில் வர்க்கத்திற்கு அத்தனே இடையூறுகளும் வளர்ந்து கொண்டே போளுல், அவர்களெல்லாம் வேலேயிழந்து கஷ்டப்பட்டு, அதளுல் ஏற்படுகின்ற பெரும் சுமையும், பொறுப்பும், பாரமும் சர்க்காரைச் சேரும். பொற்கொல்லர்களுடைய அவதி, துன்பம் இன்னும் நீங்கிய பாடில்லே. அதை நீக்குவதற்கு இன்னும் வழி, வகைகள் கண்டு பிடிக்கப்படவில்லே. மேலும் குழப்பமான நிலே தான் இருந்துகொண்டு வருகிறது. அந்தப் பரம்பரையிலே வந்த கன்ஞர்களுக்கும் இப்பொழுது இந்த நிலே வந்திருக்கிறது. இதைப்போலத் தான் கைத்தறியாளர்கள் நிலேயும். இவற்றையெல்லாம் மனத்திலே வைத்துக்கொண்டு, கைத்தறி நெசவாளர்களேக் கவனிக்கவேண்டும்.

தேச சுதந்திரப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து, மனிதனுக்கு இன்றியமையாத தேவைகளில் மிகக் குறிப்பிடத் தகுந்தவைகளில் ஒன்ருகிய உடை விஷயத்தில் எம்மான் காந்தியடிகள் மிகத் தெளிவாக நமக்கு விளக்கம் சொல்லிச் சென்றிருக்கிருர்கள். உடை விஷயத்தில் யாரும், எவரையும் எதிர்பார்க்கக்கூடாது, ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும், ஒவ்வொரு மாநிலத் திலும் தனக்குத் தானே தேவைப்படுகின்ற நூலே தானே நூற்றுக் கொள்ளவேண்டும், தனக்குத் தானே தேவைப்படுகின்ற ஆடைகளே தானே தயாரித்துக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படை நிலேயை வகுத்து, அதை முடிந்த அளவுக்கு செயல்படுத்த முயல்கின்ற கடமையுடன் கூடிய ஆட்சி இந்த மாநிலத்தில் இருக்கிறது. இந்த நிலேயிலே நாம் இதை நன்ருக சிந்திக்கவேண்டும். கைத்தறி என்று சொல்லுகிற பொழுது இப்பொழுது ஒரு கஷ்டம் இருக்கிறது. பால் வேண்டும் என்று சொல்லும்பொழுது, தண்ணீர் கலக்காத பால் வேண்டும்—பால் என்று சொன்ளுல் பால் என்று தான் அர்த்தம், இருந்தாலும், தண்ணீர் கலக்காத பால் வேண்டும் என்று சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் வந்திருப்பது நம்முடைய தலேவிதி. அதேபோல், கைத்தறி என்று சொல்லும்பொழுது, அதற்கு தனியாக ஒரு " டெபினிஷன் ", வரையறை சொல்லவேண்டியிருக்கிறது. இயந்திர சாதனம் அல்லாத கைத்தறி என்று சொல்லவேண்டிய நிலே இருக்கிறது. கைத்தறி என்று சொன்ளுல், கையிளுல் நெய்யும் தறி என்று தான் பொருள். ஆளுல், விசைத்தறி, " பவர் லூம் " வந்து, அதையும் கைத் தறி நெசவுக்குள் அடக்கிக்கொண்டுவிட்டதால், கைத்தறி என்று சொல்லும் பொழுது இயந்திர சாதனம், மின்சார உதவிகள் அல்லாத கைத்தறி என்று வரையறை செய்யவேண்டிய துர்ப்பாக்கியமான நிலே நமக்கு வந்திருக்கிறது. இதை நாம் நன்கு புரிந்து, அந்தத் துன்பத்தைப்





போக்குவதற்கு இதயபூர்வமாக முயலுதல் வேண்டும். கைத்தறி என்
இயந்திர சாதனம், மின்சார வசதிகள் போன்றவை இல்லாமல், மன
தன்னுடைய கைகளிளுலும், கால்களிளுலும் பணியாற்றுகின்ற
தொழில் என்ற வரையறை செய்யவேண்டும் என்று ஆட்சியாள
நான் மனப்பூர்வமாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்து விட்
கைத்தறியாளர்கள் துயரம் கணிசமான அளவு குறையும். உண்மை
நமக்குத் தெரியும், அதிலும் தாய்மார்களுக்கு மிக நன்ருகத் தெ
பவர் லூம் மில்களிலிருந்து வருகிற சேலேகளேவிட, கைத்தறியில்
கின்ற சேலே உறுதியாகவும், வளமாகவும், தாக்குப் பிடிக்கக்
தாகவும் இருக்கிற உண்மையை அவர்கள் நன்ருக அறிவார்கள்.
லூமில் ஏதோ அவசரம் அவசரமாக அதிகமான எண்ணிக்கையில்
பத்தி செய்கின்ற வாய்ப்பு ஒன்றைத் தவிர, இவ்வளவு வளம் கிடை
என்பது அரிது என்பது தெரியும். அதையெல்லாம் விட மே
ஏராளமான பேர்களுக்கு வேலே வாய்ப்பு கொடுத்ததை அகற்றி,
சிலருக்கே வேலே தந்து, மற்றபடி இருப்பவர்களே வேலேயில்லா
களாகச் செய்யக்கூடிய ஒரு கொடிய பாவம் இந்த பவர் லூம் துறை
இருக்கிறது. பவர் லூம் இல்லாமல், கைத்தறி இருக்குமாளுல்
பேர்கள் வேலே பார்ப்பார்கள். எல்லாம் பவர் லூமாக வந்துவி
யாளுல், 90 பேர்களுக்கு வேலே இல்லே, 10 பேர்கள் தான் வேலே
அனுபவிப்பார்கள் என்பதை மனத்திலே கொள்ளவேண்டும் எ
கேட்டுக்கொள்கிறேன். புதியதாக வேலேவாய்ப்பு செய்துதா மு
விட்டாலும், இருக்கிற வேலே வாய்ப்புகளே பறித்து, அவர்களே
இல்லாதவர்களாக ஆக்கி, உணவுக்கும், உடைக்கும் அவர்கள் திண்
கூடிய நிலேயை உண்டாக்குவது அரசுக்கு சிறப்பு அல்ல, அ
பெருமை அல்ல, அரசினுடைய கடமைக்கும், பொறுப்புக்கும் முர
தாகும் என்பதை நான் பணிவோடு, ஆளுல் அழுத்தத்தோடு
படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, வேட்டி, சேலேயைப்பற்றி பலர் சொன்ன
வேட்டிகளேயும், சேலேகளேயும் கைத்தறி அன்றி, வேறு மில்கள் அ
விசைத் தறிகள் நெய்யக்கூடாது என்று தடை உத்தரவு போட்டால்
தேசம் சுபிட்சமடையும் என்பதைப் புலப்படுத்திக்கொள்கிறேன்.

அதைப்போலவே, நேரடியாகவே ரிபேட் எல்லாம் நெசவுத் தொ
ழிலாளர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். ஒரு கமிட்டி
ரிபேட் கணக்குகளேப் பரிசீலிக்கவேண்டும். 100 சதமானத்தில்
பெரும்பாலான பகுதி நியாயமாக போய்ச் சேரவேண்டியவர்களுக்குப்
வில்லே. நடுவிலே இருக்கிற இடைத்தரகர்களுக்குப் போய் சேருகிற
நெய்யாமல், நூற்காமல், வாங்காமல், வெறும் பில்லே மட்டும்
விற்றது மாதிரி கணக்குப் பண்ணி ரிபேட் வாங்குகின்ற பழக்க
நான் கண்ணுலேயே கண்டிருக்கிறேன். ஆதலிளுலே, நெசவாளர்க
நேரடியாக ரிபேட் போய் சேரக்கூடிய நெறிமுறையை, அந்த வாய்
ஒழுங்காக வெட்டி சரிப்படுத்தவேண்டும் என்று நான் வேண்டிக்
கிறேன்.

இனி, கைத்தறி நெசவாளர்கள் சந்தடி மிக்க நகருக்குள்ளே இ
பதைவிட, ஊர்ப்புறத்தில், ஓரமாக ஒரு காலனி அமைத்து, அவர்க
தறி போடுவதற்கும், பாவு போடுவதற்கும் வேண்டிய வாய்ப்புகளே
படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீளம் உ
சந்து இல்லாத, போக்குவரத்துத் தொந்தரவு இல்லாத முறையில்
காலனிகளில் வீதிகளே அமைக்கவேண்டும். அம்மாதிரி ஓரிரண்டு க
கள் தோன்றியிருக்கின்றன. பல்வேறு பெரிய இடங்களில், சிறு
நெசவாளர்கள் மிகுந்து இருக்கிற, நிறைந்திருக்கிற பகுதிகளில், கா
போன்ற பகுதிகளில், அருப்புக்கோட்டை, சின்ளுளப்பட்டி முதலிய
களில் கிட்டத்தட்ட 10,000-க்குக் குறையாதவர்கள் இருக்கிருர்கள்.
களுக்கெல்லாம் இம்மாதிரி தனிக் காலனி அமைத்துக் கொடுத்
அந்த வீதிகளின் ஓரத்தில் பெரிய மரங்களே வைத்து வளர்த்தால்
மரத்தின் அடியில் அவர்கள் பாவு ஆற்றுவதற்கும் கஞ்சி போடுவத
உரிய வாய்ப்புகளே ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதை கவன
கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சா. கணேசன்] [24th March 1965

அதேபோல கைத்தறியை உண்மையான கைத்தறியாக ஆக்கினால், இன்னொரு லாபமும் நமக்குக் கிடைக்கும். வெளி தேசங்களிலிருந்து தமிழ் நாட்டில் வந்து தங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிற எண்ணற்ற அகதிகளுக்கு இந்தக் கைத்தறித் தொழில் புனிதமான தொழில்; பொருந்தக்கூடிய ஒரு தொழில்; சங்கடம் இல்லாத தொழில்; யாரையும் எதிர்பார்க்காமல் செய்யக்கூடிய தொழில். அரசாங்கம் மிகச் சிறிய சலுகைகள் கொடுத்து, சில வசதிகளைச் செய்துகொடுத்து, அதன் மூலம், அகதிப் பிரச்னையை மிகச் செம்மையாகத் தீர்த்து நிறைவேற்றிய பெருமையை சென்னை சர்க்கார் அடைய முடியும்.

ஆகவே, கைத்தறி என்றால் எந்த விதமான இயந்திரம் அல்லது மின்சார உதவி இல்லாமல் கையினாலேயே செயல்படுத்தப்படுகிற தொழில் என்ற வரையறையைச் செய்யவேண்டும். அதனால், உண்மையிலேயே நாட்டில் தொழில் வளம் பெருகும், கைத்தறித் தொழிலின் தரம் பெருகும், அதன் மூலமாக பல்வேறு மக்களுக்கு வேலையில்லா துன்பத்தை நீக்கி, எங்கும் சமத்துவம், சுமுகம், சுபிட்சத்தோடு கூடிய சூழ்நிலையை உண்டாக்கமுடியும் என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் உழவுத் தொழிலுக்கு அடுத்த பெரிய தொழிலாக இருந்து வருவது கைத்தறித் தொழில் ஆகும். நமது மாநிலத்தில், பருத்தி நூல் கைத்தறிகளும், வேறு பட்டு நூல் கைத்தறிகளும் சேர்ந்து 7 லட்சம் கைத்தறிகளுக்கு மேல் இருக்கின்றன என்றும், இதை நம்பி வாழ்கின்றவர்கள் 20 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்றும் விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கைத்தறி நெசவாளர்களுடைய நிலை கவலைக்கு இடமான ஒரு நிலையாகும். அவர்கள் பல ஆண்டுகளாக நிலையில்லாத வாழ்வை நடத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் அறிவோம். சில சமயங்களில் அவர்களுடைய நிலை உயர்ந்தது போல் காணப்படுகிறது என்றாலும், நாட்டிலே, உலகிலே ஏற்படுகின்ற பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக, அவர்களுடைய நிலை தவிர்ப்பதற்குரிய நிலையாக ஆகிவிடுகிறது. கைத்தறி நெசவாளர்களுடைய நிலை உயர்த்தப்படுதல் வேண்டும். அதற்கு கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக ஆக்கம் தருகிற முயற்சிகளை அரசினர் எடுத்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். கூட்டுறவு அமைப்பு ஜனநாயகத்தில் மிகமிக பயன்படுகிற அமைப்பு. ஜனநாயகத்தில் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும், அதற்கான முயற்சிகளை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும், அதனுடைய பலனை நாட்டு மக்கள் அத்தனை பேர்களும் பெறவேண்டுமென்றால், ஜனநாயக அமைப்பில் கூட்டுறவு முறை மிக மிக முக்கியமானதாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய, காப்பற்றப்படவேண்டிய ஒரு முறையாகும். தனியார் வைத்து வியாபாரமோ மற்ற தொழிலோ செய்தால், அதன் மூலம் ஏற்படுகிற லாபம் முழுவதும் தனியாருக்கே போய்ச் சேருகிறது. சர்வாதிகாரப் பொதுவுடைமை ஆட்சியில் எல்லா உடைமைகளையும் அரசினரே ஏற்று, பொதுவார் துறையில் தொழில்கள் நடத்தப்படுகின்றன. இரண்டுக்கும் இடையிலே இருந்து, பயனையும், லாபத்தையும் பலபேர்களுக்குப் பகிர்ந்தளிப்பது கூட்டுறவு முறையாகும். தொழிலாளர்களே நடத்துகிறவர்களாக இருந்து, கூட்டுறவு முறையிலே நடத்தி, ஏற்படுகிற லாபத்தையும் கூட்டுறவு இயக்கத்தவர்களே அடையும் அமைப்பாக இருப்பதால், கூட்டுறவு முறை ஜனநாயகத்தில் சிறந்த அமைப்பாக இருக்கிறது. ஆகவே, அதனுடைய நோக்கம் பாராட்டத்தக்க ஒன்றாக இருந்தாலும், அதிலே ஏற்படுகிற தகராறுகளும், குறைபாடுகளும், ஊழல்களும் இந்த அமைப்புக்கு இருக்கும் நல்ல பெயரை கெடுத்து விடுகின்றன. இதை நல்ல முறையிலே இயங்க வைப்பதில் முழுக் கவனமும், திறமையும் காட்டவேண்டும். எந்த நோக்கத்துடன், எந்த அடிப்படையில் கூட்டுறவு இயக்கம் ஏற்படுத்தப்படுகிறதோ அந்த நோக்கத்தை



24th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நிறைவேற்ற முயற்சி செய்தல் வேண்டும். அந்த இயக்கத்தின் மூலம், நெசவாளர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு முயற்சி செய்வது வரவேற்கத்தக்க ஒன்று.

இந்த மாநிலத்தைப் பொறுத்த வரை, ஆண்டுக்கு 50 கோடி கெஜம் கைத்தறித் துணி உற்பத்தியாகிறது என்றும், அதன் மூலம் ரூ. 62 கோடி மதிப்புள்ள தொகை கிடைக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்போது கைத்தறி நெசவாளர்களுடைய வாய்க்கும் வயிற்றுக்கும் கட்டுப்படியாகிற நிலைமைக்குத்தான் அதன் மூலம் வருவாய் கிடைக்கிறது. ஆகவே, இந்த தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களை, கைத்தறியே என்றென்றும் காப்பாற்றிவிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. என்றாவது ஒரு நாள் ஆலைப் பொறிகள், இதைக் கைப்பற்றித்தான் தீரும். அந்த அளவுக்கு நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது. அதுவரை இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுடைய வாழ்வை ஈடுகட்டுவதற்கான முயற்சிகளில் அரசினர் ஈடுபட்டே தீரவேண்டும். வேறு எந்தத் தொழிலையும் அவர்கள் மேற்கொண்டு, ஏதேனும் தொழில் மூலம் அவர்கள் வாழ்க்கையை நம்பிக்கையோடு நடத்தலாம் என்கிற நிலைமை ஏற்படும் வரையில், அரசினர் இத்தகைய முயற்சிகளை ஈடேற்றவேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற 20 லட்சம் மக்களின் வாழ்நாள் முடியும் வரை, அவர்களை இந்தத் தொழிலின்மூலம் காப்பாற்றும் பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கிறது. அதற்கான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். உற்பத்தியாகும் துணிகள் விலை போவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றில் ஒன்று வெளிநாட்டு சந்தையை எந்த எந்த வகையில் பெருக்கலாம் என்று காண வேண்டும். உள்நாட்டு சந்தையைப் பிடிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுடைய தொழிலை அழகுற நடத்திச் செல்ல வழிவகை கண்டு தரவேண்டியவர்களாகவும் இருக்கிறோம். அது மட்டுமல்ல, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளராமல், அவர்களை மற்ற தொழில்களுக்கு ஈர்க்க என்னென்ன திட்டங்கள் இயற்றலாம் என்பதையும் கூடவே அரசினர் சிந்திக்க வேண்டும். அப்படியானால்தான், இதில் ஈடுபட்டிருக்கிறவர்கள் வேறு எந்தத் தொழிலையாவது செய்து, அதிக வருமானத்தை ஈட்ட வாய்ப்பு ஏற்படும். இப்பொழுது இருக்கிறவர்களை விட்டாலும், புதியவர்களை ஈடேற்ற வழித் துறைகளைக் காண முடியும். இதிலே இருப்பவர்களை மெல்ல மெல்ல வேறு தொழில்களில் ஈடு படுத்தினால்தான், வேறு தொழில் துறைகளில் வாய்ப்பு ஏற்படுத்தினால் தான், அவர்களை வாழவைக்க முடியும். அதுவரையில், இந்தத் தொழிலைக் காப்பாற்றியே தீரவேண்டும். அப்படிக் காப்பாற்றித்தீர வேண்டுமென்றால், இவர்கள் தொழிலை தொடர்ந்து நடத்த வழிவகை காணவேண்டும். அதற்கான வழிவகை காணவேண்டுமென்றால், உற்பத்தியாகும் துணிவிலை போவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். துணிகள் விலைபோகுதல் வேண்டுமென்றால், வெளிநாட்டு சந்தை, உள் நாட்டு சந்தைகளைப் பெருக்க வேண்டும். இதிலே அரசினர் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கரைபோட்ட வேட்டிகள், கலர் சேலைகள் ஆகியவற்றை கைத்தறிக்கு ஒதுக்குவதன் மூலம் இப்பொழுது இருக்கிற கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்க்க வழிவகை ஏற்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கோட்டு, வேறு பல ஆடைகளுக்கான துணிகளை நெய்வதற்கான பொறுப்பை ஆலைகளுக்கு விட்டாலும் கூட, வேட்டி, சேலை, துண்டு இவற்றைக் கைத்தறிக்கே விடலாம். கரைபோட்ட வேட்டி, கலர் சேலைகளோடு மற்றவற்றையும் அவர்களுக்கு ஒதுக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா? என்று ஆராய வேண்டும். நெசவாளர்களை ஈடேற்றும் அளவுக்கு அந்தத் தொழில் காப்பாற்றித் தரப்பட வேண்டும்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th March 1965

ஏற்றுமதியைப்பொறுத்த வரையில், வண்ணம் மாறும் துணியை 4·15 கோடி அளவுக்கும், மற்றத் துணிகளை 3·88 கோடி அளவுக்கும் ஆக மொத்தம் 8·03 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதியாகியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரூ. 62 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணியில் 8 கோடி அளவுக்குத்தான் அந்நிய நாடுகளுக்கு துணி ஏற்றுமதி ஆகியிருக்கிறது. இன்னும் வேறு எந்த எந்த வகைகளில் இதைப் பெருக்கலாம், இன்னும் எந்த எந்த நாடுகளுக்கு இவைகளை ஏற்றுமதி செய்யலாம், அவரவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப, எந்த எந்த வகைத் துணிகளை உற்பத்தி செய்யலாம் என்பதை அரசினர் காணவேண்டும். கைத்தறி நெசவாளர்கள் வாழ்வுப் பிரச்சினையைத் தீர்க்க வழி எப்படியும் காணப்பட்டே தீரவேண்டும்.

மூன்றாவது திட்டத்திலே, தொழில் வளர்ச்சிக்கு உயர்ந்த இடம் கொடுத்திருப்பதாக விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. மூன்றாவது திட்டத்திலே கைத்தறிக்கு 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாலு ஆண்டுகளில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 6,02,00,000 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1965–66-ல் ரூ 1,45·42 லட்சம் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்டத்திலே தொழில் வளர்ச்சிக்கு மிக உயர்ந்த இடம் தரப்பட்டு, 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கொடுத்திருக்கும் கணக்குப்படி, 7·47 கோடி தான் செலவழிக்கப் பட்டிருக்கிறது. பாக்கி 53 லட்சம் துண்டு விழுந்திருக்கிறது. இந்தத் தொகை வேறு வகைக்குத் திருப்பப்பட்டிருக்கிறதா ? அல்லது இந்தத் தொழிலுக்குத் தேவையில்லை என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா ? என்கிற விளக்கத்தை கனம் அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

ஏற்றுமதியைப் பெருக்கும் நிலையில், அமெரிக்கா போன்ற நாடுகளில் வண்ணம் மாறும் துணிகளுக்கு அதிக கிராக்கி இருந்து, இடையிலே ஏற்றுமதி செய்யப்பட்ட துணி தரம் குறைந்ததால், கிராக்கி விழுந்து, அவர்களுடைய சந்தையில் நம்முடைய துணிக்கு கிராக்கி இல்லாமல் போயிற்று என்று தெரிகிறது. தரமுள்ள துணிகளை நியாயமான நேர்மையான வழிகளில் உற்பத்திசெய்து, ஏற்றுமதியைப் பெருக்க வேண்டும். அமெரிக்க நாட்டின் பல்வேறு விளம்பரத்திலிருந்து, வண்ணம் மாறும் துணிக்கு அங்கே கிராக்கி இருக்கிறது என்று அறிகிறோம். அந்த நாட்டின் தேவையை அறிந்து, அவர்கள் விரும்புகிற தரமுள்ள துணியை ஏற்றுமதி செய்ய வழிகாண வேண்டும். தரமற்ற துணிகளை ஏற்றுமதி செய்யாமல் தரமுள்ள துணிகளைமட்டும் ஏற்றுமதி செய்ய அரசினர் என்ன ஏற்பாடுகள் செய்து இருக்கிறார்கள் ? அதில் தீவிரம் காட்டப்படுகிறதா ? என்று அமைச்சரிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மேலும், கைத்தறித் துணிகளுக்கு பாதுகாப்புத் தரும் முறையில், கழிவுத்தொகை தரப்படுகிறது. அவை மில் துணிகளோடு போட்டி போட வேண்டும் என்று இது தரப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் கழிவுத் தொகைக்காக 375 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கிற கணக்குப்படி, 304 லட்சம் கொடுக்கப்படும் என்று தெரிகிறது. 375-இல் 304 போனால், பாக்கி 71 லட்சம் ரூபாய் துண்டு விழுகிற நிலைமை இருக்கிறது. அதற்கு என்ன காரணம் ? ஏன் ? அந்தத் தொகைக்கு தேவையில்லையா ? அல்லது வேறு வகையில் அது திருப்பிவிடப்பட்டுள்ளதா ? அப்படித் தரப்படுவது இந்த தொழிலில் ஊக்கம் தரும் அளவுக்கு இருக்கிறதா ? என்கிற விளக்கத்தை அமைச்சரிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன். வெளி நாடுகளில் அதிகக் கிராக்கி ஏற்படுத்த முயற்சிகள் எடுக்க வேண்டும். அதோடுகூட இந்தியா முழுவதிலுமே, இதன் மீது பற்று ஏற்படும் வகையில் கைத்தறித் துணிகளை வெளிமாநிலங்களிலும் விளம்பரம் செய்ய வேண்டும். நம் மாநிலத்தில்மட்டுமின்றி, மற்ற மாநிலங்களிலும் விளம்பரம் செய்து, அதன் கிராக்கியை அதிகப்படுத்தவேண்டும். கவர்ச்சி ஏற்பட்டால் தான் அமெரிக்காவில் நம் துணிகளுக்கு அதிக கிராக்கி ஏற்படும். அந்த மாதிரி கவர்ச்சியை ஏற்படுத்தி, மற்றைய மாநிலங்களில்கூட போட்டி போட்டு, தரமுள்ள, நேர்த்தியான துணிகளை, தமிழகத்தில்



24th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

உற்பத்தி செய்யவேண்டும். கவர்ச்சி ஏற்படுத்த எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும். அதற்கான திட்டங்களையும் அரசினர் தீட்ட வேண்டும்.

கைத்தறி வார விழாவை ஆண்டு தோறும், இந்தியா முழுவதிலும் ஒரே வாரத்திலே கொண்டாடித் தீர வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அந்த அந்த மாநிலங்களின் மக்களுடைய தேவைக்கு ஏற்ப அவரவர்களுடைய மனப்பான்மைக்கு ஏற்ப, அங்கங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்ப, கைத்தறி வார விழாவைக் கொண்டாட முயற்சி எடுக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்தில் அந்த மக்களின் தேவை முடிந்து விட்ட பிறகு கைத்தறி வார விழா கொண்டாடுவதில் பயன் இல்லை. இப்பொழுது பெப்ருவரி அல்லது மார்ச் அல்லது ஏப்ரல் திங்கள்களில் கைத்தறி வார விழா கொண்டாடப்படுகிறது. ஆனால், மக்கள் துணிகளை விரும்புகிற காலத்தில் விழாவை வைத்தால் அது பயனுடையதாக இருக்கும். மக்கள் துணிகள் வாங்க வேண்டும் என்கிற காலங்களில் வைத்தால், அந்த நிலையில் வேறு மில் துணிகளை வாங்கச் செல்பவர்களும், கைத்தறித் துணிகளை வாங்கும் நிலை ஏற்படக்கூடும். அப்படி மக்கள் செல்லும் நேரத்தில் கைத்தறித் துணிகளை அவர்களுக்குக் காட்டினால், வேறு துணிகளை வாங்காமல், மனம் மாறி கைத்தறித் துணியை எடுக்கும் நிலைமை ஏற்படும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்காலங்களில் துணி வாங்க மக்களுக்கு ஆர்வம் ஏற்படுகிறது. மக்கள் மனப்பான்மையைப் பார்த்தாலும் கடைக்குச் செல்பவர்கள், 100 ரூபாய்க்குத் துணி வாங்க வேண்டும் என்று சென்றாலும், அங்கே நல்ல துணிகளைப் பார்த்துவிட்டு, ரூ 150, ரூ 200 க்கும் அதிகப்படியாக வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பும் நிலையைப்பார்க்கிறோம். ஆக, அந்த நாட்களில் கைத்தறி வார விழாவை வைத்தால் பயனுள்ளதாக இருக்கும். ஆனால், குறைவாகத் துணி வாங்குகிறவர்கள் ஒரே திங்களில் மீண்டும் செலவழிக்க முன் வரமாட்டார்கள். அந்த மனப்பான்மை ஏற்பட வழி இல்லை. ஆகவே கைத்தறி வார விழா, நாட்டு மக்களுக்கு கண் காட்சியாக அமைகிற ஒன்றாக இருக்கிறதே ஒழிய, அதனால் உருவான பயன் அடையக் கூடிய நிலை ஏற்படவில்லை. அதற்குக் காரணம் சொல்லப்படுகிற நேரத்தில், " எப்படியும் பொங்கல் விழாவின் போதும், தீபாவளிப் பண்டிகையின் போதும் மக்கள் ஆங்காங்கு கைத்தறித் துணி வாங்கி விடுவார்கள். சாதாரண காலத்தில் கைத்தறி விழா வைத்தால்தான் தேங்கிக்கிடக்கும் துணிகள் விலைபோகும் " என்று கூறப்படுகிறது. ஒரு திங்களில் துணி வாங்கிவிட்டு, மறுபடியும் அடுத்த திங்களில் பட்ஜெட் போட யாருக்கும் மனம் வராது. நூறு ரூபாய்தான் செலவழிக்க வேண்டும் என்று திட்டமிட்டுக்கொண்டு கடைக்குப் போனாலும், 150, 200, 300 ரூபாய் அளவிற்குப் பட்டியல் போய் நிற்கும். அந்த அளவிற்கு ஏற்கனவே ஒரு முறை துணிக்காகச் செலவழித்ததற்குப் பிறகு மீண்டும் செலவழிக்க வேண்டிய எண்ணம் நிச்சயமாக யாருக்கும் வராது. ஆக, அந்த வகையில் கைத்தறி வார விழாவினால் மக்களுக்குப் பலன் ஏற்பட முடியாது. மக்களுக்கு உண்மையிலேயே இந்த இயக்கத்தினால் பலன் ஏற்படவேண்டுமானால், பொங்கல் விழா நடைபெறுவதற்கு முன்னால், அந்தக் கைத்தறி விழாவை இந்த மாநிலத்தில்லைப் பொறுத்த வரையிலாவது நடத்துவதற்கான முயற்சிகளைச் செய்தல் வேண்டும். அது சரியாக இருக்கிறதா என்பதைச் சோதனை செய்து பார்க்கவேண்டும். இதுவரை பொங்கல் கழித்து கைத்தறி விழா நடத்திப் பரீட்சை செய்து பார்த்திருக்கிறோம். அடுத்த ஆண்டு பொங்கலுக்கு முன்னால் ஒரு தடவை நடத்திப் பார்த்து, இதற்கும் அதற்கும் வேறுபாடு என்ன என்று கண்டறிவது நல்லது. பொங்கலுக்கு முன்னால் கைத்தறி வார விழா நடத்துவதனால் அதிகப் பலன் ஏற்படுகிறதா அல்லது பொங்கல் முடிந்ததற்குப் பிறகு நடத்துவதனால் கைத்தறித் துணிகளுக்கு அதிகக் கிராக்கி ஏற்படுகிறதா? எப்பொழுது அதிக விற்பனை நடைபெறுகிறது? என்பதைக் கண்டறிவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது மிக மிக அவசியம்.

கூட்டுறவு அமைப்பின் நோக்கம் சிறப்பாக இருந்தாலும் கூட, அடிக்கடி அதைப்பற்றிச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டு, கூட்டுறவு இயக்கத்தில் உள்ளவர்கள் தங்கள் ஏகபோக உரிமையாகக் கூட்டுறவு ஸ்தாபனங்களை

ஆக்கிக்கொள்கிறார்கள் என்பதேயாகும். அப்படி ஊழல்கள் நடைபெறாமல் தடுக்கவேண்டும் என்ற கருத்து தான் மன்றத்தில் இரு தரப்பினராலும் அழுத்தமாகச் சொல்லப்பட்டு வருகிறது. கூட்டுறவு இயக்கத்தின் நோக்கம் சரியாக இருந்தாலும், அதற்காக எடுத்துக்கொள்ளப்படுகிற முயற்சி சரியாக இருந்தாலும் அதை நடத்திச் செல்கிற நிர்வாகத்தில் இருக்கிற ஊழல்களை உடனடியாக அவ்வப்போது கண்டறிந்து நீக்குவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். எனவே, பொதுவாக ஊழல்களைக் கண்டு பிடிப்பதற்கும் ஆங்காங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் " விஜிலன்ஸ் விங் " இருப்பதைப்போலவே. கூட்டுறவுத் துறையில் இருக்கும் ஊழல்களையும் உடனடியாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு ஊழல் கண்டுபிடிப்பு இலாக்காவிலே தனி விஜிலன்ஸ் விங் ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலமாக ஊழல்களைப் போக்குவதற்கான முயற்சிகளை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும். இந்த முறைகளில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுடைய குறைகளைப் போக்குவதற்கும் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கும், அதில் ஈடுபட்டிருப்பவர்களை மெல்ல மெல்ல வேறு தொழில்களில் இழுத்துவிடுவதற்கான வாய்ப்புக்கூறுகளை ஒரு பக்கத்தில் ஏற்படுத்தி, இதை நம்பி வாழ்கிறவர்களுக்கு நிரந்தரமான உதவி செய்வதற்கும், கூட்டுறவு இயக்கத்தின்மூலம் செலவழிக்கப்படுகிற தொகை உண்மையிலேயே நெசவாளிகளுக்குப் போய்ச் சேர்வதற்கும் வழிவகை காணும் முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*** கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கைத்தறி சம்பந்தமான விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்ட கனம் அங்கத்தினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டிலே இது மிகவும் முக்கியமான தொழில். விவசாயத்திற்கு அடுத்தபடியான தொழில். ஆகவே, நம்முடைய ராஜ்ய சர்க்காரின் முழுக்கவனமும் இந்தத் தொழிலின்பால் இருக்கிறது என்பதை நான் எடுத்துச்சொல்லத் தேவையில்லை.

குறிப்பாக, இந்த விவாதத்தைப் பார்க்கின்றபோது, பெரிய அளவிற்கு இதில் ஏதோ குற்றங்குறைகள் ஏற்பட்டுவிட்டதாக யாரும் சொல்லவில்லை. ஆனால், இதை இன்னும் மேற்கொண்டு திறமையாக நடத்தவேண்டும் என்பதைத்தான் வற்புறுத்தினார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

கைத்தறிக்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எட்டு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், " இதில் 7 கோடி 46 லட்சம் ரூபாய்தானே செலவழிந்தது ? ஏன் குறைவாகச் செலவாகியிருக்கிறது ? " என்று கேட்டார்கள். நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கின்றபோது, கழிவுத் தொகை (ரிபேட்) ரூபாய்க்கு 6 ந.பை. கொடுப்பதான திட்டத்தை வகுத்தோம். ஆனால், அதற்குப் பிறகு அகில இந்தியாவிலும் ரூபாய்க்கு 5 ந.பை. வீதம் கழிவுத் தொகை கொடுத்தால் போதும் என்ற திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனால் 375 லட்சம் ரூபாயில் 75 லட்சம் ரூபாய் செலவு நமக்குக் குறைந்துவிட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கழிவுத் தொகை (ரிபேட்) கொடுக்கப்பட்டது. ரூபாய்க்கு 6 ந.பை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கழிவுத் தொகை கொடுக்கப்பட்டது ரூபாய்க்கு 5 ந.பை. அதனால் அந்தச் செலவில் 75 லட்ச ரூபாய் நமக்கு மிச்சம் ஏற்பட்டது. அந்த 75 லட்ச ரூபாயைக் குறைத்து விட்டால் எட்டு கோடி ரூபாய்த் திட்டம் போட்டதற்கு அதிகமாகவே செலவழித்திருக்கிறோம் என்பது நன்றாகத் தெரியும். ரிபேட் தொகையிலே குறைவாகச் செலவழித்ததற்காக நாம் வருத்தப்படத் தேவை இல்லை. காரணம் என்னவென்றால், நான் அடிக்கடி சொல்லிவந்தது போல, ரிபேட் தொகை நெசவாளிகளுக்குப் போவது இல்லை. நம்மைப்போல், அதை வாங்கி உபயோகிப்பவர்களுக்குத்தான் போகிறது. விற்பனை செய்ய வேண்டுமே என்ற காரணத்திற்காகக் கழிவுத் தொகை கொடுக்கிறோமே தவிர, நெசவாளர்களுடைய நல்வாழ்விற்காகக் கொடுக்கப்பட்ட தொகையாகச் சொல்லவே முடியாது. ஆகவே, மத்திய சர்க்கார் ரிபேட்





தொகையை 5 நயா பைசாவாகக் குறைக்கவேண்டுமென்று சொன்னவுடன் ஏற்றுக்கொண்ட ராஜ்யங்களில் நான் முதன் முதலாவதாக இருந்தேன். அந்தத் தொகையை வேறு இனங்களுக்குச் செலவழித்தால் நன்மையாக இருக்கும் என்று எண்ணி ரிபேட் தொகையைக் குறைத்திருக்கிறோம்.

நம்முடைய ராஜ்யத்தில்தான் பல புதிய திட்டங்கள் கைத்தறி நெசவாளர்களுக்காக கூட்டுறவுத் துறையில் நாம் கொடுத்திருக்கிறோம். உதாரணமாக இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கத்திலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ப்ராவிடெண்ட் பண்டு கொடுக்கிறோம். வேறு எந்த ராஜ்யத்திலும் இது கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. கைத்தறி நெசவாளர்கள் சொஸைட்டியிலிருந்து அவர்கள் 4 நயா பைசாவும் சர்க்காரிலிருந்து 2 நயா பைசாவும் கொடுத்தது போக, தொழிலாளர்கள் தாங்களே 6 நயா பைசா போட்டு ரூபாய்க்கு 12 நயா பைசா வருகிற அளவிலே இன்றைக்கு நாம் கைத்தறி நெசவாளர்களுக்கு பிராவிடெண்ட் பண்டு திட்டம் செய்திருக்கிறோம். இது மிகச் சிறந்த திட்டம். இப்போதுதான் ஆரம்பித்து இன்றைக்குச் சற்றேறக்குறைய 7,000, 8,000 அங்கத்தினர்கள் அதில் சேர்ந்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் இதில் அதிகமான அங்கத்தினர்களைச் சேர்த்து அவர்கள் கொடுக்கின்ற பிராவிடெண்ட் பண்டு தொகைக்குச் சர்க்கார் அதிகமான தொகை கொடுப்பதன்மூலமாக நெசவாளர்களுக்கு நேரடியான உதவி கிடைக்க முடியும்.

அதேபோல்தான் கடன் கொடுத்து உதவி செய்யக்கூடிய திட்டம் ஒன்று இருக்கிறது. கடன் பட்டிருந்த நெசவாளர்கள் கடன்காரர்களுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்டுத்தான் கூட்டுறவு சொஸைட்டிக்கு வந்து சேர முடியும் என்ற நிலையில் இருப்பதால், அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவி செய்து அவர்களைக் கூட்டுறவு சொஸைட்டியில் சேர்ப்பதற்கான திட்டம் வைத்திருக்கிறோம். கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும் பல இடங்களில் கைத்தறி நெசவாளர்கள் மாஸ்டர் வீவர்களிடம் கடன் வாங்கி இருப்பார்கள். அவர்களுடைய தறியை விற்றாவது கடனைக் கொடுத்துவிட்டுத்தான் விலக முடியும் என்று அவர்கள் சொல்வார்கள். அவ்வாறு இருக்கும்போது, அவர்களால் பணம் கொடுத்துவிட்டு விலக முடியாத நிர்ப்பந்தமான நிலை இருக்கும் காரணத்தால் சர்க்காரே அந்தக் கடனையும் கொடுத்து, அந்தக் கடன் தொகையைப் பின்னால் கொஞ்சங் கொஞ்சமாக அவர்களிடமிருந்து வசூல் செய்துகொண்டு அவர்களைக் கூட்டுறவு முறையிலே சேர்ப்பதற்கான ஏற்பாடும் செய்திருக்கிறோம்.

நம்முடைய ராஜ்யத்தில் 8 கோடி ரூபாய் கைத்தறித் துறைக்காக நாம் வைத்திருந்தாலும், அதைவிட அதிகமாக நாம் செலவழித்திருக்கிறோம். இந்த எட்டு கோடி ரூபாய்க்கு மேலே நாம் செலவழித்திருக்கிறோம். இது எப்படி என்றால், இன்றைக்கு நம்முடைய ராஜ்ய சர்க்கார் நிதியிலிருந்து கூட்டுறவு மில்லுக்கு ஒரு கோடி ரூபாய்தான் போட்டிருக்கிறோம். எட்டு கூட்டுறவு மில்களை நாம் ஆரம்பித்திருக்கிறோம். அது கைத்தறி நெசவாளர்களுக்கு மிகவும் அத்தியாவசியமானது, உதவிகரமானது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். எட்டு மில்களை ஒரு கோடி ரூபாயில் கட்ட முடியாது. அதற்கு வேண்டிய பாக்கி மூன்று கோடி ரூபாயை நாம் ரீ-ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து வாங்கியிருக்கிறோம். ராஜ்ய சர்க்கார் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் போட்டு ரீ-ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து மூன்று கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாக வாங்கி அதை நாம் இன்றைக்குக் கூட்டுறவு மில்களுக்கு உபயோகப்படுத்தியிருக்கிறோம். அதேபோல், நம்முடைய நிதியிலிருந்து 12½ லட்சம் ரூபாய்தான் ஹாண்ட்லூம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனுக்கு நாம் போட்டிருந்தாலும், ஸ்டேட் பாங்கிலிருந்து இரண்டு கோடி ரூபாய் வாங்கி ஹாண்ட்லூம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனுக்குக் கொடுத்திருக்கிறோம். இந்த ஹாண்ட்லூம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் நமது தமிழ் வருஷப்பிறப்பன்று முதல் கடன் கொடுக்க ஆரம்பித்துவிடும். அன்று அதனுடைய வேலை துவங்கப்படும். அந்த முறையில் பார்க்கும்போது நமக்கு மேற்கொண்டு இரண்டு கோடி ரூபாய் கைத்தறி [illegible]

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [24th March 1965

இதைத் தவிர, 'ஒன்ட்—ஃபண்ட்'-ன் மேல் ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் வாங்க முடியும். மத்திய பாங்கு கடன் கொடுக்கிறார்கள். 'வொர்க்கிங் ஃபண்ட்'—க்காக ஒவ்வொரு தறிக்கும் ரூ. 500 வீதம் நாம் இன்றைக்குக் கடன் வாங்குகிறோம். அந்த வகையில் வருஷத்திற்கு மூன்று கோடி ரூபாய் கிடைக்கிறது. ஐந்து வருஷங்களுக்குப் பதினைந்து கோடி ரூபாய் வரையில் வொர்க்கிங் ஃபண்ட்—ஆக ரிசர்வ் பாங்கிலிருந்து கிடைக்கிறது. "தமிழ்நாட்டிலே கைத்தறி நெசவாளர்களுக்காக 7½ கோடிதான் செலவழிக்கிறார்கள், எட்டு கோடிதான் செலவழிக்கிறார்கள்" என்று யாராவது சொல்வார்களானால், அவர்கள் உண்மையான நிலையைத் தெரிந்து கொள்ளாமல் சொல்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இப்படிப் பல வகைகளில் செலவழிப்பதைப் பார்த்துத்தான் சொல்லவேண்டும். வொர்க்கிங் ஃபண்டுக்கு 15 கோடி ரூபாய், மில்களுக்காக 3 கோடி ரூபாய், ஸ்டேட் பாங்கியிலிருந்து ஹாண்ட்லூம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனுக்கு வாங்கிக்கொடுக்கக்கூடிய 2 கோடி ரூபாய், இவை தவிர நாம் ஒதுக்கிய எட்டு கோடி ரூபாய் இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் 28 கோடி ரூபாயிலிருந்து 30 கோடி ரூபாய் வரை நம்முடைய ராஜ்யத்தில் கைத்தறி நெசவாளர்களுக்காகச் செலவழிக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவது திட்டத்தில் சில சிறப்பான முன்னேற்றம் நடந்திருக்கிறது என்பதையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக, நாம் எத்தனை தறிகளைக் கூட்டுறவு சொஸைட்டியிலே கொண்டுவந்திருக்கிறோம் என்பதற்குக் கணக்குகள் இருக்கின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒரு லட்சத்து 57 ஆயிரம் தறிகள் கூட்டுறவு இயக்கத்தில் இருந்தன. இப்போது 1964–65 ல் கணக்கு எடுத்துப்பார்த்தால் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் தறிகள் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

அதேபோல கூட்டுறவுத் துறையின்கீழ் உள்ள கைத்தறி நெசவுத் தொழில் சங்கங்களின் ஆஸ்திகளை எடுத்துப்பார்த்தால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் எழுபத்திரண்டு லட்சத்து பன்னிரண்டாயிரமாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒரு கோடியே எண்பத்திரண்டு லட்சமாக உயர்ந்தது. இந்த வருஷம் 1965–66-ல் மூன்று கோடியே
10-30 a.m. அறுபத்தெட்டு லட்சமாக உயர்ந்து இருக்கிறது. அந்த அளவு ஒவ்வொரு சொஸைடியும் லாபகரமாக, வெற்றிகரமாக நடந்து தங்களுடைய ஆஸ்திகளைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன. அதன் காரணத்தினால்தான் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அவற்றின் ஆஸ்திகளின் மதிப்பு எழுபத்திரண்டு லட்சத்து பன்னிரண்டாயிரமாக இருந்தது, இப்போது மூன்று கோடியே அறுபத்தெட்டு லட்சமாக உயர்ந்து இருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

அடுத்து அந்தச் சங்கங்களின் உற்பத்தி அளவை எடுத்துக்கொண்டாலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ஒவ்வொரு தறியும், ஒரு ஆண்டில் சராசரியாக 478 கஜம் துணி உற்பத்தி செய்தது. ஆனால் இன்றைக்கு சராசரியாக ஒவ்வொரு தறியும் 532 கஜம் நெய்கிறது. இப்படி ஒவ்வொரு துறையிலும் நாம் எடுத்துப் பார்த்தால் கணிசமான வெற்றியையே கண்டு இருக்கிறோம். அதுபோல விற்பனையை எடுத்துக் கொண்டாலும் ஒன்பது கோடியில் இருந்து பதினாறு கோடி அளவுக்கு வளர்ந்து இருக்கிறோம். ஆகவே கைத்தறி நெசவு சம்பந்தமான கணக்குகளை எடுத்துப் பார்க்கும்போது எல்லாவற்றிலும் சிறப்பான முன்னேற்றம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பட்டு இருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

ஏற்றுமதி சம்பந்தமாகச் சில கருத்துக்களைக் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். நாம் ஏற்றுமதி அதிகரிக்க வேண்டும் என்பதற்காகப் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். 'க்வாலிடி கண்டிரோல்' இல்லாமல் கண்ட துணிகளை ஏற்றுமதி செய்தால் நமக்கு வெளிநாட்டு மார்க்கெட்டில் உள்ள கிராக்கி குறைந்துவிடுகிறது. ஆகவே தரம் நிர்ணயம் செய்து, அந்தத் தரம் உள்ள துணிகளே வெளி



24th March 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்டறிய—ப்ரீ ஷிப்மெண்டு இன்ஸ்பெக்ஷன்—கப்பலில் ஏற்றுவதற்கு முன்னால் பரிசோதனை செய்து ஏற்றுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். நம்முடைய ப்ளீடிங் மெட்ராஸ் ரகத் துணி ஏற்றுமதிகூட முன்பு ஒரு கோடி கஜமாக இருந்தது, இப்போது ஒரு கோடி எழுபத்தைந்து கஜமாக உயர்ந்து இருக்கிறது. அடுத்த ஆண்டு இரண்டு கோடியாக உயர்த்த இப்போது திட்டமிடப்பட்டு இருக்கிறது. இந்த இரண்டு கோடியும் எஸ்ட்டாபிளிஷ்டு எக்ஸ்போர்ட்டர்ஸ் மூலமாக ஏற்றுமதி செய்யப்படும். மேற்கொண்டு தேவை இருக்குமானால் இன்னும் ஐம்பது லட்சம் கஜம் ஏற்றுமதி செய்யலாம் என்று சர்க்கார் முடிவு எடுத்திருக்கிறார்கள்.

அடுத்து இந்த ஏற்றுமதித் துறையில்கூட திடீர் திடீர் என்று ஸ்பெகுலேடர்ஸ்—வாய்தா பேரம் பண்ணுகிறவர்கள் ஈடுபடக்கூடாது என்பதற்காக யார் யார் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய காண்டிராக்ட் எடுத்திருக்கிறார்களோ, அவர்கள் அந்தக் காண்டிராக்டுகளை ரிஜிஸ்தர் செய்துவிட வேண்டுமென்று வைத்திருக்கிறோம். குறிப்பாக அமெரிக்கன் மார்க்கெட் நிலவரமே ஒருவகை. திடீரென்று ஒருவகைத் துணியை உடனே வேண்டுமென்று கேட்பார்கள். இவற்றை நாம் ஒரே நாளில், ஒரே நிமிஷத்தில் உற்பத்தி செய்துவிட முடியாது. அவர்கள் கேட்டவுடன் கொடுத்தால் அதிகமாகப் பணம் கொடுத்துக்கூட வாங்கிக்கொள்வார்கள். நம்முடைய வியாபாரிகளும்—அதிகமாகப் பணம் கொடுக்க வேறு ஒருவர் வந்தவுடன்—முதலில் யாருடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்களோ அவர்களுக்குச் சரக்கு கொடுக்காமல் அதிகப் பணம் கொடுக்கிறவர்களிடத்தில் விற்றுவிடக்கூடும். இதனால் பழைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் டிபால்டர்ஸ் ஆகிவிடுவார்கள். அயல்நாட்டில் உள்ளவர்களும்—இந்தமாதிரி இரண்டு மூன்று டிபால்டர்களைக் கண்டவுடன் "நீங்கள் குறித்த காலப்படி, குறித்த நேரப்படி ஏற்றுமதி செய்வதில்லை, உங்களை நம்பி பெரிய வியாபாரத்தில் ஈடுபட முடியாது" என்று சொல்லி விடுவார்கள். வெளிநாட்டு மார்க்கெட்டை நாம் இழக்கும்படியாக நேரிடும். ஆகவேதான் இதை எல்லாம் தவிர்ப்பதற்காக நாம் ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் காண்டிராக்ட் முன் கூட்டியே செய்யவேண்டும் என்று செய்திருக்கிறோம்.

அடுத்து பவர்லூம்ஸ் வருவதால் கைத்தறி பாதிக்கப்படாது என்று யாரும் சொல்லமாட்டார்கள். நானும் சொல்லவில்லை. ஆனால் இன்றைக்குள்ள நிலைமையை நாம் பார்க்கவேண்டும். நமக்கு அண்டையில் இருக்கக் கூடிய மைசூர் ராஜ்யம், கேரள ராஜ்யம் ஆகியவை விசைத்தறி வேண்டுமென்று விரும்புகிறார்கள். பம்பாய் ராஜ்யத்திலும், மகாராஷ்டிர ராஜ்யத்திலும் ஏராளமாக விசைத்தறிகளை ஏற்படுத்திவிட்டார்கள். அது போல் குஜராத் பிரதேசத்திலும் ஏற்படுத்திவிட்டார்கள். இன்றையதினம் நம்முடைய தேசத்தில் நம் ராஜ்யத்தில் உற்பத்தி செய்யப்படவில்லை என்றாலும்—வேறு ராஜ்யங்களில் உற்பத்தி செய்யப்படுவன இங்கே வந்து விற்கப்படுவதைத் தடுக்க நமக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. ஆகையால் நாம் மாத்திரம் விசைத்தறி போடாமல் இருந்து மற்றப் பகுதியில் உள்ள ராஜ்யங்கள் போட்டு அதிகமான அளவு உற்பத்தி செய்து நம் ராஜ்யத்திற்குக் கொண்டுவருவது என்றால் நம் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுவிடும். ஆகையால் நாமும் கூடுமான அளவு விசைத்தறியை எடுத்து அதை நெசவாளர்களுக்குக் கொடுக்கும்படியான திட்டத்தை உருவாக்க வேண்டியதாக இருக்கிறது. அயலார் வேறு யாருக்குக் கொடுத்தாலும் நம்முடைய நெசவாளர்களின் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுவிடும். ஆகவே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கே கொடுக்கவேண்டும். நெசவுத் தொழிலோடு தொடர்பு கொண்டிருக்கிறவர்களுக்கே கொடுக்கவேண்டும் என்பதாக நாம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருக்கிறோம். விசைத்தறிகள் வருமானால் நிச்சயமாகச் சில ரகங்களை கைத்தறிகளுக்காக ஒதுக்கத்தான் வேண்டும். இதையும் மத்திய சர்க்காருக்கு வற்புறுத்தியிருக்கிறோம். குறிப்பாக 60 கவுண்ட்ஸ்களுக்குக் குறைவான நம் நூல்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற வேஷ்டிகள் எல்லாம், கலர்ச் சேலைகள் எல்லாம் ரிசர்வ் செய்யவேண்டுமென்று நாம் வற்புறுத்தி இருக்கிறோம். கரை போட்ட வேஷ்டி என்றால் கரை போடாத வேஷ்டி கட்டுகிறவர்கள் இருக்கிறார்கள். அந்தமாதிரி போடுவது

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [24th March 1965

ஒரு பாதுகாப்பாக இருக்காது. அறுபதாம் நம்பர் நூலுக்குக்கீழே என்று போட்டால்—அநேகமாக நான்கு முழம் கட்டுகிறவர்கள்—மிக மெல்லிய நூலினால் நெய்யப்பட்டதைக் கட்ட முடியாது—20-ஆம் நம்பர், 40-ஆம் நம்பர் வேஷ்டிகள் எல்லாம் ஒதுக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த விதமான சிபார்சையும் நாம் மத்திய சர்க்காருக்குச் செய்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கனம் அங்கத்தினர்கள் கூறிய தனித்தனியான கருத்துக்களுக்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். கைத்தறிச் சங்கங்களை நடத்துவதில் பல தவறுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். கைத்தறிச் சங்கங்களின் நிர்வாகிகள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். பழைய முறைப்படிகூட இல்லை. இப்போதுள்ள கூட்டுறவு முறைச் சட்டப்படி தேர்தலில் மறைமுக வோட்டுப் பெற்றுவரவேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறவர்களை "நீங்கள் வரக்கூடாது" என்று தடை செய்வது சங்கடமான காரியம். ஆனால் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகளை அவ்வப்போது கண்காணிப்பாக இருந்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். அதைவிட்டு ஒருவரை இத்தனை காலம்தான் இருக்கலாம், இதற்கு மேல் இருக்க முடியாது என்பதாக நாம் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் தடை செய்வது என்றால் இந்தத் துறைக்குப் பொருந்தக்கூடியதை மற்றத் துறைகளுக்கும் விஸ்தரிக்க முடியாதா என்கிற பிரச்சினை எல்லாம் எழும். ஆகவேதான் கண்காணிப்புடன் இருந்து எங்காவது குறைபாடு ஏற்பட்டால் அதை எடுத்துக்காட்டலாம், உடனடியாக அவர்களுக்கு வேண்டிய நிவாரணம் அளிக்கப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து திரு. கடம்பவனசுந்தரம் அவர்கள் சொன்னார்கள், "மோஸ்தர் மில் துணிகளில் இருப்பதுபோல் நன்றாக இருக்கவேண்டும்" என்பதாக. அதற்காகத்தான் இப்பொழுதே காலண்டர் ப்ளாண்ட் வைத்திருக்கிறோம். அது நன்றாக வேலை செய்கின்றது. மேற்கொண்டு சான்பரைசிங் போன்ற திட்டம் நடத்த வேண்டும் என்பதற்காகப் பணம் ஒதுக்கி நடத்துகிறோம். சான்பரைசிங் எவாசெட் முறையில் செய்வதற்காக வழி செய்யப்பட்டு இருக்கிறது.

அடுத்து திருமதி லக்ஷ்மிகாந்தம் அவர்கள் கைத்தறித் துணியில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அரசாங்கத்திற்கும் அந்தவிதமான தகவல் வந்திருக்கிறது. அந்தத் தேக்கத்தைப் போக்கத்தான் இப்போது நான்காம் தேதியில் இருந்து கைத்தறி வார விழாக் கொண்டாடுவதாக இருக்கிறோம். அதன்மூலமாக நல்ல விற்பனை ஆகும் என்று நான் நினைக்கிறேன். சாதாரணமாக நாம் ரூபாய்க்கு 5 நயா பைசா ரிபேட் கொடுக்கிறோம். இந்தக் கைத்தறி வாரத்தில் டபுள் ரிபேட்—அதாவது 10 நயா பைசா ரிபேட் கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறோம். அதனால் நல்ல வியாபாரம் ஆகும்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்றபோது சொன்னார்கள். கைத்தறி வார விழா கொண்டாடுகிற காலம் சரியாக இல்லை, அதனால்தான் அதிகப் பயன் தரவில்லை என்றார்கள். சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் வருஷத்திற்கு மூன்று முறை ஸ்பெஷல் ரிபேட் கொடுக்கிறோம். குறிப்பாக தீபாவளியின்போது ஸ்பெஷல் ரிபேட் கொடுக்கிறோம். பொங்கல் பண்டிகையின்போது கொடுக்கிறோம். கைத்தறி வார விழாவின் போது கொடுக்கிறோம். இருந்தும் தீபாவளியின்போது வியாபாரம் ஆவதைவிட, பொங்கல் சமயத்தில் வியாபாரம் ஆவதைவிட கைத்தறி வார விழாவின்போதுதான் ஏராளமாக வியாபாரம் ஆகிறது. இரண்டு கோடி ரூபாய் அளவுக்குச் சென்ற ஆண்டு கைத்தறி வார விழாவில் துணி செலவாயிற்று. விழாவில் வைத்திருக்கக்கூடிய கண்காட்சிகளைப் பார்க்க வருகிறார்கள். வேறு செலவுகளுக்கு வழி இல்லாமல்—கையில் பணம் இருப்பதால் மனதிற்குப் பிடித்ததாக இருந்தால் வாங்கிவிடுகிறார்கள். சர்க்காரைப் பொறுத்த வரையில் ஒரு வருஷத்திற்கு மூன்று தடவைகள் கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறோம். பல காரணங்களால் இந்த வருஷம் கொடுப்பதற்கு நாம் முயற்ச்சி எடுத்துகொள்ளவில்லை. ஆனால்



24th March 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

பொதுவாக ராஜ்ய சர்க்காரைப் பொறுத்தவரையில் ஒரு வருஷத்திற்கு மூன்று முறைகள் கொடுக்கவேண்டும் என்ற திட்டத்தைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறோம். இதைத் தவிர தேங்கி இருப்பதையெல்லாம் எடுத்துக்கொள்ள, நம்முடைய சொசைடிகள் மூலமாக 50 லட்ச ரூபாய் பணம் கொடுத்து, தேங்கியிருந்த துணிகளையெல்லாம் வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். ரிபேட் சம்பந்தமாக எடுத்துக்கொண்ட முயற்சிகள் நல்ல பலனை அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், ஜரிகை சம்பந்தமாக திரு. எஸ்.ஜெ. ராமசாமி அவர்கள் அதில் தவறு இருக்கிறது என்று சொன்னார்கள். ஜரிகையை நாம் சூரத்திலிருந்து வாங்குகிறோம். அதில் தவறு இருக்கிறது என்று சொன்னவுடன் அதைப் பரிசீலனை செய்துபார்த்தோம். பரிசீலனை செய்ததில் தங்கத்திலே குறைபாடு இல்லையென்றும், இந்தியன் ஸ்டாண்டர்டு இன்ஸ்டிடியூட்டின் தரத்திற்கு, அதனுடைய தரம் சரியாக இருக்கிறது என்றும் அவர்கள் பரிசீலனைசெய்து சொல்லிவிட்டார்கள். ஆகையால் இதைவிட உயர்ந்த ஜரிகை வேண்டுமென்று அவர் சொல்லியிருக்கலாமே தவிர, ஜரிகையில் தரக்குறைவு இருக்கிறது என்று சொல்லியிருக்கக் கூடாது. பட்டு சம்பந்தமாகவும் எந்தவிதமான தரக் குறைவும் வரவில்லை. இது சம்பந்தமாக இங்கே ஒரு ஜரிகை யூனிட் ஏற்படுத்துவது என்பது சர்க்காருடைய லட்சியம். அதற்காகச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். ஜரிகை கிடைக்காத நேரத்திலே நாம் சூரத்திலிருந்து ஜரிகை வாங்குகிறோம். ஆகவே, ஜரிகை கிடைக்காத நிலையிலே நாம் இருந்தபொழுது ஏற்பட்ட நிலையை திரு. எஸ்.ஜே. ராமசாமி அவர்கள் சொல்லியிருக்கலாம். தமிழ்நாட்டில் ஒரு ஜரிகை செய்யக்கூடிய ஃபேக்டரி ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

அடுத்தாற்போல் பொங்கலன்று கொடுத்தால், மாட்டுப் பொங்கலன்று கொடுக்கப்படுவதில்லை என்று புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னார்கள். அது மாதிரி ஒன்றும் விதிகள் இல்லை. சொசைடிகள் அவர்கள் விருப்பப் பிரகாரம் எழு நாட்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று தான் நிர்ணயம் செய்து கொடுத்திருக்கிறோம். ஆகையினால் மாட்டுப் பொங்கலன்று அவர்கள் கொடுத்தால் அதில் சர்க்காருக்கு ஆட்சேபணையில்லை. அவர்கள் மாட்டுப் பொங்கலன்று கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

கனம் உறுப்பினர் கணேசன் அவர்கள் சொன்னார்கள், அதிகமாகக் காலனிகள் அமைத்துக்கொடுக்கவேண்டுமென்று. காலனிகள் இப்பொழுது 34 இடங்களில் அமைத்துக் கொடுத்திருக்கிறோம். அருப்புக்கோட்டை, கோயம்புத்தூர், தர்மபுரி, கல்லிடைக்குறிச்சி போன்ற இடங்களில் காலனிகள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். இன்னும் அதிகமாகக் காலனிகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். ராஜ்யத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக இது சற்றுத் தடைப்பட்டது. நான் விரும்பிய அளவுக்கு இதைச் செய்யவில்லையென்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய நெருக்கடி ஏற்பட்டவுடன், இரும்பு, எஃகு, சிமெண்ட் போன்ற நமக்குத் தேவைப்படுகின்ற பண்டங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தால், அதிகமாகக் கட்டிடங்களுக்குச் செலவழிக்கக் கூடாது, அத்தியாவசியமான தேவைகளுக்கு அவைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டதால், இதில் தடை ஏற்பட்டது. இருந்தாலும் 34 இடங்களில் காலனிகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அடுத்த திட்டத்திலே மேலும் அதிகமான அளவுக்குக் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, திரு. செல்வராஜன் அவர்கள் 'செல்' வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். அது அக்கவுண்டன்ட்—ஜெனரல் அவர்களுடைய ஆலோசனை. அதன்படி, 'செல்'லிலே அதிகப்படியான கேஸ்களைப் பரிசீலனை செய்து அதிகப்படியான 'செக்ஸ்' செய்து தவறு இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டு வருகிறோம்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [24th March 1965

அடுத்தபடியாக, திரு. கணேசன் அவர்கள் நெய்யாத துணியை நெய்ததாகச் சொல்லி, விற்காத துணியை விற்றதாகச் சொல்லி ரிபேட் வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்று தெரியாது என்று நினைக்கிறேன். இதை நான் சென்ற வருஷத்தில் சட்டசபையிலே சொன்னேன். நெய்யாத துணியை நெய்ததாகச் சொல்லி, விற்காத துணியை விற்றதாகச் சொல்லி-அவர்கள் கண்ணாலே பார்த்ததாகச் சொன்னார்கள். நான் என்னுடைய கையாலே உத்திரவு போட்டேன்,-வருபவர்களுக்குக் கொடுக்கவேண்டிய ரிபேட்டை நீங்கள் கொடுத்ததாக வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். ரிபேட் சம்பந்தமாக எல்லா இடங்களிலும் மிகக் கண்காணிப்பாக, தவறுகள் செய்யமுடியாத அளவுக்கு ஏற்பாடுகள் செய்து இருக்கிறோம். ரிபேட் விஷயத்தில், தவறு இருப்பதாகத் தெரிந்தால் அவர்களுக்குப் பணம் டிரா பண்ணித் தருவதற்கு முன்னாலேயே அதையெல்லாம் சரிபார்த்து, ஆடிட்டர்கள் போட்டு விசாரணை செய்து, அதன்பிறகு, ஆடிட்டர்ஸ் ரிப்போர்ட் வந்த பிறகுதான் அவர்களுக்கு ரிபேட் கொடுக்கப்பட்டிருக்கிறது. எட்டு மணி நேரம் வேலை செய்தால் எந்த அளவுக்குக் கொடுக்கவேண்டுமோ அதைத்தான் கொடுத்திருக்கிறோம், அவர்கள், கூட ஒரு மணி நேரம் வேலை செய்திருந்தாலும் கூட அதைத்தான் கொடுத்திருக்கிறோம்.

**திரு. சா. கணேசன் :** அவர்களுக்குத் தண்டனையும் கொடுத்திருக்க வேண்டும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தண்டனையும் கொடுத்து இருக்கிறோம். இது விஷயத்தில் ருஜுப் கிடைப்பது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. ருஜுப் கிடைத்ததை வைத்து சில பேர்களுக்குத் தண்டனையும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றப்படி சொல்லியிருக்கக்கூடிய எல்லாக் கருத்துக்களுக்கும் நான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட்டதாக நினைக்கிறேன். ஸ்பின்னிங் மில்லிலே சம்பளத்தை உயர்த்துவது பற்றி திரு எஸ்.ஜே. ராமசாமி அவர்கள் சொன்னார்கள். அதற்காக ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். அந்தக் கமிட்டி ஸ்பின்னிங் மில்லிலே வேலை நேரம் எப்படி இருக்க வேண்டும், அவர்களுடைய சம்பளம் எப்படியிருக்கவேண்டும், என்பதையெல்லாம் பரிசீலனை செய்யும். அந்தக் கமிட்டி ஆலோசனை கூறியதற்குப் பிறகு எப்படி சம்பள நிர்ணயம் செய்வது என்பதைப்பற்றி ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைச் சொல்லிக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுவதுபோல், கைத்தறியிலே இந்த பில்லோ கவர்ஸ், அதாவது தலையணை உறைகளுக்கும் விலக்கு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தக் கோரிக்கை வந்த பொழுது, முதலிலே 2 சத வீதம் ஆக இருந்த வரியை 1 சத வீதமாகக் குறைத்திருக்கிறோம். மில்லிலே தைக்கின்ற தலையணை உறைகளுக்கு வரி இருக்கின்ற காரணத்தால், மில்லிலே தயாரிக்கப்படுகின்ற தலையணை உறைகளையும், கைத்தறித் தலையணை உறை என்று சொல்லி விற்க முற்படுவார்கள். அதையெல்லாம் கண்காணிப்பது மிகவும் கஷ்டமாக இருக்குமென்பதால்தான் அந்த வரியை வைத்திருக்கிறோம்.

**திருமதி பி.கே.ஆர். லக்ஷ்மிகாந்தம் :** நாற்பதாம் நம்பர் என்று நூல் ரகம் ஒதுக்கப்பட்டிருப்பதுபோல் 80, 100 என்றும் ரகம் ஒதுக்குவார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது நாம் மத்திய சர்க்காருக்குச் செய்திருக்கின்ற சிபாரிசு, 60-ஆம் நம்பருக்குக் குறைவாக உள்ள வேஷ்டிகளுக்கும், கலர்ச் சேலைகளுக்கும் அவை எந்த ரகத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம்—ஒதுக்கவேண்டுமென்பதுதான்.



24th March 1965]

Sri M. S. SELVARAJAN : Is there any proposal to increase the spindlage with the aid of the Central Government?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தந்தக் கூட்டுறவு சொசைடிகளிலே போதிய நிதிவசதி இருக்குமானால் விஸ்தரிக்கலாம் என்பது சர்க்காருடைய கொள்கை.

*** கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று கூட்டுறவுத் துறை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நமது தமிழ்நாடு மிகவும் முன்னணியில் நின்று கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். பற்பல துறைகளில் கூட்டுறவு இயக்கம் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றிய ஆய்வுரை ஒன்று இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருப்பதைக் கனம் மெம்பர்கள் எல்லோரும் வெகு நன்றாகப் பார்த்திருப்பார்கள். இன்று அநேகமாக எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் பரவி இருக்கின்றன. அந்தக் கணக்கில் பார்க்கும்போது தமிழ் நாடு பூராவிலும் கூட்டுறவுத் துறையிலே 42,60,000 உறுப்பினர்கள் உள்ளனர். நூற்றுக்கு எவ்வளவு என்று பார்த்தால் 86 சதவீதம் மக்கள் இன்று கூட்டுறவுத் துறையிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். நடுத்தர காலக் கடன்கள், நீண்டகாலக் கடன்களாக 47 கோடியும், மூன்றாவது திட்டத்தில் வருகிற ஆண்டில் 50 கோடியும் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமுதாயத்தில் பின்னடைந்த, நிலமற்ற குத்தகைதாரர்கள், சாகுபடியாளர்களுக்கு உதவி அளிக்கும் நோக்கத்துடன் முழு நிதித் திட்டத்தின் மூலம் கடன் கொடுக்க அரசாங்கம் உத்தரவாதம் அளித்திருக்கிறது. இது தவிர, கிராமச் சங்கங்களிலும், மாவட்டச் சங்கங்களிலும் " ஸ்பெஷல் டெட் ரிசர்வ் " என்று சொல்லக்கூடிய அளவிலே அரசாங்கம் மொத்தமாக மானியங்களை அளிக்கிறது. இதைப் போல் விற்பனைத் துறையைப் பொறுத்தவரையிலும் கூட மூன்றாவது திட்டத் தொடக்கத்தில் 482 கிடங்குகள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் 1,030 கிடங்குகள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இப்போது ஏற்கனவே வேலைகள் முடிந்து 80 கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக மேலும் 80 கிடங்குகளைக் கட்டி முடித்து விடுவார்கள். ஆக, அந்தத் துறையிலே கூட வேளாண்மைப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டிருக்கிற கணக்குகளைப் பார்த்தால் 11,77,00,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்திருக்கிறார்கள். ஆகவே, நடப்பு ஆண்டில் 1964-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ம் தேதி முடிய 13 கோடி மதிப்புள்ள விளை பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் உங்கள் மூலமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நெல் விளைச்சல் இருக்கக்கூடிய இடங்களில் அரிசி மில்களைப் புது மாதிரியாக வைப்பதற்கும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றிக் கேள்விகள் கேட்கப்பட்டு பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. 31 புதிய மில்களை ஏற்படுத்த சர்க்கார் முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே ஒன்று இருக்கிறது. அதைப் போல் பெரிய மில் என்ற முறையிலே திருவாரூரிலே இப்போது ஆரம்பிக்கப்பட்டிருப்பதைக் கனம் மெம்பர்கள் நன்றாக அறிந்திருப்பார்கள். அந்த மில் ஒரு ஆண்டிலே 30,000 டன் நெல்லை அரைக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்குமென்று பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதைக் கட்டுகின்ற செலவு 27 லட்சம் ரூபாய் வரை ஆகும் என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய பண உதவியும் மற்ற உதவிகளும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி கார்ப்பரேஷன் மூலமாகக் கொடுக்கிறார்கள். அந்த உதவியைக் கொண்டு செய்யப்படுகிறது. அவர்களை அரசாங்கத்தின் மூலம் வற்புறுத்தி வருகிறோம்.

கூட்டுறவுப் பண்ணைகள் சம்பந்தப்பட்ட மட்டிலும் இதுவரைக்கும் பணியாற்றி வந்த முறையைப் பார்க்கும்போது, ஏற்கனவே நடந்து கொண்டிருக்கக்கூடிய பணிகளை நல்ல முறையில் சீர்திருத்தி இன்னும் நன்றாக நடக்க வேண்டுமென்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகுதான் இன்னும் விரிவாகக் கூட்டுறவுப் பண்ணைகளை அமைக்கவேண்டிய திட்டங்கள் மேற்கொள்...

[திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்] [24th March 1965

நியாய விலைகளில் பண்டங்களை வழங்குவதில் தமிழ்நாட்டிலுள்ள பயன்கொள்வோர் பண்டகசாலைகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த அமைப்பின் கீழ் 27 மொத்த வியாபாரப் பண்டகசாலைகளும், 534 சில்லறைப் பண்டகசாலைகளும் உள்ளன. கடந்த ஆண்டுகளில் 15,17,00,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 12,95,00,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் விற்பனை செய்யப்படும். ஐம்பதாயிரம், அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊர்களிலும், நகரங்களிலும் இதைப போன்ற பண்டகசாலைகளை அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அநேக மெம்பர்கள் கேள்வி கேட்கும்போது, "இதை இன்னும் அதிகப்படுத்தவேண்டும், பத்தாயிரம் மக்கள் தொகை உள்ள இடங்களில்கூட இந்த மாதிரிப் பண்டகசாலைகளை ஏற்படுத்தவேண்டும் " என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்று சொல்லப் பிரியப்படுகிறேன். இந்தத் திட்டத்தில்கீழ் கூட்டுறவுப் பண்டக சாலைகள் முலமாக நடப்பு ஆண்டில் ரூ. 6.31 கோடி அளவுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அண்மையில் நமது தமிழ் மாநிலத்தில் உணவு நெருக்கடி ஏற்பட்டது. அப்போது அதிகமாக நெல் விளையக்கூடிய தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் இருந்து நெல்லைக் கொள்முதல் செய்ய இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் உதவியாக இருந்தன. சர்க்காருக்கு வேண்டிய நெல்லை ஏராளமான அளவுக்கு வாங்கிக் கொடுக்கும் முயற்சிகளை அவர்கள் தீவிரமாக எடுத்துக் கொண்டார்கள். ஒரு லட்சம் டன்னுக்கு மேலாக அவர்கள் மூலமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். கிட்டத்தட்ட கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் மதிப்பைப் பார்த்தால் 444 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சர்க்கரை ஆலைகளைப் பற்றி சக தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். தனியார் துறை சர்க்கரை ஆலைகளையும் மற்றவற்றையும் கணக்குப் பார்க்கும்போது 20 சத வீதம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலமாக சர்க்கரை உற்பத்தி செய்கிற வாய்ப்பு இடைத்து நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்று சொல்ல விரும்புகிறேன். இதைப்போன்ற சில விளக்கங்களை, விரிவாக அச்சடித்து உங்களிடத்திலே கொடுத்திருக்கிற காரணத்தால் சுருக்கமாக ஒருசில விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்ற முறையிலே இவற்றை எடுத்துச் சொன்னேன். என் உரையை முடிப்பதற்கு முன் சமுதாயத்தில் பின்னடைந்த வகுப்பினருக்காக உதவுகின்ற வகையிலே நல்ல பல காரியங்களைக் கூட்டுறவின் மூலமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டவன். கோவாப்பரேட்டிவ் லேபர் சொஸைடிஸ் என்று சொல்லக்கூடிய, தொழிலாளர்கள் சங்கங்களின் மூலமாக 1963-64-ல் $4\frac{1}{2}$ லட்சம் ரூபாய் அளவுக்கு மதிப்புள்ள வேலைகள் முடிக்கப்பட்டிருக்கிறன. இந்த
-00 m. ஆண்டிலே அதைப் பார்க்கும்போது $14\frac{1}{2}$ லட்சத்திற்கு மேலாக அவர்கள் வேலை செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் நல்ல உதவி செய்வது, சங்கங்கள் அதிகமாக ஏற்படுவது, அவர்களுடைய நல்ல முயற்சியும் ஊக்கமுந்தான் என்று நான் சொல்ல விரும்புகிறேன். சலவைத் தொழிலாளர்கள் சங்கங்கள் 12 உள்ளன. அதிலே மூவாயிரத்துக்கு மேற்பட்ட மெம்பர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் கொடுக்க, சாமான்கள் வாங்கக் கூடிய அளவிலே மூன்று லட்சம் ரூபாய் வரை அரசாங்கம் உதவியிருக்கிறது. கூட்டுறவு டாக்சி டிரைவர்கள் சங்கம் இருக்கிறது. அதிலே இப்போது பத்து வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. 23 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதிலேகூட பல பேருக்குப் பல சந்தேகங்கள் வருகின்றன. சென்ற ஆண்டிலும் பேசினார்கள், இந்த ஆண்டிலும் பேசப் போகிறார்கள். அது சில "கட் மோஷன் "கள் கொடுத்திருப்பதிலிருந்து தெரிகிறது.

டாக்ஸி ட்ரைவர்ஸ் சங்கம் இருக்கிறது. அந்த சங்கத்தில், அத்துறையில் உள்ளவர்களுக்கு அதில் இடம் இல்லை, மற்றவர்கள் இருப்பார்கள் என்று பேசக் கூடும். டாக்ஸி ட்ரைவர்ஸ் யூனியனில் 23 பேர்கள்



24th March 1965] [திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்]

இருக்கிறார்கள். மெக்கானிக்ஸ், ட்ரைவர்கள் போன்றவர்கள்தான் அங்கு அங்கத்தினர்களாக இருந்து நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். இன்னும் அதிக வண்டிகள் கொடுக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். உப்பு தயாரிக்கிற தொழிலாளர்களின் நன்மைக்காக 14 சங்கங்கள் உள்ளன. அதில் 6 சங்கங்கள் ஹரிஜனங்களுக்காக என்று தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 1,660 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள உப்பைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில், மதுரை மாவட்டத்தில் முடி திருத்துவோர் நலனுக்காக 3 சங்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 360 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நல்ல முறையில் அது வேலை செய்து வருகிறது. 60,000 ரூபாய் வரை நிதி உதவப்பட்டு விட்டது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஹரிஜனங்களின் நன்மைக்காக பால் வழங்கும் சங்கங்களுக்குக் கறவை மாடுகள் வாங்க கடன் கொடுக்க வழிவகை செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கங்களுக்கு 1963-64-ல் நான்கு லட்சம் ரூபாய் அளவில் நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

(There was some noise in the House.)

MR. SPEAKER : Order, order. I find that some hon. Members have formed themselves into small groups and are having discussion among themselves on all sides of the House. I have been noticing this almost every day. There are too many such ' conferences ' or ' sub-commitees '. I think there should be a limit to such group discussion within the House. I would like the hon. Members to occupy their respective seats.

Now, the Hon. Minister may continue his speech.

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** ஹரிஜன பால் வழங்கு சங்கங்களுக்கு வேண்டிய தொகை எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை எல்லாம் பார்க்கும்போது நல்லமுறையில் இந்த இயக்கம் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது என்ற சந்தோஷச் செய்தியைக்கூற கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கச் சார்பற்றவர்கள் இதில் ஊக்கத்தோடு பங்கு கொண்டதினாலும், மெம்பர்கள் நல்ல பல யோசனைகளைக் கூறுகிற முறையிலும் இந்தக் கூட்டுறவு இயக்கம் தமிழ் நாட்டில் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது என்று கூறி கனம் அங்கத்தினர்கள் நல்ல பல யோசனைகளைச் சொல்வார்கள், அப்போது விடை அளிக்கும்போது பின்னால் பேசிக் கொள்கிறேன் எனக் கூறி அமர்கிறேன்.

*** திரு. மு. பொ. வடிவேல் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மானியத்தின்மீது என் கட்சி உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம், தொழில், வாணிபம், விவசாயம், போக்குவரத்து இம்மாதிரி எல்லாத் துறைகளிலும் நல்லமுறையில் செயலாற்றிக்கொண்டு வருகிறது. இன்னும் சொல்லப் போனால் கூட்டுறவு இயக்கம் புகாத ஸ்தாபனமே இல்லை என்ற அளவிற்கு கூட்டுறவு இயக்கம் மற்ற மாநிலத்தவர்கள் நம்மைப் பார்த்து பொறாமைப் படக்கூடிய அளவிற்கு இந்த இயக்கம் நல்லமுறையில் வளர்ந்து ஓங்கி வந்திருக்கிறது. ஆனால் நம் மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் ஆரம்பித்து 50 ஆண்டுகள் ஆகியும் அதன் பொன்விழா கொண்டாடிய பிறகும்கூட கிராம மக்களுக்கு இந்தக் கூட்டுறவின் தத்துவம் நன்கு புரியவில்லை. கூட்டுறவு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் கூட்டுக்கொள்ளை அடிப்பவர்கள் என்ற மாதிரியில் பேசக்கூடிய அளவிற்கு கிராமங்களில் நிலை இருந்து வருகிறது. அந் நிலையைப் போக்கவேண்டுமென்றால் கூட்டுறவு இயக்கத்தின் தத்துவத்தை மக்கள் மனதில் பதியவைக்க நல்ல இயலிசை நாடகங்கள் மூலம் இந்தத் தத்துவத்தைப் புரிய வைக்க அரசாங்கம்

முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் வந்துவிட்டது என்று சர்க்கார் புள்ளிவிவரம் கூறுகிறது. ஆனால் பெரும்பான்மையான கிராமங்கள் இன்னும் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் வரவில்லை. ஆகவே இது தவறான கணக்கு என்றுதான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆலங்காயம் பஞ்சாயத்து ஒரு சிறிய எல்லையில் உட்பட்டது. அங்கு பத்து கிராமங்கள் இந்த இயக்கத்தின்கீழ் வரவேயில்லை.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அங்கத்தினர் அவர்கள் சொல்வது ஊர் என்ற முறையில் சொல்கிறார்களா ? ரெவினியூ கிராமம் என்று கணக்குப் போட்டுப்பார்த்தால் ஒரு கிராமத்திற்கு இரண்டு மூன்று கூட இருக்கிறது.

**திரு. மு. பொ. வடிவேல் :** நான் ரெவின்யூ கிராமத்தைத்தான் குறிப்பிடுகிறேன். ரெவின்யூ கிராமங்கள் பலவற்றில் தனிப்பட்ட பஞ்சாயத்துக்கள் இருக்கும் கிராமங்களில், பெத்தவேப்பம்பட்டு, நெக்னாமலை, புளிகம்பட்டு, புதூர், நெல்லிவாசல், ஜாபராபாத், சம்மந்திகுப்பம்—கணவாய்புதூர் போன்ற பத்து கிராமங்கள் இன்னும் இதன்கீழ் வரவில்லை. ஆனால் எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் வந்துவிட்டதாக சர்க்கார் புள்ளிவிவரம் கூறுகிறது. இப்படி உண்மைக்கு மாறான தகவல்கள் வருவது சரியல்ல. அதனால் பலர் பாதிக்கப்படுகிறார்கள். பல கிராமங்களில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று மனுப் போட்டால் அதற்காக 500 ரூபாய் ஷெயர் காப்பிடல் போட்டுவிட்டு மனு போட்டால் $1\frac{1}{2}$, 2 ஆண்டுகள் ஆகியும் சங்கம் ரெஜிஸ்டர் செய்யப்படாமல் இருக்கிறது. நான் ஒரு அதிகாரியைப் பார்த்து, ஏன் இவ்வளவு தாமதப்படுகிறது என்று கேட்டதற்கு சர்க்காருக்கு எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் வந்தாகிவிட்டது என்று தகவல் கொடுத்து விட்டோம், ஆகவே புதிதாக ரெஜிஸ்டர் செய்தால் ஏன் இம்மாதிரி தகவல் கொடுத்தீர்கள் என்று அமைச்சர் அவர்கள் கேட்கக்கூடும், ரெஜிஸ்ட்ரார் அவர்கள் கேட்கக்கூடும், அதனால் பயப்படுகிறோம் என்று சொல்லும் அளவில் இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த நிலையை நீக்கி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது எல்லா ரெவின்யூக் கிராமங்களையும் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டுவருவதற்கு வழிவகைகளை மேற்கொள்ளவேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன். அதோடு தவறான புள்ளிவிவரம் சேகரித்துக்கொடுத்த அதிகாரிகள்மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, கிராமங்களில் 1,000 ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். அதில் 250 ரூபாயை, 25 சதவிகிதத்தை உரத்திற்காகப் பிடித்துக்கொள்கிறார்கள். இம்மாதிரி பிடித்துக்கொண்டு உரமாகக் கொடுக்கிறார்கள். சில நிலங்களுக்கு யூரியா தேவைப்படுகிறது. சில நிலங்களுக்கு நைட்ரேட் தேவைப்படுகிறது. சில நிலங்களுக்குப் பிண்ணாக்கு தேவைப்படுகிறது. ஆனால் கூட்டுறவுச் சங்கத்தில் போய்க் கேட்டால் 250 ரூபாய்க்கு எல்லா உரத்தையும் கலந்து கொடுக்கிறார்கள். ஆகவே பெரும்பாலான க்ரெடிட் சொஸைட்டிகள் உரத்திற்காக 25 சதவிகிதம் பிடித்துக் கொள்ளக்கூடாது. 1,000 ரூபாயாகவே கொடுங்கள் என்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடமும் நேரில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைக் கவனிக்க வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். க்ரெடிட் யூனியன்கள் என்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. க்ரெடிட் யூனியன் என்று இருப்பதைவிட அதைப் பெரிய சங்கங்களாக மாற்றி ஆரம்பித்தால் மிகவும் நல்லமுறையில் இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். பலநோக்குச் சங்கங்களுக்கு 3,000 முதல் 5,000 ரூபாய் வரை கடன் கொடுக்கலாம் என்ற நிலை இருக்கிறது. ஆனால் அதில் ஒரு சங்கடமிருக்கிறது. அப்படிக் கொடுப்பதற்குப் புதிதாகப் பைலாவைத் திருத்த வேண்டும். ஒவ்வொரு சங்கமும் தனிப்பட்ட முறையில் கிராமத்தில் கூடி மகாசபை கூட்டி 3,000-ரூபாயில் இருந்து 5,000 ரூபாய் வரை கடன் கொடுக்கலாம் என்று திருத்தி சிபார்சு செய்து அதன் பேரில் கூட்டுறவு மேற்பார்வைக் கழகங்களுக்கு சிபார்சு செய்து டெப்டி ரெஜிஸ்ட்ரார் அதை அங்கீகரிக்கவேண்டும். அதனால் 6, 8 மாத காலம் சில சமயங்களில் ஆகி



து. ஆகவே அதை ரத்துசெய்து மாநிலம் முழுவதிலும் ரூபாய் வரை பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்கலாம் பொதுவான உத்தரவை வழங்க வேண்டுமென்ற என் அபிப் த்தை உங்கள்மூலம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் யில் மூன்றில் ஒரு பங்கு பேர்கள் வெளியேற வேண்டும் என்றி து. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வருடந்தோறும் தேர்தல் து அவ்வளவு சரியானது அல்ல. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு யாவது தேர்தல் வைத்துக்கொள்ளலாம். மூன்றில் ஒரு பங்கு ர் வெளியேறவேண்டும், ஆனால் அவர்கள் மீண்டும் தேர்தலுக்கு அருகதையுள்ளவர்கள் என்றால் அதன் பொருள் புரியவில்லை. டு ஆண்டுகளுக்கு மேல் ஒரு தலைவர் ஒரு ஸ்தாபனத்தில் இருக்கக் ு. மீண்டும் அவர்கள் தேர்தலில் நிற்கக்கூடாது.

**ாம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** எம்.எல். ள் எவ்வளவு பீரியட் வேண்டுமானாலும் மாற்றி மாற்றி வரலாம்.

**ந. மு. பொ. வடிவேல் :** அது வேறு விஷயம். ஆகவே ஒரு ர் இரண்டு முறைக்குமேல் பதவியில் இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டால் ர்கள் அத்துறையில் புக ஏதுவாக இருக்காது. மூன்றில் ஒரு வெளியேற வேண்டும் என்று வைத்துவிட்டு அவர்களே மீண்டும் வர ு இருக்கிறது. நான் ஒரு கூட்டுறவு இயக்கத்தைச் சார்ந்தவன் ல் மூன்றில் ஒரு பங்கு வெளியேறும்போது நானே மீண்டும் வர ு இருக்கிறது. அந்நிலை ஏற்பட்டால் மற்றவர்கள் உள்ளே வர யில்லை. ஆகவே இந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக் கிறேன். ஏனென்றால், கூட்டுறவு இயக்கத்தில் பதவி வகித்துக் ாடிருக்கும்போது, அது எவ்வளவுதான் நல்ல ஸ்தாபனமாக இருந் ், எப்போதும், இதை ஏதோ ஒரு சிலர்தான் ஏகபோக சொத்தாக கொண்டு வருகிறார்கள் என்று பரவலாகக் குற்றச்சாட்டுகள் சொல்லப் அதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே ிருக்கின்ற தேர்தல் முறையைச் சிறிதளவுக்கு மாற்றி அமைக்க டும் என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

போதெல்லாம், ஹவுஸ் மார்ட்கேஜ் பாங்குகளிலிருந்து கடன் ்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இது முனிசிபாலிட்டியாக ின்ற நகரங்களுக்கு மட்டும்தான், கடன் கொடுக்கும் முறை இருந்து ு. இப்போது அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. முனிசி டிகளுக்கு மட்டும் என்றில்லாமல் தாலூகா வாரியாக எல்லா ளிலும் இந்த ஹவுஸ் மார்ட்கேஜ் பாங்கை ஏற்படுத்தவேண்டும். நகரப் பஞ்சாயத்துக்களுக்குக்கூட விஸ்தரிக்கலாம். கூடுமான க்குப் பஞ்சாயத்து மன்ற தலை நகரங்களுக்கெல்லாம் விஸ்தரிக்க டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ட்டுறவு ஸ்தாபனத்தில் விற்பனை வரியை ரத்து செய்யவேண்டும் என்பது ுடைய ஆசை. விற்பனை வரியை ரத்து செய்துவிட்டால், கூட்டுறவு னம் உண்மையில் நல்லமாதிரி நடக்கும். கூடுமானவரை உணவுப் ட்களின் மீதுள்ள விற்பனை வரியையாவது ரத்து செய்யவேண்டும். ுபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் நன்மையாக இருக்கும். முன்தினம் பத்திரிகையில் பார்த்தேன், கேரளத்தில் உணவுப் ட்களின் மீதுள்ள விற்பனை வரியை ரத்து செய்திருக்கிறார்கள் என்று. வு முறையில் இருக்கின்ற எல்லா இடங்களிலும் விற்பனை வரியை செய்வதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

த்து, ஒரு ஊழியர் கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகிறார் என்றால், க்கு 300 ரூபாய்க்கு மேல் சம்பளம் இருக்கிறது என்றால் அவருக்கு ஸ் இல்லை என்று சொல்லப்படுகிறது. அது சரியல்ல, மற்றவர்களைப் லை இவர்களுக்கும் போனஸ் கொடுப்பதற்கு வழிவகை செய்ய டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு டெபுடி ரெஜிஸ்டிரார் களுக்கு மற்றத் துறைகளில் இருக்கின்ற கெஜடெட் ஆபீஸர்களுக்கு

கொடுக்கப்படுவதுபோல் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை என்று தெரிகிறது. டெபுடி ரெஜிஸ்டிரார் கெஜட்டட் ஆபீஸர்களாகவே பணியாற்றி வருவதால் இவர்களுக்கும் மற்றத் துறைகளிலுள்ள ஆபீஸர்களுக்குக் கொடுக்கப்படுவது போன்ற சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது, இந்தக் கூட்டுறவு ஸ்தாபனம் நல்லமுறையில் செயல்பட வேண்டுமென்றால், தேர்தல் முறைகளை மாற்றி அமைக்க வேண்டும். அதைச் செய்வதற்கு கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கூறிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் கூட்டுறவுத் துறை மானியங்களை ஆதரித்து சில வார்த்தைகள் பேச முன்வந்துள்ளேன். கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து தமிழ்நாட்டில் நல்ல முறையில் வளர்ந்து வருவதைப் பாராட்டி, அதற்காகக் கூட்டுறவுத்துறை பதிவாளர் அவர்களையும் மற்றவர்களையும் பாராட்டிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது முக்கியமாகச் சென்ற ஆண்டில் இருந்ததைவிட இந்த ஆண்டு ரிசர்வ் பாங்கார் அவர்களுடைய வட்டியை ஒன்றரை சத விகிதம் உயர்த்திவிட்டார்கள். அதன் காரணமாகக் குறுகிய காலக் கடனுக்கு வாங்கக்கூடிய வட்டி 8.4 சத விகிதமாகப் போய்விட்டது. அதே போன்று மூன்று ஆண்டுக் கடனை, கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகக் கொடுக்கப்படும் கடனுக்கு வட்டி 9.6 என்ற அளவுக்கு உயரக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. சாதாரணமாக முன்பு ரிசர்வ் பாங்கில் 3½ சத விகித வட்டி என்றிருக்கும்போது கன்ஸஷனல் ரேட் 2 சத விகிதம் என்று குறைத்து ரிசர்வ் பாங்க் வட்டிக்குத் தந்தார்கள். இப்போது 6 சத விகிதம் பாங்க் வட்டி என்று வந்தபோதும், 2 சத விகிதம் என்றே கன்ஸஷனல் ரேட் இருந்து கொண்டிருப்பது சிறிதும் பொருத்தம் இல்லை என்பதைத்தான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 8·4 என்று குறுகிய காலக் கடனுக்கு என்பதும் மத்திய காலக் கடனுக்கு 9·6 என்பதும் ஊரில் கொடுக்கக்கூடிய வட்டியின் அளவுக்கு வந்துவிடுகின்றன என்று நான் சொன்னால் அது எந்த அளவிலும் மிகையாகாது. ரிசர்வ் பாங்கார் கன்ஸஷனல் ரேட்டை 4 சத விகித அளவுக்காவது உயர்த்துவது மிக மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை நம்முடைய ராஜ்ய அரசாங்கம் ரிசர்வ் பாங்குடன் கலந்து, உணவுத்துறை, விவசாயத்துறை, நிதித்துறை இவைகளுடனும் கலந்து மத்திய அரசாங்கத்தில் எடுத்துக் கூறி வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்யாவிட்டால் கூட்டுறவு இயக்கத்தினால் கடன்வாங்கும் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 8.4 சத விகிதம் என்று சொல்வது 10 சத விகிதம் ஆகின்ற முறையில், அவர்கள் கொடுக்கின்ற ஷேர் காப்பிட்டல், அதற்கு மேல் கொடுக்கின்ற தொகைக்கு 8.4 சத விகிதம் வட்டி என்று சொல்லும்போது 10 சத விகிதம் என்று வந்துவிடும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகவே இதைக் குறைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, "ஓவர் ட்யூ" என்று சொல்லக் கூடியதைப் பொறுத்த அளவில், வி. எல். மேத்தா கமிட்டியின் பிரகாரம் ஒரு பாங்கியிலிருந்து சென்ட்ரல் பாங்குக்கு எவ்வளவு "ஓவர் ட்யூ" இருக்கிறதோ அந்தப் பணத்தைக் கட்டிவிட வேண்டும், கட்டிவிடுவதோடு மட்டுமல்ல, மீண்டும் "ஓவர் ட்யூ" இருந்தால் அந்த அளவுக்கு கிரேட் லிமிட்டை குறைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறை அமல் நடத்தப்படுவதன் காரணமாகச் சென்ற ஓராண்டு காலமாகக் கடன் கொடுத்துக் கொண்டிருக்கும் பாங்குகள் நல்ல முறையில் செயல்பட முடியாமல் இருக்கின்றன. ஒரு பாங்கிலிருந்து 50 லட்சம் ரூபாய் "ஓவர் ட்யூ" இருக்கிறது என்றால், ரிசர்வ் பாங்குக்கு அதைக் கட்டிவிட வேண்டும். இந்த 50 லட்சம் ரூபாய் பாக்கியைக் கட்டிய பின்னும் பாக்கி இருக்கக்கூடிய தொகையில் ஐம்பது லட்சம் ரூபாய்க்குக் கிரெடிட் லிமிடேஷன் குறைந்துபோய் விடுகிறது. இவ்விதம் ஒரு கோடி ரூபாய்க்கு





வசதியில்லாத நிலைமை ஏற்பட்டிருப்பதால், பாங்குகள் தொடர்ந்து விவசாயிகளுக்குக் கடன்கொடுக்க முடியாத நிலைமையில் ஆகிவிட்டிருக்கிறது. ஆகவே இதை முன்பு இருந்ததுபோல், ஓவர் ட்யூ மட்டும் கட்டினால் போதும், கிரெடிட் லிமிடேஷன் குறைக்கக் கூடாது. அதற்குத் தகுந்த முறையில் உத்தரவுகளைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னுமொன்று, டெப்பாஸிட்டுகளுக்கு சென்னை அரசாங்கம் கியாரண்டி கொடுத்து வருகிறது. ஆனால் ரிசர்வ் பாங்கார் அரசாங்கம் கியாரண்டி கொடுக்கவேண்டாம் என்று வற்புறுத்தி வருகிறார்கள். சென்ட்ரல் பாங்க் டெப்பாஸிட்டுகள் மட்டுமல்ல, மற்ற துறைகளில் இருக்கின்ற டெப்பாஸிட்டுகளுக்கும் சென்னை அரசாங்கம் கியாரண்டி கொடுத்து வருகிறது. ஷெட்யூல்ட் பாங்குகளைப் பொறுத்த வரையிலும் டெப்பாஸிட் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் என்று ஒன்றிருக்கிறது. அதே நேரத்தில் ரிசர்வ் பாங்கார் சென்ட்ரல் பாங்குகளுக்கு இம்மாதிரி ஒரு டெப்பாஸிட் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் கொண்டு வருவதற்கும் ஒப்புக்கொள்வதில்லை. அதற்கு அவர்கள் பல காரணங்களைச் சொல்கிறார்கள். அதைக் கொண்டு வரவேண்டுமென்றால் ராஜ்ய அரசாங்கம் சில விஷயங்களில் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த நிலைமை எப்படியிருந்தபோதிலும், ஒன்று, சென்ட்ரல் பாங்குகளுக்கு டெப்பாஸிட் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் இருக்க வேண்டும். அவ்விதம் வரும் வரையில் இந்த ராஜ்ய அரசாங்கத்தினுடைய கியாரண்டி இருக்க வேண்டும். கியாரண்டி எவ்வளவு சென்னை அரசாங்கம் கொடுத்திருக்கிறதோ, அதற்கான தொகை எல்லாம் பூர்த்தியாகிவிட்டதினால் இன்னும் மேலும் கியாரண்டி கொடுக்க ராஜ்ய அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஃபுட் கார்ப்பரேஷன் மூலமாகவும் கிராமத்தில் நேரடியாகக் கடன் கொடுக்கப் போவதாக பேப்பரில் செய்திகளைப் பார்க்கிறோம். அவர்கள் பணம் கொடுப்பதை வேண்டாம் என்று நான் சொல்ல முன்வரவில்லை. விவசாயிகளுக்கு நல்ல வட்டியில் கடன் எங்கிருந்து கடன் கொடுப்பதாக இருந்தாலும் அதைப் பாராட்டுபவன் நான். அதே சமயத்தில் கடன் யார் யாருக்குக் கொடுக்கப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். சாதாரண ஏழை விவசாயிகளுக்கும் கடன் கொடுக்கப் போகின்றார்களா என்பது தெரியவேண்டும். நல்ல வசதியுள்ளவர்களுக்கு மட்டும் கடன் கொடுத்துவிட்டு, சப்-மார்ஜினல் இருப்பவர்களுக்கு, அதாவது நிலமில்லாமல் இருக்கின்ற விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் கூட்டுறவு இயக்கத்தில் கொடுக்க வேண்டும் என்றால் எந்தவிதத்திலும் அது பொருத்தமாக இராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வசதியுள்ளவர்களை மட்டும் அவர்கள் எடுத்துக் கொண்டு, வசதியில்லாதவர்களுக்குக் கூட்டுறவு இயக்கத்திலிருந்து கடன் கொடுக்க வேண்டும் என்ற நிலை வருமானால் நிச்சயமாகக் கூட்டுறவு இயக்கம் பெருமளவுக்குப் பாதிக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஃபுட் கார்ப்பரேஷன் நேரடியாகக் கொடுப்பதாக இருந்தாலும் சரி, அல்லது ஷெட்யூல்ட் பாங்குகள் மூலமாகக் கொடுப்பதாக இருந்தாலும் சரி, அதற்குப் போதிய ஆர்கனைஸேஷன் இல்லாததால் இந்த நிலை இருக்கக் கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஒரு விஷயத்தைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஆடிட்டைப் பொறுத்த வரையிலும் பல கட்-மோஷன்கள் கொடுத்திருக்கிறார்கள். ஊழல்கள் என்ற அளவிலே பலர் பேசினார்கள். இந்த மாதிரி ஏதாவது தவறுதல்கள் நடப்பதாக இருந்தாலும், அதைத் தடுக்க எந்த அளவுக்கு ஆடிட் நல்ல முறையில் இருக்கிறதோ, ஆடிட் ஸ்டாஃப் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்குத் தான் கூட்டுறவு நிர்வாகம் இருக்க முடியும். இதை நல்ல முறையில் செய்ய ஆடிட் ஸ்டாஃப் அதிகமாகப் போட வேண்டும். ஆடிட் ஸ்டாஃப் அதிகமாகப் போடவேண்டுமென்று சொன்னால் அதில் லாபமா நஷ்டமா என்று பார்ப்பது சரியல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு சொஸைட்டியின் லேவாதேவி 10,000 ரூபாய் என்று இருந்த காலத்தில் எந்த அளவுக்கு ஆடிட் ஸ்டாஃப் இருந்ததோ, இப்போது சராசரி 7' 8

[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்] [24th March 1965

மடங்கு அதிகமாகியும் அதே அளவுக்கு ஆடிட் ஸ்டாஃபை வைத்துக் கொண்டால் நரம் குறைந்துவிடுகிறது. அதற்காக ஆடிட் ஸ்டாஃபை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

டெபுடி ரிஜிஸ்டிராருக்கு டெலிஃபோன் வைக்க வேண்டுமென்று சொன்னதில் ஹெட்க்வார்ட்டர்ஸ் டெபுடி ரிஜிஸ்டிரார்களுக்கு வைத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கு வைக்கவில்லை. இதனால் சங்கங்களுடைய கஷ்டங்கள்தான் அதிகமாக ஆகிவிடுகிறது. ஏதாவது தகவல் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் ஜில்லாத் தலைநகருக்கு வந்துதான் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அல்லது டெபுடி ரிஜிஸ்டிரார் ஆஃபீஸ் எங்கு இருக்கிறதோ அங்கு வந்து தகவல் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஆகையால் எல்லா டெபுடி ரிஜிஸ்டிரார் ஆஃபீஸுக்கும் டெலிஃபோன் வைக்கவேண்டும்.

டெபுடி ரிஜிஸ்டிரார்களைப் பொறுத்த வரையில் டெபுடேஷன் அலவென்ஸ் கூட்டுறவு இலாகாவினருக்கு மாத்திரம் 20 சத விகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற எல்லா இலாகாவினருக்கும் 25 சத விகிதம் வைக்கப்பட்டிருக்கிறது. பண விஷயத்தில் இவர்கள் ஈடுபட்டிருப்பதால் மற்ற இலாகாவினருக்கு இருப்பதைவிட இவர்களுக்கு அதிகமாக இருக்க வேண்டும். மற்ற இலாகாக்களைவிட இங்கு 20 சத விகிதம் என்று குறைத்திருப்பது நியாயம் அல்ல, அதையும் உயர்த்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, கூட்டுறவே நாட்டுயர்வு என்று பேசப்பட்டு வந்தாலும், அது ஒரு சிலருடைய வீட்டுயர்வாக ஆகிவிடக் கூடாது என்பதற்காக நான் என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாகத் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் கூட்டுறவு இயக்கம் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வந்திருக்கிறது, வந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகை ஆகாது. ஆனாலும் ஆங்காங்கு ஒரு சில இடங்களில் ஏற்படுகிற சிறு தவறுகள் காரணமாக இயக்கத்திற்கே மாசு வந்துவிடுமோ என்று அஞ்சுகின்ற காரணத்தினால் அவற்றைப் பற்றி மட்டும் ஒரு சில கருத்துக்களைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கம் மிக நல்ல முறையில் பணியாற்றி வருகிற இந்த நேரத்தில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறபடி, இதில் இருக்கின்ற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவது, இதில் இருக்கின்ற குறைகள் என்று கருதாமல், எந்தெந்த வகையில் நிவர்த்திக்க வேண்டும் என்ற என்னுடைய யோசனையாக ஏற்றுக் கொண்டால் உண்மையிலேயே மிக நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பொதுவாக, தேர்தல் முறைகளிலே பார்க்கும்போது இப்போது இருக்கும் சங்கத்தின் விதிகள்—பைலாஸ்—அவ்வப்போது அவரவர்களுக்கு வேண்டிய வழியில் திருத்திக் கொள்ளப்படுவதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கின்ற காரணத்தினால் ஒரு சில இடங்களிலே புதிதாகத் தேர்தல் நடத்தியும், பழைய தலைவரிடத்திலிருந்து சார்ஜ் வாங்கிக் கொள்ள முடியாது இருக்கிறது. தேர்தல் நடத்தியவர்கள் வாங்கிக் கொடுப்பதா, அல்லது டெம்பரரி ப்ரெஸிடென்ட் வாங்க வேண்டுமா என்று புரியாத நிலை இருக்கிறது. சமீபத்தில் எங்கள் மாவட்டத்தில் இருந்து இரண்டு மூன்று வழக்குகள் அந்த முறையில் ஹைக்கோர்ட்டுக்கு வந்திருக்கிறது. இதைப் போன்று நாளடைவில் வரக் கூடாது என்பதற்காகத் தேர்தல் விதிகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு பைலா இருக்கிறது. பால் சொஸைட்டிக்கு என்று தனிப்பட்ட பைலா இருக்கிறது, மற்ற கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட பைலா இருக்கிறது. இப்படி ஒவ்வொரு சங்கத்திற்கும், சங்கத்தில் இருப்பவர்கள் தங்கள் வசதிக்கு வாய்ப்புக்கு ஏற்றவாறு



24th March 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

அவைகளை அமைத்துக்கொள்வதால் பல கோளாறுகள் வருகின்றன. நம்முடைய நிர்வாகமோ அல்லது அரசோ தலையிட்டு, கூட்டுறவு சங்கங்களுக்கென்று தனி விதி அமைத்தால் கூட நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதோடு அண்மையிலே நான் தென்காசி பகுதிக்குச் சென்று வந்த போது அங்கு அந்த சங்கத்தில் ஏற்பட்ட சிறு ஊழலை அமைச்சரவைக்குக் கவனப்படுத்த விரும்புகிறேன். தென்காசி செங்கோட்டை கூட்டுறவு விற்பனைச் சங்கம், கடையநல்லூர் என்ற சங்கத்திற்குக் கட்டடம் கட்ட நிலம் வாங்கப்பட்டது ஒரு ஏக்கர் முப்பத்து நான்கு சென்ட். முதன் முதலாக 1958-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 24-ந் தேதி ஒருவர் அந்த நிலத்தை 500 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார். அந்த நிலம் 1962-ம் வருடம் நவம்பர் மாதம் 5-ந் தேதியில் இன்னொருவருக்கு 3,000 ரூபாய்க்கு விற்கப்பட்டது. 1962-ம் வருடம் நவம்பர் மாதம் 15-ந் தேதியில் பத்து நாட்களுக்குள், அந்த நிலத்தில் 45 சென்ட் நிலமானது 3,500 ரூபாய்க்குச் சங்கத்திற்கு வாங்கப்பட்டது. 1963-ம் வருடம் பிப்ரவரி மாதம் 25-ந் தேதி பாக்கி 89 சென்ட் நிலம் அதே சங்கத்திற்காக 6,500 ரூபாய்க்கு வாங்கப்பட்டது. 500 ரூபாய்க்கு 1958-ல் வாங்கப்பட்ட நிலம் 1962-ல் 3,000 ரூபாய் என்றால் ஒத்துக் கொள்ள முடியும். ஆனால் அதற்குப் பிறகு 1962-ம் வருடம் நவம்பர் மாதம் 15-ந் தேதியில் 10,000 ரூபாய்க்குச் சங்கத்திற்கு வாங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவு பெறமுடியவில்லை. அது மட்டுமல்ல கடையநல்லூர் கூட்டுறவுச் சங்கத்தைத் தணிக்கை செய்யச் சென்ற டீ.ஆர்.ஓ. தாக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. தாக்கப்பட்டதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று புரியாத நிலையில், தாக்கப்பட்டவர் அந்த ஊரிலிருந்து மாற்றப்பட்டிருக்கிறார். சங்கங்களுக்குப் போகிற டீ.ஆர்.ஓ.-க்களும் ஆடிட் செய்கிறவர்களும் கவனிக்கப்படாமல் தாக்கப்படுகிற நிலை ஏற்பட்டால், கூட்டுறவுச் சங்கத்தில் பல காலம் இன்னும் தங்களுடைய பழக்கத்திலேயே வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் வேறு பல தொல்லைகளும் கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள். அதிகாரிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டால்தான் கூட்டுறவு நல்ல முறையில் பணியாற்றும் என்று கூறிக்கொள்கிறேன். நிச்சயமாக எந்தச் சங்கத்திற்கும் பாகுபாடு இருக்கக் கூடாது. சென்ற தடவை நான் சில குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்ட போது, முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லாமல் திசையை வேறு பக்கம் திருப்பி விட்டார்கள். பொதுவாக மொத்த விற்பனை சங்கங்களாக மாற்றப்பட்டதில் 27, 28 சங்கங்கள் அந்த மாதிரி மாற்றப்பட்டிருக்கின்றன. அப்படி மாற்றப்பட்ட போது இப்போது இருக்கிற தேர்தல் விதிப்படி தொகுதிகளைப் பிரித்து, தொகுதி மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற பொது விதி முறை கொண்டுவரப்பட்டிருக்கின்ற காரணத்தினால் கொஞ்சம் அவகாசம், ஒரு மாதம் அல்லது 15 நாள் அவகாசம் கேட்டு ரிஜிஸ்டிராரிடத்தில் மனுக்கள் கொடுக்கப்பட்டன. என்னுடைய தொகுதியிலே, எங்கள் மாவட்ட அர்பன் கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்ஸுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை, அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்று ரிஜிஸ்டிராரிடமிருந்து உத்திரவு வந்தது. அதே மாதிரியான ஒரு சங்கத்திற்கு, புதுக்கோட்டை சங்கத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை சங்கத்திற்கு அனுமதி அளித்து, திருச்சிக்கு அனுமதி அளிக்காத காரணம் என்ன என்று தெரியவில்லை.

இப்போது ரிஸர்வ் பாங்க் மூலம் வாங்கும் பணத்திற்கு அவர்கள் போடும் வட்டி வீதம் மார்வாரி வட்டியை விட அதிமாகப் போய்விட்டது. கிராமத்திற்கு வரும் நேரத்தில் 9½ சத வீதம், 10 சத வீதம் என்ற அளவுக்குப் போய் விடுகிற காரணத்தினால் கூட்டுறவு சங்கத்தினால் பலன் இருக்கிறதா என்று யோசித்துப் பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல. அக்ரிகல்ச்சுரல் பாங்கில் ஒரு விவசாயி நகையை வைத்துக் கடன் வாங்க வசதி இருந்தது. ரிசர்வ் பாங்கிலிருந்து போதுமான அளவுக்குப் பணம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், இந்தக் கடன்களை நிறுத்தும்படி சொன்ன காரணத்தினால் அந்த முறையில்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [24th March 1965

சென்ட்ரல் பாங்க்குக்கு உத்திரவு அனுப்பப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். நகையை பாங்கில் வைத்து வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் மறுபடியும் மார்வாரி அல்லது அதிக வட்டி வாங்குகிறவர்களிடத்தில் போய்ச் சேர வேண்டிய நிலை ஏற்படும். அதையும் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு சிறிய சொஸைட்டிகளை, கிராம சொஸைட்டிகளை ஆடிட் செய்வதிலே ஒரு ஆடிட்டருக்கு 15 சொஸைட்டிகள் என்று ஏற்பாடு செய்திருந்தார்கள். இப்போது லட்ச ரூபாய் அல்லது 90,000 ரூபாய் அளவுக்கு வரவு-செலவு இருக்கும்போது பழைய ஆடிட் முறை இருப்பது நல்லதல்ல. அதிகமாக, அடிக்கடி தணிக்கை செய்யும் முறை இருந்தால் கிராமச் சங்கங்கள் மிகச் சிறந்த முறையில் பணியாற்ற வசதியும் வாய்ப்பும் இருக்கும் என்று கூறிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

30
n. *** திரு. கோ. நாராயணசாமி நாயுடு :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேசுவதற்கு விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே சில விஷயங்களைச் சொல்ல வேண்டிய அவசியம் இருப்பதினால், அதுபற்றி பேச முன்வந்துள்ளேன். இந்த மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் ரொம்ப நல்ல முறையில் நடந்துவருகிறது என்பதை இந்த நாட்டில் எல்லோரும் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். கூட்டுறவு டெபுடி காரி ஒருவர் எங்கள் ஊருக்கு வந்தபொழுது, "பாக்கி மாகாணங்களில் கொடுத்த கடனில் 10 சத வீதம் கூடத் திரும்பி வரவில்லை, நம்முடைய மாகாணத்தில் 90 சத வீதம் திரும்பி வந்துவிடுகிறது, ஆகையினால் தைரிய மாக உழவர்களுக்குக் கடன் கொடுக்கலாம்" என்று தெரிவித்தார்கள். பல்வேறு வகை கூட்டுறவு சங்கங்கள் தமிழ் நாட்டில் நடந்து வருகின்றன. அதெல்லாம் ரொம்ப நல்ல முறையில் நடப்பதாகத் தான் எல்லோரும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

விவசாயக் கூட்டுறவுச் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அது எந்த இடத்திலும் சரியாக நடக்க முடியாத ஒரு நிலையை சர்க்கார் உண்டாக்கியிருக்கிறார்களா அல்லது சம்பந்தப்பட்ட கோவில் அதிகாரிகள் உண்டாக்கியிருக்கிறார்களா என்பதைப்பற்றி என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. 4, 5 வருஷங்களுக்கு முன்பு குற்றாலத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு நாங்கள் ஏற்பாடு செய்தோம். மதிப்பிற்குரிய இன்றைய முதல் மந்திரி அவர்கள் அந்தக் கூட்டுறவு சங்கத்தைத் துவக்கி வைத்தார்கள். துவக்கிய காலத்திலிருந்து இன்று வரையிலே குத்தகை வாரச் சீட்டு எழுதப்படவில்லை. குத்தகை வாரச் சீட்டு ஏன் எழுதப்பட வில்லை என்று கேட்டால், பாக்கியைக் கட்டியாய் விட்டதா என்று தான் திரும்பத் திரும்பக் கேட்கப்படுகிறது. ஏற்கனவே ஒரு புதுச் சட்டம் கொண்டு வந்தோம், 60, 40 வாரச் சட்டம் கொண்டு வந்தோம். அந்தச் சட்டத்தை எங்கள் ஊர் பண்டார சன்னதி ஒப்புக் கொள்ளவில்லை. "கடவுளுக்கு அடுத்தாற்போல் இருக்கிற எனக்கு சர்க்கார் என்ன சட்டம் போடுவது, எந்த மாதிரி சட்டமானாலும் என்னைக் கட்டுப்படுத்த முடியாது" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். கூட்டுறவு அமைச்சர் அவர்கள் அவருடைய பக்தர். அவராவது இந்தச் சட்டம் மக்களுடைய நன்மைக்காகத்தான செய்திருக்கிறோம் என்று சொல்லி அவர்களை ஒப்புக்கொள்ள வைக்க வேண்டும்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினருடைய உடையைப் பார்த்தால், அவர் தான் பெரும் பக்தர் மாதிரி இருக்கிறது.

**திரு. கோ. நாராயணசாமி நாயுடு :** நான் சாமியார் மாதிரி இருக்கிறேன், ஆனால் சாமியார் இல்லை. எங்களைச் சேர்ந்த ஆட்கள் 10,000 பேர்கள் சாமியார் உடை தரித்துக் கொண்டு சாப்பாட்டுக்கு இல்லாத நிலையில் இருப்பதை மாற்றி, வெள்ளை சட்டை போட்டுக்கொள்வதற்கான நிலையை உண்டாக்க சர்க்கார் யோசனை சொன்னால் நலமாக இருக்கும்.



24th March 1965] [திரு. கோ. நாராயணசாமி நாயுடு ]

நான்கு வருஷமாக எப்பொழுது கேட்டாலும் பாக்கி, பாக்கி என்று குத்தாலம் கோவில் அதிகாரிகள் சொல்லுகிறார்கள். வருகிற அதிகாரிகளும், விசாரணை ஏதும் செய்யாமலே—பாக்கி என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த குத்தகைதார் எவ்வளவு நெல்லை அளந்து கொண்டிருந்தாரோ அதை வைத்துக் கொண்டு கோவில் அதிகாரிகள் பாக்கி, பாக்கி என்று சொல்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு அதிகாரிகளும் "நீங்கள் பாக்கியைக் கொடுத்துவிட்டீர்களா" என்று தான் கேட்கிறார்கள். பாக்கி எப்படி ஏற்பட்டது, எந்தவிதமாக ஏற்பட்டது என்று யாரும் கவலைப்படுவதில்லை. அந்த பாக்கி போகட்டும். இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்பு, இரண்டு மந்திரிகள், விவசாய மந்திரியும், பி.டபிள்யூ.டி. மந்திரி பெரியவர் இரண்டு பேர்களும் வந்து எங்கள் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபொழுது, நிலைமையை நேரில் கண்டு அதற்குப் பரிகாரம் தேடித் தந்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஏதாவது ஒரு பரிகாரம் செய்வார்கள் என்று எதிர் பார்த்தோம். பாக்கி என்ன ஆயிற்று, பாக்கி என்ன ஆயிற்று, குத்தகை வாரச் சீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்று மேல் அதிகாரிகள் கோவில் பெருச்சாளிகளின் குரலை எதிர் ஒலிக்கிறார்கள். பழைய காலத்தில் கொசுக் கதை சொல்வார்கள். குடகு நாட்டில் காவேரி உற்பத்தி ஸ்தானத்தில் ஆண் பிள்ளை கொசு பெண் பிள்ளை கொசுவை கூப்பிட்டு, "கொஞ்சம் மிதியடியைக் கொண்டுவா" என்று சொன்னதாம். எதற்காக என்று பெண் கொசு கேட்ட பொழுது, "நன்றி கெட்டான் சீமைக்குத் தண்ணீர் காட்டப் போகிறேன்" என்று சொன்னதாம். பெண் கொசு "எப்பொழுது திரும்புவாய் ?" என கேட்டதற்கு "தட்டுக்கும், கொட்டுக்கும் பிழைத்திருந்தால், தை மாதக் கடைசியில் திரும்பி வந்து விடுவேன்" என்று சொன்னதாம். தை மாதத்தில் எங்கள் ஜில்லாவில் கொசு ஒழிந்து விடும். சர்க்கார் அதே விதமாக தன் அக்கறையின்மையால் தட்டுகிறது. இன்னொரு பக்கத்தில் பண்டார சன்னதி கொட்டுகிறார். கூட்டுறவுச் சங்கம் அதிலும் குத்தகைதாரர்கள் கூட்டுறவுச் சங்கம் அலட்சியத்தாலும், அடாவடித்தனத்தாலும் தானே ஒழியும்படி செய்யப்படுகிறது. இனிமேல் அந்த மாதிரி இருக்கக் கூடாது. சர்க்கார் கூட்டுறவுத் துறைக்கு வண்டி, வண்டியாக ஆதரவு கொடுக்கிறார்கள். நாடு வளர வேண்டும், நாட்டிலே நிலம் பற்றாக்குறை இருக்கிறது. தனித்தனியாக வைத்துக் கொள்வதற்கு போதுமான அளவு நிலம் கிடையாது, பலர் சேர்ந்து கூட்டுறவு முறையில் சாகுபடி செய்தால் தான் உற்பத்தி அதிகமாகும், செலவும் குறைவாகும் என்ற அடிப்படையில் தான் கூட்டுறவு விவசாயச் சங்கங்களைப் பல்வேறு பகுதிகளில் அமைத்தோம். அதை பலப்படுபடுத்த வேண்டும். "அவளையோ காணோம், பிள்ளைகள் எத்தனை பேர்கள்" என்று கேட்கிற மாதிரி, எங்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு எந்த விதமான பணமும் கிடையாது, உதவியும் கிடையாது. ஆனால், ஆடிட் பீஸ் பற்றித் தவறாமல் தபால் வந்துவிடுகிறது. எங்களுடைய சங்க உதவிக்காக இன்ஸ்பெக்டர் என்று ஒருவர் போடப்பட்டிருக்கிறார். அவர் எந்த உலகத்தில் இருக்கிறார் என்பதை இனிதான் கண்டு கொள்ள வேண்டும், தெரியவில்லை, ஆடிட் பீஸுக்கு மாத்திரம் ரிஜிஸ்டர் காகிதம் வந்துவிகிறது. பணமே இல்லாத நிலையிலே வருஷாவருஷம் ஆடிட்டிற்காக ரூ. 100, 200 என்று அழவேண்டியிருக்கிறது. இப்படியே விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டு வந்தால், அதனால் பண்டார சன்னதிக்குத் தான் பலன் கிடைக்கும். கடிலாக் காரை விட்டுவிட்டு, ரோல்ஸ் ராய்ஸ் கார் வாங்குவார். அதனால், குடி மக்களுக்கு ஒரு பைசா கூடப் புண்யம் இருக்காது. மக்களை வாழவிடாதவர்களை நான் பக்தர் என்று சொல்ல முடியாது. மாடு வாங்கினால், கன்றுக்குட்டியும் கூட சேர்ந்தது தான், என்பது உலகப் பழக்கம். அப்படியில்லாமல், கோவிலார் மாதிரி வயல் கூட்டுறவு சங்கத்தாருடையது, வரப்பு எங்களுடையது, நஞ்சை சங்கத்தைச் சேர்ந்தது, புஞ்சை எங்களுடையது என்று சொல்லிக் கொண்டிருந்தால் என்ன செய்வது ? அப்பொழுது தானே வரப்பை உடைத்துவிட்டால், தண்ணீர் தானக ஓடிப் பயிர் நாசமாகுமா, இல்லையா ? வரப்பு எங்களுடையது, நிலம் உங்களுடையது, மரம் எங்களுடையது, பூமி உங்களுடையது என்று சொல்லுகிறார்கள். மரத்திலிருந்து என்ன வருமானம் வருகிறதோ அதைக் கொடுத்து விடுகிறோம், மரங்களை நாங்கள் குத்தகைக்கு எடுத்துக் கொள்

[திரு. கோ. நாராயணசாமி நாயுடு] [24th March 1965

கிறோம் என்று சொன்னால் அதற்கும் ஒத்துக்கொள்வதில்லை. நஞ்சை எங்களுடையது, புஞ்சை அவர்களுடையது என்று சொல்லுகிறார்கள் கோவிலார்கள். புஞ்சையில்லாத நஞ்சைக்கா குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுப்பது? வரப்பு இல்லாத வயலுக்கா குத்தகை சீட்டு எழுதிக் கொடுப்பது, வைக்கோல் போர் போட இட மில்லாமலா, பட்டறை போட இடமில்லாமலா குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுப்பது ? இப்படியெல்லாம் செய்தால் இந்த சங்கங்கள் தானாகவே ஒழிந்து விடும் என்று ஏற்பாடு செய்வதுபோல் தான் தோன்றுகிறது. நானும் நான்கு வருஷங்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். பாக்கி யெல்லாம் கொடுத்தாய் விட்டதா என்று தான் அதிகாரிகள் கேட்கிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். "எப்படி பாக்கி ஏற்பட்டது என்று நீங்கள் தான் சொல்ல வேண்டும்". உலகத்திலேயே இந்த மாதிரி நிலையில் ஒருவரும் குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுக்கமாட்டார்கள். எங்கள் ஜில்லாவில் எந்த இடத்திலும் இம்மாதிரி நிலை கிடையாது. இல்லாத ஒரு பழக்கத்தைச் சொல்லி, இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்றால் இயலுமா ? சன்னிதானத்தோடு சண்டை போட்டுக்கொள்வதில் பயன் இல்லை, வேறு வழியில்லை. புண்ணியத்திற்காக விட்டுத் தொலையுங்கள் என்றாவது சொல்லட்டும். உணவு உற்பத்தி பெருக வேண்டும், உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கவேண்டும் என்று ஒரு பக்கம் லட்சக்கணக்கான ரூபாயைச் செலவழிக்கிறோம். இன்னொரு பக்கம் அது முடியாதபடி என்னென்ன தடை செய்ய வேண்டுமோ, அவைகளைச் செய்து கொண்டிருந்தால், நிச்சயம் சர்க்கார் திட்டம் நிறைவேறாது. மந்திரி அவர்கள் மடத்திற்கு ரொம்ப வேண்டியவர், அவருடைய சிஷ்யப் பிள்ளை. அவர்கள் முயற்சி செய்து, உணவு உற்பத்தி பெருக வேண்டும், குடி மக்கள் வாழ வேண்டும், சர்க்கார் வாழ வேண்டும் என்று எடுத்துச் சொல்லி, இந்தப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்கவேண்டும், இந்த ஒரு சங்கம் மாத்திரமல்ல, எந்தெந்தச் சங்கங்கள் கோவில் துவாராவில், மடத்து துவாராவில் இருக்கின்றனவோ அந்த சங்கங்களை யெல்லாம் மூடவிடுவதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை இந்தச் சபையின் மூலம் மந்திரி அவர்களுக்கு எடுத்துக் காட்டி, அதற்கு அவர்கள் உடனே பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டு வரப்பட்டுள்ள கூட்டுறவு இலாகா சம்பந்தமான மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

இந்த இலாகாவிலுள்ள அலுவலர்கள், நடுநிலை அதிகாரிகளுக்கு ஒரு சில குறைகள் பல ஆண்டுகளாக இருந்து கொண்டுவருகின்றன. அவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக பல ஆண்டுகளாக இருக்கிற குறை அது. பல ஆண்டுகாலமாக அவர்கள் வேலையில் இருந்தாலும் சர்வீஸில் இருந்தாலும், ஏதோ சில டிபார்ட்மெண்ட் பரீட்சைகள், தேர்வுகள், டெஸ்டுகள் பாஸ் செய்யவில்லை என்று அவர்கள் வேலையிலிருந்து இறக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது. அதன் காரணமாக, ஜூனியர் இன்ஸ்பெக்டர்களை எடுத்துக் கொண்டால், குறைந்தது 20, 30 வருஷம் சர்வீஸ் போட்டு விட்ட பிறகும், ஒரு சில டிபார்ட்மெண்ட் டெஸ்டுகள் பாஸ் பண்ணாத காரணத்தினால், 20, 30 ஆண்டுக்குப் பிறகும், ரிடையர் ஆகி, பென்ஷன் வசதி இல்லாத நிலையில், கட்டிய துணியோடு போகும் நிலைமைதான் இருக்கிறது. அவர்கள் 10, 15 ஆண்டுகள் சர்வீஸ் போட்டு விட்டால், அவர்களுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டும். அதே போன்று, ஜூனியர் இன்ஸ்பெக்டர்கள் பல ஆண்டு காலமாக ஸீனியர் இன்ஸ்பெக்டர்களாக ஆக்ட் பண்ணின பிறகும், டெஸ்ட் பாஸ் பண்ணவில்லை என்று ரிவர்ட் ஆகும் நிலைமை இருக்கிறது. 10, 15 ஆண்டுகள் ஆக்ட் பண்ணின பிறகு, பர்மனெண்ட் செய்வதில் என்ன கஷ்டம் என்று புரியவில்லை. அவர்களுக்கு ஏதாவது விதிவிலக்கு கொடுத்து அவர்களை உயர்ந்த பதவியில் பர்மனெண்ட் செய்ய வேண்டும்.



24th March 1965] [திரு. வை. சங்கரன் ]

ஸீனியர் இன்ஸ்பெக்டர்கள் டைரக்டாக ரிக்ரூட் பண்ணுகிறார்கள். அவர்கள் மூன்று ஆண்டுகளில், டெஸ்ட் பாஸ் பண்ணவேண்டும், அப்படி அவர்கள் பாஸ் பண்ண முடியாவிட்டால், அவர்களை ரிலிவ் பண்ணி விடுகிறார்கள். அதனால் நடைமுறையில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அப்படி ரிலீவ் ஆகும் போது அவர்களுக்கு 25 வயது ஆகிவிடுகிறது. இனிமேல் எந்த டிபார்ட்மெண்டுக்கும் போக முடியாது. நிர்க்கதியாகப் போய்விடுகிறார்கள். அப்படி பதவிகளில் டிமோட் பண்ணுகிற நிலை, ரிவர்ட் பண்ணுகிற நிலை இருக்கிறது. இதைப் பற்றிப் பல ஆண்டுகளாக எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். ஆகவே, இப்பொழுதாவது அமைச்சர் அருள் கூர்ந்து இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, வேலை உயர்வு கொடுப்பதில், 1 : 1 என்கிற அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. ஆனால், திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை கமிட்டியின் சிபாரிசு 1 : 3 என்ற முறையில், ஒரு டைரக்ட் ரிக்ரூட்டுக்கு, மூன்று டிபார்ட்மெண்டாருக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆகவே, அப்படி மூன்று என்கிற அளவில் பர்மெனண்ட் போஸ்டுகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுது தான் நல்ல முறையில், அவர்களை ஊக்குவிக்க முடியும். இதற்கு முன்பெல்லாம் பர்மெனண்ட் போஸ்டுகளுக்கு மட்டும்தான் டைரக்ட் ரிக்ரூட் செய்து வந்தார்கள். ஆனால் சமீபகாலத்தில் டெம்பரெரி போஸ்டுகளுக்கும் அப்படிச் செய்கிறார்கள். அது நன்றாக இருக்காது.

அதே போல, ட்ரான்ஸ்பர் சம்பந்தமாகவும், முன்னாலெல்லாம், ஒரு டெபுடி என்றால் 4, 5 மாவட்டங்கள் சேர்ந்து இருக்கலாம். இன்றைக்கு மாவட்டத்திற்கு ஒரு டெபுடி வீதம் இருக்கும்போது அலுவலகங்களை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இன்றைக்கு இருக்கும் பொருளாதார நெருக்கடியில், விலைவாசியில், பிள்ளைகள் படிப்பு இதையெல்லாம் மனதில் வைத்து, அவர்களை ட்ரான்ஸ்பர் செய்யாமல் இருந்தால் நலமாக இருக்கும். அதோடு கூட . . . (மணி அடிக்கப்பட்டது) இன்னும் ஒரு வார்த்தை. இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன்.

இன்றைக்கு டெபுடிகளை எடுத்துக் கொண்டால், அவர்களுக்கு பிக்ஸட் ட்ராவலிங் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு வாகனங்களில் செல்வதில் சார்ஜுகளெல்லாம் அதிகரித்து விட்டது. ஆகவே, அவர்களுக்கும் அதை அதிகரிக்க வேண்டும். அதே போல, ஸீனியர் இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 50 டி. ஏ. என்று இருக்கிறது. அதற்குள்ளாகத்தான் அவர்கள் வேலை செய்ய வேண்டுமா, அவர்கள் அதிகமாக வேலை செய்ய வேண்டுமென்றால் அவர்களுக்குப் படியையும் அதிகரித்துக் கொடுக்க வேண்டும்.

சலவைக்காரர் சங்கங்களுக்கு, வாஷிங் மெடீரியல்கள் வாங்க அதிகக் கஷ்டம் இருக்கிறது. அவர்கள் இன்றைக்கு பில்லர்டு போஸ்ட் என்று அலைக் கழிக்கப் படுகிறார்கள். சங்கம் ஏற்படுத்தி விட்டு வேலை செய்ய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு வாஷிங் மெடீரியல்கள் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போல, ரிக்ஷாக்களுக்கும் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்த வேண்டும்.

கூட்டுறவு பாங்கியிலிருந்து கடன் வாங்கி நிலம் வாங்கி . . .
(மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. அ. ராகவ ரெட்டி :** கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு இயக்கம் மிக முக்கியமான ஒன்று. அது நம் மாநிலத்தில் மிகச் சிறந்த முறையில் நடந்து கொண்டிருக்கிறது. அதில் சந்தேகம் இல்லை. ஏனென்றால், நம்முடைய மாநிலத்தைப் பொருத்த வரையில் எல்லாத்துறைகளிலும், கூட்டுறவு இயக்கம், அதுவும் முக்கியமாக விவசாயத் துறையில், கடன் கொடுப்பது, ரசாயன உரங்களை வினியோகம் செய்வது போன்ற வேலைகளைச் செம்மையாகச் செய்துகொண்டு வருகிறது. எங்கள் செங்கல்பட்டு ஜில்லாவைப் பொருத்த வரையில், இந்த மாதம் முதல் தேதி முதல் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் வினியோகம் செய்து வந்த உரத்தை, தனியார்களுக்கு, ஐந்து பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். முதல் நாளே

நடுத்தெருவில் கொண்டு வைத்து அதை, மூட்டைக்கு இவ்வளவு ரூபாய் என்று அதிகமாகச் சொல்லி விற்கிறார்கள். கூட்டுறவுத் துறை மூலம் விற்ற உரங்கள் இப்படி அதிக விலைக்கு விற்றதாக நான் கேள்விப்பட்ட தில்லை. ஆனால் அதே சமயத்தில் நான் கூட்டுறவு இயக்கத்தில் ஊழல்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஓரளவுக்கு இருக்கத் தான் செய்யும். கிராம அளவில் எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. கூட்டுறவுச் சங்கமும் இருக்கிறது. இரண்டையும் ஒத்திட்டுப் பார்த்தால், கூட்டுறவுச் சங்கத்திலே பஞ்சாயத்திலே ஏற்படும் ஊழல்களைவிட அதிகமாக ஏற்பட்டுவிடவில்லை. பஞ்சாயத்தில் இருப்பதை எடுத்துக் காட்ட முடியாத நிலைமை இருக்கிறது. சர்க்கார் போதுமான ஆடிட்டர்களைப் போட ஏற்பாடு செய்தால், தெரியும். இதற்கு ஆடிட்டர்கள் இருப்பதால் வெளியில் தெரிகிறது. ஆனால், பஞ்சாயத்துக்களுக்கு ஆடிட்டர்கள் இல்லை. அதனால்தான் வெளியில் தெரியவில்லை.

அதோடு கூட, இரண்டாவது முறை ப்ரெசிடெண்டாக இருக்கக்கூடாது என்று பல கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு மட்டும்தானா ? பஞ்சாயத்துப் போர்டு தலைவராக, மந்திரியாக எத்தனை தடவை வேண்டுமானாலும் வரலாம் என்று இருக்கும் போது, ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் மட்டும் ஏன் விதி விலக்கு ? அதுதான் எனக்குப் புரியவில்லை. மக்கள் ஆதரிக்கிறார்கள் என்றால், ஒரு தடவை என்ன, இரண்டு தடவை என்ன, பத்துத் தடவை வேண்டுமானாலும் வருவதில் என்ன தவறு என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்குப் புல் பைனான்ஸ் ஸ்கீம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு வேண்டிய எல்லாக் கடன்களையும் கொடுப்பது என்று கருதுகிறேன். ஒரு ஏகருக்கு 225 ரூபாய் என்று நஞ்சை பயிரிட்டால் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஒரு விவசாயி 30 ஸ்டாண்டர்ட் ஏகரா வைத்து இருந்தால் ஒரு ஆயிரம்தான் கொடுக்க வேண்டும் என்று உச்ச வரம்பு வைக்கப் பட்டிருக்கிறது. அதைத் தளர்த்தி, எத்தனை ஏகரா பயிர் செய்கிறார்களோ அந்த அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு லாண்ட் மார்ட்கேஜ் பாங்கி மூலமாகக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நானும் ஒரு டைரக்டராக இருந்தேன். நானே விண்ணப்பம் செய்து இரண்டு வருஷம் ஆகியும், ஏதோ சாக்குப் போக்குச் சொல்லுகிறார்கள், இதுவரையில் பணம் கொடுக்கப் படவில்லை. ரிகார்டுகளைக் கொடுக்கவில்லை என்று ஒரே ஒரு காரணம் சொல்லுகிறார்கள். கூட்டுறவு இயக்கத்திலே பணியாற்றி இருக்கிறேன். என்னென்ன ரிகார்டு களைக் கொடுக்க வேண்டும் என்று எனக்கும் தெரியும். எல்லா ரிகார்டு களையும் கொடுத்த பிறகு, கடைசியாக இன்று பட்டா ட்ரான்ஸ்பர் ஆகவில்லை என்று கூறியிருக்கிற கட்டத்தில் இருக்கிறது. உத்தரவு இங்கே கூட என்னிடம் இருக்கிறது. நில அடமான பாங்கிக்குக் கடன் கேட்டு மனுச் செய்தால், ஆறு மாதத்திற்குள் கொடுக்க வேண்டும் அல்லது கொடுக்க வில்லை என்றால், கடன் கிடையாது என்றாவது சொல்ல வேண்டும்.

முக்கியமாக ஒன்றை மட்டும் சொல்ல வேண்டும். கூட்டுறவுச் சங்கங் களிலே இதுவரையில் குறுகிய காலக் கடனுக்கு 6½ சத விகிதம் வட்டி வாங்கி வந்தார்கள். இப்பொழுது திடீரென்று 8·4 சத விகிதம் வட்டியைக் கூட்டிவிட்டார்கள். இந்த 8·4 சத விகிதத்தில் தவணை கெட்டு விட்டால், 12½ சத விகிதமாகக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எந்த ஏற்பாடாவது செய்து, ரிசர்வ் பாங்கியோடு சேர்ந்து ஆலோசித்து, பழைய படியே 6½ சத விகிதம் வட்டி குறுகிய காலக் கடனுக்கும், 7½ சத விகிதம் நீண்ட காலக் கடனுக்கும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

* **திரு. பி. வி. சீராமுலு** : கனம் அவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின் பேரில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல முற்படுகிறேன். இந்தக் கூட்டுறவு இயக்கமானது நமது இந்தியத் துணைக் கண்டத்திலேயே சென்னை மாநிலத்தில் தான் மிகவும் சீரும் சிறப்புமாக



நல்ல முறையில் நடந்து வருகிறது. ஆனால், இந்த இயக்கம் லேவாதேவி என்ற முறையில் நடக்கிறதே தவிர, "இண்டஸ்ட்ரியல்", "மெர்க்கண்டைல்" என்ற முறையிலே இன்னும் சீரும் சிறப்புமாக நடக்கவில்லை, அந்த முறையிலும் நடத்தப்பட வேண்டும் என்பதை நான் கூற விரும்புகிறேன். ஏனென்றால், நமது மாநிலத்தில் பல மாவட்டங்களில் இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் நூற்பு ஆலைகளையும், சர்க்கரை ஆலைகளையும் தொடர்ந்து உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால், நூற்பு ஆலைகளும், சர்க்கரை ஆலைகளும் மாத்திரம் இருப்பதன் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி நமக்குக் கிடைப்பதில்லை. வெளிநாட்டுச் செலாவணி வேண்டும் என்ற காரணத் திற்காக சர்க்கரை ஆலைகளில் ஒரு பகுதியை "கன்பெக்ஷனரி" பகுதிக் காகப் பிரித்து, மிட்டாய் உற்பத்தி செய்தால் இந்த மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு மிட்டாய்களை ஏற்றுமதி செய்ய முடியும். ஏனென்றால், நமது நாட்டில் பாரி கம்பெனியார் தயாரிக்கக்கூடிய மிட்டாய் ரகங்கள் உலகத்திலேயே தலை சிறந்த மிட்டாய்களாக விளங்குவதன் காரணமாக பல கோடி ரூபாய்க்கு அன்னிய நாட்டுச் செலாவணி நமக்குக் கிடைக்கிறது. இத்தனை கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நம் நாட்டில் இருந்தும் கூட, கன்பெக்ஷனரி செய்ய அவை முற்படுவதில்லை. அடுத்த ஆண்டிலாவது கூட்டுறவுத் துறையில் நடத்தப்படும் சர்க்கரை ஆலைகளில் கன்பெக்ஷனரி பிரிவையும் ஏற்படுத்தி, மிட்டாய் வகைகளை தாராளமாக உற்பத்தி செய்து, அதன் மூலம் அன்னியச் செலாவணியைப் பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, நமது மாநிலத்தில் பல ரோலிங் ஃப்ளவர் மில்கள் இருக் கின்றன. வெளிநாடுகளில் இருந்து கோதுமை இறக்குமதி செய்து அர சாங்கம் அதனைத் தனியார் துறைகளுக்கு விநியோகம் செய்கிறார்கள். அந்தக் கோதுமையை விநியோகம் செய்து ஆண்டொன்றுக்கு 15 அல்லது 20 லட்சம் ரூபாய் தனியார் துறையில் லாபம் பெறுகிறார்கள். ஒவ் வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுத் துறையில் ரோலிங் ஃப்ளவர் மில் திறந்தால் அத்தனை வருவாயும் நமது நாட்டு மக்களுக்குப் பயன்படும் அப்பேர்ப்பட்ட தொழிலைக் கூட்டுறவுத் துறை மூலமாகச் செய்யவேண்டு மென்று நான் கோருகிறேன்.

அது மட்டுமல்ல, மேலை நாடுகளில் தனியார் துறையில் நடத்தும் படியான தொழில் ஸ்தாபனங்களுடன் கூட்டுச் சேர்ந்து நம் நாட்டில் பல தொழில் ஸ்தாபனங்கள் இயங்கி வருகின்றன. இண்டோ-ஜெர்மன் கொலாப ரேஷன், இண்டோ-ஜப்பான் கொலாபரேஷன் என்ற முறையில் தனியார் துறையில் நல்ல முறையில் சிறப்பாக நடத்தப்படும் தொழில்களைப் போல, கூட்டுறவுத் துறையிலும் ஏன் நாம் வெளி நாட்டு ஸ்தாபனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளக்கூடாது ? மேற்கு வங்காளத்தில் கூட்டுறவுத் துறையில் இண்டோ-ஜப்பான் கொலாபரேஷன் மூலமாக பொம்மைகள் செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். அதில் நல்ல லாபம் வந்து கொண்டிருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன். ஆக, அப்படிப்பட்ட நிலையை நமது மாநிலத்திலும் கூட்டுறவுத் துறையில் கொண்டுவர வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களில் அர்பன் பாங்குகள் என்று தனியாக இருக்கின்றன. ஆனால், அர்பன் பாங்குகள் மாத்திரம் கடன் வசதியை மத்திய பாங்கிலிருந்து பெற முடிவதில்லை. மத்திய பாங்கில் நகைக் கடன் (ஜுவல் லோன்), ப்ராட்யூஸ் லோன் இரண்டும்தான் கொடுக்கிறார்களே தவிர, மற்றவற்றிற்கு லோன் கொடுக்க மத்திய பாங்கு உடந்தையாக இருப்பதில்லை. அதனால் இந்த மாநிலத்தில் உள்ள அர்பன் பாங்குகள் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அதற்கென்று தனியாக ஒரு மத்திய பாங்க் வைக்கவேண்டும். எப்படி ஷெட்யூல்ட் பாங்குகள் ரிசர்வ் பாங்கினிடத்தில் ரூபாய் பெறுகின்றனவோ அதே போல் அர்பன் பாங்குகளைப் பொறுத்தும் இந்த மாநிலத்தில் ஒரு சென்ட்ரல் பாங்க் வைத்து அதன் மூலமாக இந்தத் தொகையைப் பெறவேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் இந்த மாநிலத்தில் இருந்தாலும் கூட, சிறு சிறு மார்க்கெட்டிங் சொஸைட்டிகளாகத்தான் இருக்கின்றன. அதற்கு நல்ல முறையில் ஷேர் காப்பிடல் இல்லை. மக்களிடத்தில் ஷேர் காப்பிடல் பெறவேண்டிய வாய்ப்பு இருந்தாலுங்கூட, ஓரளவுக்குத்தான் இருக்கிறது. இப்பொழுது ப்ரொக்யூர்மெண்ட் செய்யும்படியான முறை அதிகமாக இந்த மார்க்கெட்டிங் சொஸைட்டிகளுக்கு இருப்பதன் காரணமாக அரசாங்கம் அதற்குத் தனியாக சலுகை காட்டி அதற்கென்று தனி ஷேர் காப்பிடல் ஒதுக்கவேண்டும் என்பதையும் நான் கூறிக்கொள்கின்றேன்.

சேலம் மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம். தென் சேலத்தில் நூற்பு ஆலையும், சர்க்கரை ஆலையும் இருக்கின்றன. இன்னும் சில மாதங்களில் வட சேலம் பிரிவதற்கிருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், வட சேலம் பிரிவதற்கு முன்பு இப்போதே திட்டமிட்டு அங்கே ஒரு நூற்பு ஆலையையும், சர்க்கரை ஆலையையும் கூட்டுறவுத் துறையில் வைக்க முயற்சி செய்யவேண்டும் என்று கோருகின்றேன். சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரியும்போது, சேலம் சென்ட்ரல் பாங்கையும் இரண்டாகப் பிரித்து வட சேலத்திற்கு தனி சென்ட்ரல் பாங்க் அமைக்கவேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

***திரு. நெ. சா. இராமலிங்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் நான் கூற விரும்புகிறேன். அவர்கள் கூறியதுபோல், கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டில் நல்ல முறையில் வேலை செய்து வந்திருக்கிறது. அதற்காக அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும், பதிவாளர் அவர்களையும், மற்றும் சம்பந்தப்பட்ட எல்லோரையும் நான் பாராட்டுகின்றேன்.

கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, சென்ற மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பு நமது மாநிலத்தில் உணவு நெருக்கடி ஏற்பட்ட போது, தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் எவ்வாறு நல்ல முறையில் வேலை செய்தன என்பதை எடுத்துக் காட்டினார்கள். அது இன்னும் நல்ல முறையில் வேலை செய்வதற்கு ஒன்றிரண்டு சௌகரியங்களை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்பொழுது ரெவின்யூ அதிகாரிகள் ஒரு சிலர் கூட்டுறவு இயக்கத்தை பிரியமாகப் பார்த்தாலும், அநேகமாக அவர்கள் எல்லோருமே கூட்டுறவு இயக்கத்தை மாற்றாந்தாய்ப் பிள்ளைகளாகத்தான் கருதுகிறார்கள். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் அங்கேயுள்ள டிஸ்ட்ரிக்ட் சப்ளை ஆபீசரை ஒரு ஜாயிண்ட் ரிஜிஸ்ட்ராராகப் போட்டு, அவர் கலெக்டர் கீழ் வேலை செய்யும் முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். ஜாயிண்ட் ரிஜிஸ்ட்ரார் ஆப் கோவாபரேடிவ் சொஸைட்டீஸ் கிரேடில் உள்ள ஒருவரை ஜில்லா சப்ளை ஆபீசராகப் போட்டால்தான் இந்தத் தானியக் கொள்முதலை நல்ல முறையில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகச் செய்ய முடியும். அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்டேட் பாங்கிலிருந்து பத்து கோடி ரூபாய்தான் வாங்கி இந்த ராஜ்யம் பூராவும் நெல் முதலியவை வாங்க செலவிடுகிறார்கள். பத்து கோடி ரூபாய் நெல்லுக்கு மாத்திரம் அல்லாமல், கோதுமை, ஆட்டா, சர்க்கரை ஆகியவற்றிற்கும் செலவிடப்படுகிறது. அந்தத் தொகை போதாது என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு பல மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் பணம் இல்லாமல் இருக்கின்றன. இந்தத் தொகையை அதிகமாக்கி கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் வேலை செய்யும்படியாக அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் சொன்னது போல, ரிசர்வ் பாங்க் நமக்கு எவ்வளவோ நன்மை செய்து வந்தபோதிலும், சில நிபந்தனைகளைப் போடுவதால் மக்களுக்கு



டைஞ்சலாக இருக்கிறது.* முதலாவதாக, இதுவரை மார்க்கெட்டிங் சாஸைட்டியிலே நெல் கொண்டுவந்து வைத்து, நெல்லை ஈடாகக் காட்டிப் ணம் வாங்கிகொண்டு வந்தார்கள். ஆனால், இப்பொழுது புது நிபந்தனை ளைக் கொண்டுவந்து, வைக்கும் நெல்லை இவர்கள் மூலமாகத்தான் ிற்கவேண்டும், மார்க்கெடபின் சர்ப்ளஸைதான் வைக்கவேண்டும் என்று ிபந்தனை போட்டிருக்கிறார்கள். இது ஏழை விவசாயிகளுக்கு மிகவும் ஷ்டமாக இருக்கிறது. நெல்லை ஈடாகக் காட்டினால், விற்றாலும் விற்கா ிட்டாலும், அந்தக் கொதுவை மேல் பணம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இவர்கள் பம்பாயில் இருந்துகொண்டு முதல் தேதி சம்பளம் பாங்கிக்கொண்டிருப்பதால் இங்கேயுள்ள ஏழை விவசாயிகள் ஷ்டம் அவர்களுக்குத் தெரிவதில்லை. இங்குள்ள விவசாயிகள் இப்படிப் ட்ட நிபந்தனை காரணமாகக் கஷ்டப்படுகிறார்கள். இதையும் கவனிக்க வேண்டும்.

லால்குடி கனம் அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் சொன்னது போல, இதுவரை மத்திய பாங்க் நகை ஈட்டின் மேல் பணம் கொடுப்பதை அனுமதித்து வந்தது. இப்பொழுது நகை ஈட்டின் பேரில் கடன் கொடுப் பதை உற்பத்திக்காகத்தான் கொடுக்க வேண்டும், மற்ற செலவுக்குக் கொடுக்கக்கூடாது என்று நிபந்தனை போட்டிருக்கிறார்கள். விவசாய உற் பத்தி செய்வதைத் தவிர மற்ற செலவுகளுக்கும் அவர்கள் நகைகளை அடகு வைக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் வாழ்விற்கு வேண்டிய மற்ற செலவுகளுக்குப் பணம் தேவையாக இருக்கிறது. ஆகையால், நகை ஈட்டின் பேரில் கடன் வாங்க அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கன்யாகுமரி ஜில்லாவில், நில அடமான பாங்கைப் பொறுத்த வரையில் சில தடைகள் வந்திருக்கின்றன. இதுவரை கேரளாவில் நில அடமான பாங்க் பணம் வசூல் செய்வதெல்லாம் லாண்டு ரெவின்யூ அரியர்ஸ் போல வசூலித்து வந்தார்கள். கன்யாகுமரி மாவட்டம் சென்னை மாநிலத்துடன் சேர்ந்த பிறகு, இங்கே அம்மாதிரி சட்டம் இல்லாத காரணத் தால் லாண்டு ரெவின்யூ அரியர்ஸ் போல வசூல் செய்ய முடியவில்லை. அந்த மக்களெல்லாம் லாண்டு ரெவின்யூ அரியர்ஸ் போல் கூட்டுறவுக் கடன்களைக் கொடுத்து வந்து பழக்கப்பட்டிருப்பதால், கன்யாகுமரி மா வட்டத்தைப் பொறுத்த வரையில் அம்மாதிரி சட்டம் கொண்டு வந்து நில வரி பாக்கி வசூல் செய்வது போல் இந்த பாக்கிகளை வசூல் செய்தால் தான் அங்கே பணம் நல்ல முறையில் வசூல் ஆகும் போல் இருக்கிறது. அதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவு ஸ்டேட் அட்வைசரி கவுன்சில் நமது ராஜ்யத்திலே இருக்கிறது. அது அடிக்கடி கூடி வந்திருந்தது. இப்பொழுது வருஷம் ஒரு முறை தான் கூடுவது என்ற நிலைக்கு வந்துவிட்டது. அது வருஷம் ஒரு முறைதான் கூடுவது என்றில்லாமல் அடிக்கடி கூடினால்தான், இம்மாதிரி விஷயங்களை நாம் அதில் பரிசீலனை செய்து, அதற்கு ஆக வேண்டியவற்றைக் கவனிக்க முடியும். அதிலும் கனம் அமைச்சர் அவர் கள் முயற்சி எடுத்துக்கொண்டு, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஸ்டேட் அட்வைசரி கமிட்டி கூட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தை அளித்த சபாநாயகருக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடிக்கின்றேன்.

***திரு. நா. இராசாங்கம் :** பெருமதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் 12
அவர்களே, இன்று நடந்து கொண்டிருக்கக்கூடிய கூட்டுறவுத் துறை noon.
மானியத்தின் மீது எழுந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து நான் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையில் 1920-ம் ஆண்டு முதல் இன்று வரை பல முன்னேற்றங்கள் காணப் பட்டிருக்கின்றன என்றாலும் ஏழை எளிய மக்களுக்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறதா என்றால் அதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. கூட்டுறவுத் துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு இருக் கின்றன. ஆயினும் ஏழை எளிய காம்க்கப்பட்ட மக்களைப் பொறுக்க

வரையில் அந்த அனுகூலம் பெரும் அளவு கிட்டவில்லை. நாடு முன்னேற்றம் அடைந்தது என்றால் நாட்டில் உள்ள ஏழை எளியவர்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் அப்படிச் சொல்ல முடியும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

ஆனால் கூட்டுறவுத் துறையின் மூலம் ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றம் அடையவில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களில் இருந்தே சொல்ல முடியும். ஹரிஜனங்களுக்காக பால் வழங்கும் சங்கங்கள் 6 தான் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ஜனத்தொகை அடிப்படையில் எடுத்துப் பார்த்தால் இது போதாது. இந்தச் சங்கங்களில் இன்றையதினம் 1,600 உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். 3 லட்சம் ரூபாய்தான் செலவு செய்யப்படுவதாகச் சொன்னார்கள். நாம் யோசித்துப் பார்க்கவேண்டும்—தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்திவிடுவதற்கு இது போதுமா? இவையாவது நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றனவா, இல்லையா என்பதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் தம் பதிலில் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்து இருக்கிறேன். கூட்டுறவுத் துறையில் மாட்டுப் பண்ணை அமைத்துக் கொடுத்திருப்பதில் 53 என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 53 பால் வழங்கும் பண்ணைகள் இருந்தால் போதுமா? இது மிக மிகக் குறைவானது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மூன்று லட்சம் அல்ல பத்து லட்சத்திற்கு மேல் செலவானாலும் கூட ப்ளாக்குக்கு ஐந்தாவது, பால் வழங்கும் பண்ணைகளை தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கம் நாளாவட்டத்தில் பற்பல துறைகளிலும் விரிவடைந்து வருகிறபோதே எல்லாவற்றிலும் ஒரு சிலரின் ஆதிக்கம்தான் வளர்ந்து வருகிறது என்று நான் மட்டும் சொல்லவில்லை. மத்திய கூட்டுறவு மந்திரி திரு. எஸ். கே. டே அவர்கள் ஹைதராபாத்தில் ராஜ்ய கூட்டுறவு மந்திரிகளின் மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசியபோது குறிப்பிட்டதைக் கவனிக்கவேண்டும். நாட்டில் உள்ள கூட்டுறவுகளில் பல சிலரது கைப்பாவையாகி இருக்கும் நிலைமைதான் கூட்டுறவு இயக்கம் சரிவர வளர்ச்சி பெறாததற்குக் காரணம் என்றும் கூட்டுறவுகளில் சிலரது ஏகபோகம்தான் நிலவுகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இன்றையதினம் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்புள்ளிக்காரர்களின் கையில் சிக்கி இருக்கின்றன. மேலும் திரு. டே அவர்கள் "போலிக் கூட்டுறவுகள் தான் கூட்டுறவுத் துறையில் மிக சக்தி உள்ளவையாக விளங்குகின்றன, போலி சங்கங்களை ஒழித்தாக வேண்டும்" என்பதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே இன்றையதினம் பணக்காரர்களின் ஏகபோக சொத்தாக இருப்பதை மாற்றி, ஏழை எளியவர்களுக்கும் அதிகப் பயன் ஏற்படும்படியாக கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கவேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நில அடமான பாங்குகள் மூலம் கடன் கொடுப்பதாகச் சொல்லிவிடலாம். ஒன்றிரண்டு இடங்களில் கொடுக்கலாம். பெரும்பாலான இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நில அடமான பாங்குகளில் கடன் வாங்க முடியவில்லை. அடுத்தபடியாக குறிஞ்சிப்பாடி தொகுதியைச் சேர்ந்த 14 கிராமங்களுக்கு பால் பண்ணை சங்கங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதாக விண்ணப்பம் கொடுத்திருந்தோம். டெபுடி ரிஜிஸ்ட்ரார் வந்து பார்த்துவிட்டு பணம் இல்லை என்று சொல்லிவிட்டார். இந்த 1965-66-ம் ஆண்டுக்காவது கொடுத்துதவ வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக கூட்டுறவு சங்கங்களின் மூலம் பிற்பட்டவர்கள் கொஞ்சமாவது பயன்பெறும்படியாக அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். வட்டி விகிதத்தைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் நன்றாக எடுத்துக் காட்டினார்கள். இப்போது சங்கங்கள் மூலமாக குறுகிய காலக் கடன் நீண்ட காலக் கடன் என்று கொடுக்கிறபோது வட்டி விகிதம்



V211,31 N65
N65.28.7

8·4 என்றும், 9·6 என்றும் இருக்கிறது. குறிப்பிட்ட தவணையில் கட்டத் தவறுகிறவர்களுக்கு பீனல் இண்டரெஸ்டு என்று இதைப்போல இன்னும் ஒரு மடங்கு அதாவது 16·8 என்றும், 19·2 என்றும் வசூலிக்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த வட்டி விகிதமும், பீனல் இண்டரெஸ்டு விகிதமும் மிக அநீதியாக உள்ளது என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அபராத வட்டியை உயர்ந்த பட்சம் 10 சத விகிதம் என்ற அளவிலாவது வைக்க பை-லாவைத் திருத்திக்கொள்ள சங்கங்களை அனுமதிக்கும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எம்.எஸ்.ஸி.பி.க்கு கூட்டுறவு பாங்க் டெலிகேட்டுகள் டைரக்டர்களாக வரவேண்டும் என்று இருக்கிறது. நான் ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். மத்திய பாங்கின் தலைவர்களாக வருகிறவர்கள் இங்கும் டைரக்டராக வந்துவிடவேண்டும். இதனால் இரண்டிலும் இவர்களுக்கு தொடர்பு இருக்கும். அன்றாட அனுபவம் இவர்களுக்கு மிகவும் உதவியாகவும் இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நாம் ஒரு சட்டம் கொண்டு வந்து ஒவ்வொரு ஆண்டும் பழைய டைரெக்டர்களில் மூன்றில் ஒரு பாகம் ரிடையர் ஆகவேண்டும் என்று ஏற்படுத்தி இருக்கிறோம். இதனால் ஆண்டுதோறும் தேர்தல் வருகிற சங்கடமான நிலை இருக்கிறது. வருஷத்தில் ஒரு மாதம் வேறு வேலைகள் எதுவும் செய்ய முடியாமல் தேர்தல் வேலையே கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே அந்தச் சட்டத்தைத் திருத்தி பழைய படியே ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் இருக்கும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முன்பு ஹானரோரியம் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். ஆனால் நாம் கொண்டு வந்துள்ள சட்டப்படி ஹானரோரியம் கொடுக்கப்படுவது தடுக்கப்படுகிறது. இது எந்த அளவு சங்க நிர்வாகிகளுக்கு பாதகம் என்பதை நாம் அறிவோம். இப்போது எல்லாச் சங்கங்களிலும் லட்சக்கணக்கான ரூபாய்கள் டிரான்சாக்ஷன் செய்கிறார்கள். மத்திய பாங்குக்குப் போவது, மார்க்கெட்டிங் சொஸைட்டிகளுக்குப் போவது என்பதாகப் பல வேலைகள் இருக்கின்றன. ஆகவே திரும்பவும் ஏதாவது ஒருவகையில் ஹானரோரியம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஷாப்ஸ் அண்ட் எஸ்ட்டாபிளிஷ்மெண்டு ஆக்ட் 41-வது பிரிவுப்படி தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டால் தொழிலாளர்கள் லேபர் டெபுடி கமிஷனருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். ஆனால் இப்போது கூட்டுறவு சங்கங்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு இந்தப் பிரிவிலிருந்து விலக்கு அளிக்க வேண்[...] ரிஜிஸ்ட்ராருக்கு உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிற[...] [...]களுக்கு கூட்டுறவுத் துறையில் உதவி செய்யவேண்டியதுதான் [...] அந்தச் சங்கங்களில் வேலை செய்கிற தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் மற்ற தொழிலாளர்களைப் போல நடத்த வேண்டுமே [...] மற்றவர்களுக்கு உள்ள உரிமை இவர்களுக்கு மறுக்கப்படக்கூடாது. சட்டம் எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதாகக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

64903

கடைசியாக, பட்ஜெட் மெமொராண்டத்தில் [...]ளவாய்புரம் கோவாப்பரேடிவ் ஹெல்த் சொசைடிக்கு 8 ஆயிரம் ரூபாய் கிராண்டு கொடுப்பதாக இருக்கிறது. ஷோலூர் கோவாப்பரேடிவ் ஹெல்த் [...] நாங்கள் மூன்றாண்டுகளாக சிறுசிறு நன்கொடையாக வசூலி[...] கிறோம். ஆகவே இதற்கும் கிராண்டு கொடுக்க வேண்டு[...]ம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[24th March 1965

**திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கக்கூடிய இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த சில மாதங்களுக்கு முன்பு நமது நாட்டிலே ஏற்பட்ட உணவு நெருக்கடியைத் தீர்க்க நல்ல முறையிலே தீவிரமாகப் பங்குகொண்டு, காலம் நேரம் பாராமல் லீவு நாட்கள் என்று கூடப் பாராமல் வேலை செய்து பொது மக்களுக்கு உணவுப் பண்டங்களை விநியோகிக்கின்ற முறையிலே சிறப்பாக, அரிசிக் கொள்முதல் செய்வதிலே சிறந்த சேவை செய்துவந்த சென்னை கோவாப்ரேடிவ் சொசைடிகளையும், அதன்கீழ் இயங்கி வருகின்ற நிறுவனங்களையும் நான் பாராட்டுகிறேன். அவர்கள் சேவைக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு நம்முடைய நாட்டிலே கூட்டுறவு முறையானது நல்ல முறையிலே கிராமங்களிலே கையாளப்பட்டு நல்ல சேவை செய்து வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் சேவை செய்வதையெல்லாம் மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்றால், கூட்டுறவுப் பாங்குகளிலே வைக்கப்படுகின்ற டெபாசிட்டுகளுக்குக் கொடுக்கப்படுகின்ற வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டும். கோயம்புத்தூர் ஜில்லாவிலே இருக்கக்கூடிய மில்களிலே வைக்கப்படுகின்ற டெபாசிட்டுகளுக்கு 10 சதவீதம் வட்டி கொடுக்கிறார்கள். பல புதிய மில்களில் 12 சதவீதம் கூட வட்டி கொடுக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுப் பாங்குகளில் 5¼ சதவீதம் அல்லது 6¼ சதவீதம் என்ற அளவில்தான் வட்டிவீதம் கொடுக்கப்படுகிறது. இதனால் அடுத்த ஆண்டிலிருந்து கூட்டுறவுப் பாங்குகளிலிருந்து கணக்குகளை மில்களிலுள்ள பாங்குகளுக்கு மாற்றிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கூட்டுறவுப் பாங்குகளில் வைக்கப்படுகின்ற டெபாசிட்டுகளுக்கு அதிகமான வட்டிவீதம் தருவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், கூட்டுறவு முறையில் நம்முடைய மாகாணத்தில் பூமிதான பூமிகளில் விவசாயம் நடத்தப்பட்டு வருகின்றது. கோயம்புத்தூர் ஜில்லாவில் அமைச்சர் அவர்கள்கூட கூட்டுறவு முறையிலே அவைகளை விவசாயம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். பூமிதான பூமிகள் அடிப்படையிலே மாகாணம் முழுமையும் உள்ள பூமிதான பூமிகளாக வழங்கப்பட்ட நிலங்களை விவசாயிகள் கூட்டுறவு முறையிலே தீவிரச் சாகுபடி செய்வதற்கு ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோயம்புத்தூர் ஜில்லாவைப் பொறுத்தவரையில் கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜ், ஹோம் சயின்ஸ் காலேஜ், நிர்மலா காலேஜ் என்ற கல்லூரிகளில் பணியாற்றுகின்ற பெண் ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் யூ.ஜி.சி. ஸ்கீமிலே நிறைவேற்றப்படவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் கூட்டுறவு முறையின் மூலமும் அவர்கள் வீடு கட்டிக்கொள்ளலாம். வட்டியில்லா முறையில் அவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். அந்த வகையில் கூட்டுறவு டெபுடி ரிஜிஸ்திரார் அவர்கள் கவனம்செலுத்தி அவர்களுக்கு எல்லாம் வீடு கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிளாக்குகளிலே மாதர் சங்கங்கள் ஓரளவு நல்ல முறையிலே பணியாற்றி வருகின்றன. இன்னும் மாதர் சங்கங்கள் நல்ல முறையில் பணியாற்றவேண்டுமானால், அவர்களுக்கு மாடுகள் வாங்குவதற்காகக் கொடுக்கக்கூடிய தொகையை அதிகப்படியான அளவில் கொடுத்தால் அவர்கள் பால் உற்பத்தியைத் தீவிரப்படுத்துவதிலே கவனம் செலுத்த முடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நான் பல முறைகள் இதைப்பற்றிச் சட்டமன்றத்தில் சொல்லிவந்திருக்கிறேன். உற்பத்தி செய்யப்படுகின்ற பால் விவசாயிகளிடமிருந்து வாங்கப்படுகின்ற விலைக்கும், நகரங்களிலே பால் விநியோகம் செய்யப்படுகின்ற விலைக்கும் அதிகப்படியான வித்தியாசம் இருக்கிறது. அதிகப்படியான தொகை சேர்த்துக்கொடுக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.



24th March 1965] [திருமதி சி. குழந்தையம்மாள்]

அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் விவசாயிகளுக்கு அந்தத் தொகை சேருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு நில அடமான பாங்குகளின் மூலம் கொடுக்கப்படுகின்ற கடன் மிகவும் குறைவாக இருக்கிறது. மற்றத் தொழிலாளர்களுக்கு 80 சதவீதம் வரை கடன் கொடுத்து வருகிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு, 50,000 ரூபாய் பெறக்கூடிய நிலத்திற்கு 5,000 ரூபாய்தான் கடன் கொடுக்கிறார்கள். அந்தப் பணமும் பெற்றுக் கொள்வதற்கு 2, 3 வருஷங்கள் கூட ஆகிவிடுகின்றன. ஆகையினால் நில அடமான பாங்குகளிலே அதிகப்படியான தொகையை விவசாயிகளுக்குக் கொடுத்தால் விவசாயிகளுக்கு அது உறுதுணையாக இருக்குமென்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் உற்பத்தி செய்கிற தானியங்களைச் சேர்த்து வைப்பதற்காக பிளாக்குகளிலே கிடங்குகள் கட்டவேண்டும். கிடங்குகள் கட்டுகின்ற வேலையைத் தீவிரப்படுத்த வேண்டுமென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்திலே அந்த வீடுகளின் டைப் டிசைனை மாற்றி, அதாவது விவசாயிகள் தங்களுடைய தானியங்களை இருப்பு வைத்துக்கொள்ள வசதியாக இருக்கும் அளவுக்கு வீடுகளை மாற்றிக் கட்டிக்கொடுக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு முறையிலே விவசாயத்தை நல்ல முறையிலே நடத்துவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. தியாகராஜன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய தொகுதி சம்பந்தமான சில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

மற்ற மாகாணங்களைக் காட்டிலும் நம்முடைய மாகாணம் சீரும் சிறப்புமாகக் கூட்டுறவுத் துறையில் முன்னேறியிருக்கிறது என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் இந்த முறையிலே முக்கியமாக என்னுடைய புதுக்கோட்டை டிவிஷன் மாத்திரம் எவ்வளவு பின்தங்கியிருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நான் பல தடவைகள் புதுக்கோட்டையில் நடக்கின்ற ஊழல்களைப்பற்றி எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆனால் அந்த ஊழல்கள் இன்று வரை அப்படியே நிரந்தரமாக இருக்கின்றனவே தவிர அதற்கு எந்த விதமான பரிகாரமும் இதுவரை தேடவில்லையென்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன். நாங்கள் இங்கு வந்து பேசுகின்ற விஷயங்களையெல்லாம் அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனித்து என்ன என்ன குறைபாடுகள் இருக்கின்றன, அவைகளை என்ன என்ன முறையில் நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதை எல்லாம் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். நான் பல முறைகள் இதைப்பற்றி வற்புறுத்தியுங்கூட இன்றும் அந்த நிலைமைதான் அங்கு இருந்து வருகிறது. நான்தான் புதுக்கோட்டையைப்பற்றிக் கூறுகிறேன் என்று யாரும் கருதிவிட வேண்டாம். திருச்சி ஜில்லாவிலிருந் அமைச்சர் அவர்களுக்கும், ரிஜிஸ்டிரார் அவர்களுக்கும், மற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், எல்லா எம்.எல்.ஏ-க்களுக்கும் ஒரு மனு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த மனுவின் 18-வது காலத்திலே **"The Vamban Handpounding Co-operative Society is functioning only in paper. Why is it not liquidated?"** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த **Defunct Handpound Society**-யில் டெலிகேட்டாக இருந்தவர் என்று சொல்லப்படுகிறவர்தான் இப்பொழுது சென்ட்ரல் பாங்க் தலைவராக இருக்கிறார். அந்த வம்பன் ஹாண்ட்பவுண்ட் சொசைடி டிஃபங்க்ட் சொசைடி. அந்த சொசைட்டியிலிருந்து தான் தன்னை டெலிகேட்டாக அவர் பிரகடனப்படுத்திக்கொண்டு சென்ட்ரல்

[திரு. அ. தியாகராஜன்] [24th March 1965

பாங்கிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். எவ்வளவுதான் சட்டங்களைப் போட்டாலும், அந்தச் சட்டங்களைப் புதுக்கோட்டை டிவிஷனிலே சென்ட்ரல் பாங்கியில் பணியாற்றுகின்ற தலைவரும் அவரால் ஏற்படுத்தப் பட்ட சொசைட்டிகளும் பார்ப்பதே யில்லை. அதற்குப் பதிலாகச் சட்டங் களுக்குப் புறம்பாகத்தான் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மிகத் தாழ்மையோடும், வருத்தத்தோடும் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக் கோட்டை டிவிஷனிலே உள்ள தனியார் கோவாப்ரேடிவ் சொசைடிகளும், மற்ற கோவாப்ரேடிவ் நிறுவனங்களும் நல்ல முறையில் நடக்கையில் அரசாங்கத்தால் கண்காணிக்கப்படுகிற சென்ட்ரல்பாங்கும், அதன்கீழ் உள்ள இதரப் பாங்குகளும் சட்டத்திற்குப் புறம்பாகத்தான் நடக்கின்றன என்பதை நான் மிக வன்மையாக அமைச்சர் அவர்களுக்குக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த நிலைமைகளைத் திருத்தியமைக் காமல் இருந்தால் நல்ல முறையிலே அந்த டிவிஷன் செயல்படாது. அரசாங்கத்திட்டத்திற்கும் பயனளிக்காது. தனியார்களால் நடத்தப்படு கின்ற டவுன் பாங்கு என்ற ஒரு பாங்கு அங்கு இருக்கிறது. அது சென்னை மாகாணத்திற்குள்ளேயே மிகவும் நல்ல முறையிலே நடந்து கொண் டிருக்கிறது. தனியாரால் நடத்தப்படுகின்ற ஒரு பாங்கே நல்ல முறையில் நடக்கிறது, ஆனால் சர்க்காரால் நடத்தப்படுகின்ற பாங்கு சரியாக நடக்க வில்லையென்றால், அந்த பாங்கு இருப்பதும் ஒன்றுதான், இல்லாமல் இருப்பதும் ஒன்று தான். ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கிற விவ சாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல முறையிலே நன்மைகள் கிடைக்கச் செய்யவேண்டும். கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு நல்ல முறையில் சேவை செய்யப்பட்டு வருகிறது. அதற்காக நமது அரசாங்கமும் பல கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கிவருகிறது. ஆனால் அந்த ரூபாய் விவசாயிகளுக்கு நேரடியாகக் கிடைக்காமல், அந்தத் தலைவரே துர்விநி யோகம் செய்யக்கூடிய அளவுக்குத்தான் இன்றைக்கு நிலைமை அங்கு இருக்கிறது. இவைகளையெல்லாம் சிந்தித்துப்பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவைகள் எல்லாம் நல்லபடியாக நடக்கவில்லை என்று நான் பொதுக்கூட்டங்களிலே பேசுகின்ற காரணத்தால் என்மேல் மான நஷ்ட வழக்குப் போட்டிருக்கிறார் அந்தத் தலைவர். இவர்களை எல்லாம் அரசாங்கம் விட்டுவைத்திருக்கிற காரணத்தால் நாங்கள் சட்டமன்றத்திலே வந்து இதைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. ஆகவே, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மிகத் தாழ்மை யுடன் கேட்டுக்கொள்கிறேன். நல்ல கோவாப்ரேடிவ் மார்க்கெட்டிங் பாங்கு என்பது கீரனூரிலேதான் இருக்கிறது. அங்கே உள்ள மார்க்கட்டிங் பாங்கு தான் நல்ல முறையில் நடக்கிறது. அதிகாரிகள் யாராவது செக் பண்ணு வதற்கு வந்தால், அவர்களை அந்த கீரனூர் பாங்குக்குக் கூட்டிக்கொண்டு போய் காண்பித்து, திருப்தியாக இருக்கிறது என்று சொல்லி, அவர்களை அப்படியே திருப்பி விடுகிற வழக்கம்தான் அங்கே நடக்கிறதே தவிர, வேறு எந்த ஒரு கோவாப்ரேடிவ் சொசைடியும் நல்ல முறையிலே நடக்கவில்லை, வேறு எந்த கிராம சொசைட்டியும் தணிக்கை செய்யப்படுவ தில்லை என்று சொல்லிக்கொண்டு, இதையெல்லாம் செப்பனிட்டுக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் உப தலைவர் அவர்களே, கூட்டுறவு இலாகாவின் மூலம் பல சீர்திருத்தங்கள், அபிவிருத்திகள் செய்யப்பட்டிருக்கிற நேரத்தில் இந்தக் கூட்டுறவு மானியத்தை வரவேற்றுப் பாராட்டுகிறேன். சோஷலிச சமுதாயத்தை ஏற்படுத்துவதற்குக் கூட்டுறவு இலாகா மிகப் பொருத்தமாக இருக்குமாதலால் இதற்கு அதிகமான மானியம் ஒதுக்கப்படுவது நலமாக இருக்குமென்று கருதுகிறேன். நண்பர் நாராயணசாமி நாயுடு அவர்கள் கூட்டுறவுப் பண்ணைகள் எவ்வாறு நடந்து வருகின்றன என்பதைப் பற்றிச் சொன்னார்கள். நூற்றுக்கணக்கான பண்ணைகளுக்கான சங்கங்கள் விவசாயிகளின் நலத்திற்காக, உணவு உற்பத்திக்காக ஆரம்பிக்கப்பட்டும் அந்த இலாகாவினால் சரிவரக் கவனிக்கப் படாமல் இருக்கின்றன. தேவஸ்தானத்திற்கு பாக்கி அதிகமாக இருப்பதால் நடவடிக்கை எடுத்து ஒவ்வொரு சங்கமாக மூடிக் கொண்டு



24th March 1965] [திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை]

வருகிறார்கள். இதை இலாகா உடனடியாகக் கவனிக்கவேண்டும். 1370-ம் பசலி வெள்ளத்தால் பாக்கி அதிகம் ஏற்பட்டது என்று கூறு கின்றார்கள். 60—40 சட்டத்திற்கு முன்பு சங்கத்தார் என்ன குத்தகை கொடுத்தார்களோ அதையே இப்போதும் தேவஸ்தானங்களிலும் மடங் களிலும் கேட்டு வருகிறார்கள். அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கிற காரணத்தால் பாக்கி ஏற்பட்டு அவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். இதைப் பற்றி அரசாங்கம் உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் சொன்னதுபோல் வட்டி, மார்வாடி வட்டி அளவுக்கு உயர்ந்து விட்டது. இதன் காரணமாக விவசாயிகள் பெரிய தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குச் சலுகை கொடுக்கும் வகையில் வட்டியைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கிராஷ் ப்ரொகிராம் என்று சொல்லி மத்திய அரசின் மூலமாகவே பெரிய பண்டகசாலைகள் கட்டியிருக்கிறார்கள். ஆனால் தஞ்சை ஜில்லாவில் அந்த பண்டகசாலைக்கு நெல்லைக் கொண்டு போக வேண்டு மென்றால் 50, 60 மைல் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, சிறிய கொடவுன்களை ஆங்காங்கே கட்டிக் கொடுக்கவேண்டும். 250 கொடவுன்களைக் கூட்டுறவு இலாகாவின் மூலமாகக் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட் டிருப்பதாகத் தெரிய வருகிறது. அவற்றைச் சீக்கிரமாகக் கட்டிக் கொடுத் தால் மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரிய மில் ஒன்றே ஒன்றுதான் திருவாரூரில் கட்டப்பட்டிருக்கிறது. அதைப் போன்று நூதன முறையில் சிறிய மில்களைக்கூட அமைக்கலாம் என்று டில்லியிலிருந்து வந்த அதிகாரிகள் கூறினார்கள். அந்த முறை யில் பல இடங்களிலும் சிறிய அளவில் நூதன முறையில் மில்களைக் கட்ட ஏற்பாடு செய்வது உதவியாக இருக்கும்.

கூட்டுறவில் சென்ட்ரல் பாங்கு, பெடரேஷன், ஜில்லா மார்க்கட்டிங் சொசைடி இவைகளின் நிர்வாகத்தில் எல்லாம் தனிப்பட்ட பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அந்தத் தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கும், கூட்டுறவு இலாகா வுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை; அவர்களுக்கு அதிலே பொறுப்பும் இல்லை, அக்கறையும் இல்லை. இதை அடியோடு மாற்ற வேண்டுமென்று ரெஜிஸ்ட்ரார் அவர்களே சொன்னார்கள். அவற்றில் எல்லாம் தனிப்பட்ட பிரதிநிதிகள் வேண்டியதில்லை. ஜனநாயக ரீதியில் தேர்ந்து எடுக்கப்படும் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளே எல்லாவற்றிலும் பிரதிநிதிகளாக இருந்தால் பிரயோசனமாக இருக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனங்கள் நெல் அதிகமாக விற்பதில் கலெக்டர் ஆபீசில் இருந்து தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. மற்ற ஜில்லாக்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெல் வாங்கப்பட்டிருக்கும்போது, தஞ்சை ஜில்லாவில் தனிப்பட்ட வியாபாரிகளிடமே அதிகமாக வாங்கி இருக் கிறார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்கள் அதை சப்ளை செய்ய வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜீப், போன் போன்ற வசதிகளையெல்லாம் கூட்டுறவு இலாகாவில் இருப்பவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும். சில டி. ஆர்.களுக்கு ஜீப் இல்லாமல் இருக்கிறது. அவருக்கு ஜீப் கொடுத்தால் வேலைகள் துரிதமாக நடைபெற உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. கு. சின்னராஜி கவுண்டர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் கிராம மக்களுக்கு உரம் கொடுத்து வருகிறார்கள். ஆனால் அந்த உரம் காலத்தில் போதிய

[திரு. சி. கு. சின்னராஜி கவுண்டர்] [24th March 1965

அளவு கிடைப்பதில்லை. விவசாயிகளுக்குத் தேவையான நேரத்தில் உரம் கிடைக்காமல் அவதிப்பட்டு வருகிறார்கள். தேவையான காலத்தில் விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உரம் கொடுப்பதற்கு வழி செய்யவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்களில் சிமெண்ட் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. கிராமங்களில் பம்ப் செட்டுகள் வைக்கும் நேரத்தில் சிமெண்ட் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் சிமெண்ட் சப்ளை செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லைக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகப் ப்ரொக்யூர்மெண்ட் செய்து வருகிறார்கள். வட ஆற்காடு ஜில்லாவில் திருப்பத்தூர் தாலுகா ரொம்பவும் பின் தங்கிய பகுதி. அங்கு நெல் விளைச்சல் ரொம்ப குறைவு. அங்கு நெல்லைப் ப்ரொக்யூர்மெண்ட் செய்தாலும் அதை அரிசியாக்கி அங்குள்ள மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். தற்போது அங்கிருக்கும் நெல்லைப் ப்ரொக்யூர் செய்து வெளியூர்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். திருப்பத்தூர் தாலுகாவில் ரொம்பவும் பஞ்சமான நிலைமை இருக்கிறது. வேலூரில் இருந்து அரிசி வந்து சப்ளை ஆகியிருக்கிறது.

திருப்பத்தூர் தாலுகாவுக்கு ஒரு சர்க்கரை மில்லைக் கூட்டுறவு முறையில் அமைத்துக் கொடுக்கவேண்டும். எங்கள் ஏரியாவில் அதிகமாகக் கரும்பு உற்பத்தியாகிறது. ஆகவே, கூட்டுறவு முறையில் ஒரு சர்க்கரை ஆலையை அங்கே ஏற்படுத்த வேண்டும்.

குறிப்பாக, கூட்டுறவு மூலமாக திருப்பத்தூரில் அரிசி விற்பனை செய்ய அரசாங்கம் ஏதாகிலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ஏனைய அமைச்சர்களைவிட மிகவும் அதிர்ஷ்டம் செய்தவர்கள் என்று கூறிக்கொள்கிறேன். காரணம், இந்தத் தரப்பில் இருப்பவர்கள் மட்டுமல்ல, எதிர்த் தரப்பில் இருக்கிறவர்கள் கூட இந்த மானியத்தை மிகவும் வரவேற்று, இந்த இலாகா நல்ல விதமாகப் பணியாற்றிக் கொண்டு வருகிறது என்று பாராட்டியிருக்கிறார்கள். அவ்விதமாக நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டிலே சமதர்மம் அதிக வேகமாகப் பரவ வேண்டுமென்று சொல்லக் கூடிய இந்தத் தருணத்தில் கூட்டுறவு அதிக வேகமாக மக்கள் மத்தியில் பரவி வருகிறது என்று சொன்னால், சமதர்மம் மக்கள் மத்தியிலே வேகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற நிலையைத்தான் அது எடுத்துக் காட்டுகிறது. எங்கே சோஷலிசம் வெற்றியடைய வேண்டுமோ அங்கே கூட்டுறவு வேகமாக வளரவேண்டும். நம்முடைய சமதர்மப் பாதையில் விரைவில் வெற்றியடைய முடியும் என்பதைத்தான் இந்தக் கூட்டுறவு முன்னேற்றம் காட்டுகிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கூட்டுறவு இல்லாத ஒரு அம்சமே நமது வாழ்க்கையில் இல்லை என்ற நிலைக்கு நாம் வந்து விட்டோம். விவசாயத்தை எடுத்துக் கொண்டால் கூட்டுறவு; வியாபாரத்தை எடுத்துக் கொண்டால் கூட்டுறவு; தொழில் துறையை எடுத்துக் கொண்டால், க்ஷவரத் தொழிலில் இருந்து சலவை தொழில் வரை கூட்டுறவு; ஆலைகளை எடுத்துக் கொண்டால் சர்க்கரை ஆலையிலிருந்து நூற்பு ஆலை வரை கூட்டுறவு என்ற வகையில் மக்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் இயங்குகின்ற அளவுக்குக் கூட்டுறவு இன்று இருந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறை நம்முடைய மாநிலத்தில் வெற்றியுடன் நடப்பதற்கு முக்கியமான காரணம் பொறுப்புள்ளவர்கள், நாணயமுள்ளவர்கள், மக்களுடைய நிலையை நன்கு உணர்ந்தவர்கள்



24th March 1965] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

அதிலே இருப்பதால்தான் இன்று இத்தனை வெற்றிகரமாக நமது மாநிலத்தில் கூட்டுறவுத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ளாமல் இருக்க முடியாது.

அந்தளவு முன்னேற்றம் கண்டுள்ளவர்களை ஒரு தடவைக்கு மேல் இருக்கக்கூடாது, இரண்டு தடவைகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்பது 12-30 p.m.
நன்கு உழைத்து முன்னேற்றத்திற்கு கொண்டு வந்ததற்குப் பரிசாக அடுத்த தடவை இருக்கக் கூடாது என்று சொல்லும் வகையில் ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்திக் கொள்வது நல்லதல்ல. அது கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும். விவசாயக் கடன் விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. "கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினன் இலங்கை வேந்தன்" என்று சொல்வார்கள். ராவணனின் இதயம் அவ்வளவு பாடு பட்டுக் கொண்டிருந்ததாம். ஏழை விவசாயிகள் கடன் பட்டு விட்டார் என்றால் மூன்று நான்கு வட்டிக்கு கொடுத்து அப்பணத்தைத் திரும்பப் பெற வயலுக்குச் சென்று விளைந்த பயிரை அறுத்து அடித்து எடுத்துக் கொண்டு போகிறார்கள். இன்று விவசாயிகளுக்கு விதைக்கு கடன், உரத்திற்கு கடன் என்று பலவிதக் கடன்கள் கூட்டுறவு முறையில் கொடுத்து விவசாயிகளை முன்னேற்றி வருகிறார்கள். வீடு கட்டும் திட்டத்தை எடுத்துக் கொண்டால் நகரப்புறத்திலே வீடு, நடுத்தர வருமானக்காரர்களுக்கு வீடு, கிராம வீட்டு வசதி, குறைந்த வருமானக்காரர்களுக்கு வீட்டு வசதி என்று நாலைந்து அம்சமாக பிரித்திருக்கிறார்கள். இரண்டு வீடு உள்ளவர்கள் மூன்று நான்கு வீடுகளை வைத்துக் கொள்ளும் நிலையை அடைந்திருக்கிறார்கள். நான்கைந்து வீடுகள் உள்ளவர்கள் தங்கள் வீட்டிலுள்ள குழந்தைகள், பேரப் பிள்ளைகள் என்று ஒவ்வொருவருக்காக வீடு கிடைக்கும் விதத்தில் நிலை இருக்கிறது. ஒன்று நான் குறிப்பிட விரும்புகிறேன். வீடு இல்லாதவர்களுக்கு ஒரு வீடாவது ஆக்கித் தர இத் திட்டத்தில் வகை செய்யப்பட வேண்டும். அதற்கு அதிகாரிகள் சொல்வார்கள், அவரர்களுக்கு ரீ பேயிங் கப்பாசிட்டி இல்லாமல் போய் விடுகிறது என்று சொல்வார்கள். அர்பன் பாங்க் கடன் கொடுக்கிறார்கள் ஆள் ஜாமீனில். கடன் கொடுத்து திரும்ப வசூல் செய்து கொள்கிறார்கள். வீடு கட்டும் பாட்டாளி வீதியில் தூங்குகிறான் என்று பாடும் அளவில் இன்று நிலைமை இருக்கிறது. ஆக, வீடு கட்டுகிற தொழிலாளிகள், கொத்து வேலை செய்பவர்கள், ட்ரைவர்கள், கண்டக்டர்கள், ப்யூன்கள், அட்டன்டர்கள் போன்ற சிறிய வருமானம் உடையவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் ஒருவித திட்டமும் அமைத்துக் கொடுக்கவில்லை. என்.ஜீ.ஓ.க்களுக்கு, யூ.டி.ஸி., எல்.டி.ஸி. போன்றவர்களுக்கு வீடு வந்து விடுகிறது. ஆகவே 2,000, 3,000 ரூபாயில் மாதம் 10, 15 ரூபாய் கட்டக்கூடிய வகையில் இவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். என் தொகுதியில் மேலப்பாளையத்தில் இலங்கையில் இருந்தும், பர்மாவிலிருந்தும் திரும்பி வந்தவர்கள் அதிகமாக கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. பீடித் தொழில் இருந்தது, அந்தப் பீடித் தொழிலும்கூட நசித்து வருகிறது. ஆகவே அவர்களுக்கு மேலப்பாளையத்தில் ஒரு நூற்பு ஆலை வைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருநெல்வேலிக்கு சர்க்கரை ஆலை கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். எங்கள் ஊரில் திரு. கோசல்ராம் போன்றவர்கள் மூன்று வருடங்களுக்கு முன்பே வரப்போகிறது என்று சொன்னார்கள். அதுவும் எங்கள் ஜில்லாவிற்கு வரவேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் எக்ஸ் சர்வீஸ் மென்னுக்கு வீட்டு வசதி ஒன்றும் செய்யப்படவில்லை. அதையும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ர. சம்பங்கி :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற கூட்டுறவு மான்யத்தின் மீது எங்கள் கட்சியைச் சார்ந்த புலவர் கோவிந்தன் அவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக என் நகரத்திலுள்ள ஆம்பூர், பாலார் கூட்டுறவு சர்க்கரை ஆலை அதேபோலுள்ள மதுராந்தகம் சர்க்கரை ஆலை, அமராவதி, நெல்லிக்குப்பம் போன்ற

சரிசமமாக உற்பத்தி பெருகி நல்ல லாபகரமான மில்லாக இன்றையதினம் நடந்து வருகிறது. அங்கு வேலை வாய்ப்பு எப்படியிருக்கிறது என்று கேட்டால் அங்கு ஆலையில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு ஆறு மாதங்கள்தான் வேலை செய்யும் வாய்ப்பு இருக்கிறது, அதற்கடுத்த ஆறு மாதங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை என்று அவர்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கு கிட்டத்தட்ட 5,000 டன் மொலாஸஸ் உற்பத்தியாகிறது. இப்போது மொலாஸஸ் வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது என்று நினைக்கிறேன். அந்த மொலாஸஸை வைத்துக் கொண்டு சாக்கலெட்ஸ், பப்பர்மின்ட்ஸ் தயாரிக்கும் ஒரு உப தொழிற்சாலையை அங்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்குள்ள அந்த ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வருடத்தில் ஆறு மாதங்கள்தான் வேலை கிடைக்கிறது என்றாலும் அவர்கள் உரிய காலத்தில் அவர்களுடைய வேலையை ஏற்றுக் கொள்கிற அளவிற்கு அங்கு வசதியில்லை. அங்கு விளம்பர போர்ட்டில் அவர்கள் எண்களை குறித்து விடுகிறார்கள். அந்த எண்ணைப் பார்த்துத்தான் அவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அவர்கள் வேலைக்கு வரும் தேதியை தபால் மூலம் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நில அடமான பாங்க் என்று எங்கள் ஊரில் இருக்கிறது. கிட்டத்தட்ட வட ஆற்காடு மாவட்டத்திலே அது அடிக்கடி முதல் பரிசை தட்டிக் கொண்டு போகிற பாங்காக இருந்தாலும் அங்கு மனு செய்து கொள்கிற விவசாய நண்பர்கள் சட்டப்படி மனு கொடுத்து பணம் வாங்கும் வரை 60 நாட்கள்தான் இடையில் இருக்க வேண்டும் என்றிருந்தாலும் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு மேலாக காலதாமதமாகிறது. ஆகவே விவசாயிகளுக்கு தாமதம் இல்லாமல் பணம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் அனைவரும் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள், நம் மாநிலத்தில் கூட்டுறவுத் துறை மிக அழகாக செயல்பட்டு வருகிறது என்று. என்னைக் கேட்டால் எங்கள் மாவட்டத்திலே இருக்கிற மாற்றுக் கட்சித் தோழர்கள், மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் யாரும் அந்த சர்க்கரை ஆலையில் இதுவரை டயரக்டராக நியமனம் செய்யப்பட்டது இடையாது. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள்தான் அடிக்கடி அப்படி நியமனம் செய்யப்படுகிறார்கள். சர்க்கார் ஒரே நோக்கோடு, கட்சிக் கண்ணோட்டத்துடன்தான் இருக்கிறது. ஆகவே அதை மாற்றி மாற்றுக் கட்சியினரையும் அங்கு போட வேண்டுமென்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டு வர விரும்புகிறேன். 1964-ம் வருடம் செப்டம்பர் மாதம் 17-ந் தேதியில் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றபோது அங்கு டெப்டி ரெஜிஸ்ட்ரார் அவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்ட என்னைப் பார்த்து நகராட்சி மன்றங்களில் எல்லாம் இப்போது ஹௌஸ் மார்ட்கேஜ் பாங்க்ஸ், வீடு அடமான பாங்க்ஸ் வைக்க வேண்டுமென்ற நல்லதொரு திட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்தியிருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அனுமதி பேரில் நான் 1964-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 17-ந் தேதியில் ஆம்பூர் நகராட்சித் தலைவனாக இருப்பதால் ஆம்பூர் நகரப் பிரமுகர்களைக் கூட்டி ஆம்பூர் நகரத்திற்கு ஒரு வீடு அடமான பாங்க் தேவை என்று மிக தெளிவாக எடுத்துச் சொன்னோம். அதற்குரிய முழு ஆதாரங்களை வைத்திருக்கிறேன். நேரம் இல்லாததால் அமைச்சர் அவர்கள் என்னை அழைத்து கேட்பார்களேயானால் அவற்றை நான் கொடுக்க சம்மதிக்கிறேன். ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று நானும் திரு. வடிவேலு அவர்களும் நேரில் சென்று கேட்டபோது அவர்கள் எங்களுக்கு பதிலளித்தார்கள், எங்களிடம் பணம் இடையாது இப்போது, என்றார்கள். நீங்கள் கேட்கிற பணத்தைக் கொடுக்கிறோம் என்று கூறியபோது 15 ஆண்டுகளுக்கு பிக்ஸட் டெப்பாசிட் தருவீர்களா என்று கேட்டார்கள். அதற்கு ஒப்புதல் அளித்தும் இப்போது செய்வதற்கில்லை என்று பதில் வந்திருக்கிறது. காரணம், உள்ளூரில் மாற்றுக் கட்சிக்காரர்கள் இப்படிச் செய்தால் அவர்கள் ஒரு பொறுப்புள்ள பாங்கை கைப்பற்றிக்கொள்ளக் கூடும் என்பதுதான் காரணமாக இருக்க்கூடும். கடைசியாக ஒன்றை மட்டும் கூறிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். டெப்டி ரெஜிஸ்ட்ரார் கோபால ரத்னம் அவர்களிடம், இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு பார்த்தால் ஆளும் கட்சியைச் சார்ந்த ஒருவர், அவர்களுக்கு எல்லாம் இங்கு பாங்க் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டதின்பேரில் இந்த முடிவிற்கு வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே தயவு செய்து அவர்கள்பேரில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).



***திரு. ரா. ராஜகோபாலசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் கூட்டுறவு மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்போது கூட்டுறவுத் துறையில் வட்டி விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. நண்பர் திரு. சுப்பிரமண்ய கவுண்டர் அவர்கள் சொன்னது போல் அதற்கு நிவர்த்தி செய்ய மத்திய சர்க்கார் மூலம் வழிவகைகள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர்கள், கூட்டுறவு சங்கத்திற்கு தலைவராகவும் நிர்வாக உருப்பினர்களாகவும் வருகிறவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் ஜனநாயக ரீதியில் எல்லோரும் வோட் வாங்கித்தான் வருகிறார்கள். ஜனநாயகத்தின், அந்த உரிமையை, ஜனநாயகத்தின் மூலம் வரும் அந்த உரிமையை பறிக்கக் கூடாது. சங்க மெம்பர்கள் விரும்புகிறார்கள், அவர்கள் நிர்வாகிகளாக வருகிறார்கள். ஆகவே அதில் கட்டுத் திட்டம் கூடாது. தப்பிதம் இருந்தால் அதற்கு நடவடிக்கை எடுக்கலாம். அதற்காக இத்தனை முறைக்கு மேல் கூட்டுறவு இயக்கத்தில் பதவியில் வரக்கூடாது என்று சொல்வது ஜனநாயக முறைக்கு முரண்பாடாக இருக்கும், ஆகவே, அம்மாதிரியான மாறுதல் எதுவும் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு துறையில் இருக்கும் வீடு கட்டும் சங்கங்களுக்கு அதிகமான ஊக்கம் காட்டுவதில்லை. அதற்கும் ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக இன்டஸ்ட்ரியல் ஹவுஸிங் யூனிட்டுக்கு போதுமான அளவு கூட்டுறவுத் துறையில் சப்ஸிடி கொடுப்பதில்லை. குறிப்பாக எங்கள் பகுதியில் சுமார் 5 வருடத்திற்கு முன் ஒரு தொழிற்சாலையில், வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் ஒன்று ஏற்படுத்தினார்கள். தொழிலாளர்கள் எல்லோரும் அங்கத்தினர்களாக சேர்ந்து பங்கு மூலதனம் செலுத்தி சங்கத்தை ஆரம்பித்து, அங்குள்ள தொழிற்சாலை நிர்வாகஸ்தர்கள் மிகவும் குறைவாக ஏக்கர் 300 ரூபாய் அளவுக்கு இடத்தை கொடுத்து அது ஷை சங்கத்திற்கு வாங்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்தப் பக்கத்தில் சென்ட் 60 ரூபாய், 70 ரூபாய் என்ற அளவில் விற்கப்படுகிறது. அப்படியிருந்தும் இதுவரையிலும் இண்டஸ்டிரியல் ஹவுஸிங் கூட்டுறவு சங்கத்திற்கு எந்தவிதமான விமோசனமும் வரவில்லை. அரசாங்கம் இதை கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நில அடமான பாங்க்கிகளில் இப்போது நில அபிவிருத்திக்கு மட்டும் தான் கடன் கொடுக்கப்படும், முன்போல், முன் கடனை தீர்ப்பதற்கு கடன் கொடுப்பதில்லை என்று முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று ரிசர்வ் பாங்குகள் பூமி அபிவிருத்திக்கு மட்டும் தான் பணம் கொடுக்க சொல்லுகிறார்கள், இரண்டாவது முன் கடன் என்று சொல்லும்போது, பொய் ப்ரோநோட் தயார் செய்து கொடுத்துவிடுகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஒரு சிலர் இம்மாதிரி செய்வதினால் பல பேர்கள் தாங்கள் பட்ட முன்கடனை தீர்க்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்தக் கஷ்டத்தைப் போக்குகின்ற வகையில், ரிசர்வ் பாங்காரை அணுகி முன் கடனை தீர்ப்பதற்கு கடன் கொடுப்பதற்காக அந்த பாங்குகளில் கொடுக்கப்படும் துகைகளில் பாதியாவது வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முழு கடன் வசதி திட்டத்திலும் போதிய அளவு கடன் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. மத்திய பாங்கிலிருந்து கிராம சங்கங்களுக்கு ஒரு மெம்பருக்கும் 1,000 ரூபாய் சொந்த ஜாமீனிலும், அதற்கு மேல் வேண்டுமென்றால் அடமானத்தின் பேரிலும் கொடுத்துக் கொண்டு

[திரு. ரா. ராஜகோபாலசாமி] [24th March 1965

வருகின்றன. ஒரு விவசாயி பத்து எக்கர் பூமி வைத்திருந்தால், அதில் 5 எக்கர் பூமியில் பருத்தி சாகுபடி செய்யவேண்டுமென்றால் 1,000 ரூபாய் சரியாய் போய்விடுகிறது. இன்னும் ஐந்து எக்கரில் நெல் போன்ற பயிறுகளும் வேறு தான்யங்கள் ஏதேனும் பயிர் செய்யவேண்டுமென்றால் அதற்கு தொகை போதுமானதாக இல்லை, இதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. கடன் கிடைப்பதற்கு கால தாமதமும் ஏற்படுகிறது. ஆகவே கிராம கூட்டுறவு சங்கங்களில் ஒவ்வொரு மெம்பருக்கும் 2,000 ரூபாய் வரையிலும் ஜாமீனிலேயே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் ஷெ பயிர் செய்வதற்கு முன்பே விவசாயிகள் கைக்கு ஒரு மாதத்திற்கு முன்பே கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, தாலூகா மார்க்கட்டிங் சொஸைட்டிகள், கூட்டுறவு ஸ்டோர்கள் இவைகள் எல்லாம் உணவு தான்யங்களை போதுமான அளவுக்கு கொள்முதல் செய்வதற்கு பண வசதியில்லாமல் இருக்கிறது. அதனால் உணவு தான்ய கொள்முதல் பாதிக்கிறது. அவர்களுக்கு போதுமான அளவு பணவசதி கிடைக்கும்படியாக வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கூட்டுறவு மேற்பார்வை யூனியன்களுக்கு கட்டிடம் கட்டுவதற்காக 15 ஆயிரம் ரூபாய் சர்க்கார் கொடுக்கப்படுவதாக இருக்கிறது. கிராம சங்கங்கள் யூனியனில் நேரடி மேற்பார்வையில் இருப்பதினால், யூனியனுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு, அதிக பணத்தை ஒதுக்கி நம் மாநிலத்தில் எல்லா கூட்டுறவு மேற்பார்வை யூனியன்களுக்கும், ஒவ்வொன்றுக்கும் ரூ. 15,000 வீதம் கொடுத்து உதவ வழிசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேஷன் மீதும், அதற்காக போடப்பட்டிருக்கும் முதலீட்டின் (காப்பிட்டல் அவுட் லே ஆன் கோவாப்பரேஷன்) மீதும் என்னுடைய கருத்துக்களை புலப்படுத்தக்கூடிய நிலைமையில் நான் நிற்கிறேன். நான் வழக்கமாக சொல்லிக்கொண்டிருப்பதைப் போலவே கோவாப்பரேஷன் என்ற தத்துவத்தின் அடிப்படையை நாம் செம்மையாக உணரவேண்டும் என்பதைத்தான் நான் வற்புறுத்த விரும்புகிறேன். கோவாப்பரேஷன் என்பதிலே பலவகையான துறைகள், முறைகள் உண்டு என்றாலும் கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேஷன் என்று சொல்லும்போது, துய்ப்பவர்கள் என்று மட்டுமே இருக்கவேண்டும், ஆனால் உண்மையில் துய்ப்பவர்கள் ஒரு சிலர் இருந்தாலும்கூட, வழியில் செல்லுகின்ற யார் வேண்டுமானாலும், இதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சொஸைட்டியில் அல்லது ஸ்டோரில் பண்டத்தை வாங்கிக்கொள்ளலாம் என்றிருப்பதை நான் அடியோடு மறுக்கிறேன். அப்படியானால் வெளியேயுள்ள பிரைவேட் ப்ரவிஷனல் ஸ்டோருக்கும் இந்த கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரேடிவ் ஸ்டோருக்கும் என்ன வித்தியாசம் இருக்க முடியும்? அங்கு வைத்திருக்கின்ற கடையில் லாப நஷ்டம் ஏற்படும்போது முதல் போடுகின்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இதற்கான பொறுப்பு அவர்களிடம் இருக்கிறது. ஆனால் இங்கே ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்காக ரூபாய்களை போட்டு நடத்துகின்ற கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோரில், 10 ரூபாய், 50 ரூபாய், 100 ரூபாய் கொடுத்து ஷேர் ஹோல்டர்களாக இருப்பவர்களுக்கு இதில் ஏற்படுகின்ற நஷ்டத்திலோ அல்லது லாபத்திலோ அக்கறை இல்லாத—பொறுப்பிலாத நிலையில்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலைமையை நாம் காண்கிறோம். சுருக்கமாக சொன்னால், கோவாப்ரேஷன் என்ற துறை அநாதியாகத்தான் கருதப்படுகிறது. ஆதலால் தான் பிற துறைகளில் ஏற்படுகின்ற குற்றங்களைவிட அதிகமான குற்றங்கள் இந்தத் துறையில் ஏற்படுகின்றன. ஏராளமான வழக்குகள் ஏற்படுகின்றன வழக்குப் போடப்படாமலேயே எத்தனையோ இருக்கின்றன. வந்திருக்கின்ற வழக்குகளை மட்டும் வைத்துக்கொண்டு பார்த்தால்கூட, மிக கணிசமான அளவுக்கு காணப்படுகின்றன. போட்ட வழக்குகளில் 100-க்கு 4 அல்லது 5 வழக்குகளில் தண்டனை கொடுக்கப்படுகிறது. பகிரங்கமாக தவறுகள் நடந்தன என்றிருந்தாலும், குற்றங்கள் நடந்தது உண்மை என்று உலகமெல்லாம் ஊரெல்லாம் அறிந்திருந்தாலும்கூட, சட்ட ரீதியாக நிரூபணம் ஆகமுடியாத காரணத்தினால், அல்லது நமக்கென்ன என்று அலட்சியமாக சென்றுவிடுகிற காரணத்தினால், பல வழக்குகள்



24th March 1965] [திரு. சா. கணேசன்]

குற்றவாளிகள் தண்டனைக்குள்ளாக்கப்படாமல், தள்ளப்படுகின்ற நிலைமை வந்து சேருகின்றது என்பதை நாம் நன்றாக அறிவோம். கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேஷன் என்ற துறையை எடுத்துக்கொண்டால், அதில் டைரக்டர்களாக இருப்பவர்களை எடுத்துக்கொண்டால், யார் யாரெல்லாமோ டைரக்டர்களாக இருக்கிறார்கள். விவசாயத் துறையைப்பற்றி ஒன்றும் தெரியாதவன் ஒரு பொடி நிலம்கூட இல்லாதவன், விவசாயம் சம்பந்தப்பட்ட கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியில் டைரக்டராக இருப்பான்; சம்பந்தம் இல்லாதவர்கள் டைரக்டர்களாக இருப்பார்கள். பால் மாடே இல்லாதவர்கள், பாலைப்பற்றியோ, புண்ணாக்கைப்பற்றியோ தெரியாதவர்கள், புல்லுக்கும் வைக்கோலுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் கோவாப்பரேடிவ் பால் பண்ணையில் டைரக்டர்களாக இருப்பார்கள். (கனம் திரு. வெ. ராமையா: பால் சாப்பிடுகிறவர்கள் வருகிறார்கள்........) சாப்பிடுகிறவர்கள் என்றால், உபயோகிப்பவர்களில்தான் அவர்கள் வரவேண்டும். ஆயிரக் கணக்கான ரூபாய்களை செலவு செய்து, லட்சக் கணக்கான ரூபாய்களை செலவு செய்து, பால் பண்ணை நடத்துகிறவர்கள் எல்லாம் வெறுமனே பால் சாப்பிடுகிறவர்கள் அல்ல. வேண்டுமென்றால் இந்தத் துறையைப்பற்றி தெரிந்த தொழிலாளர்கள் இருப்பார்கள். அதே போன்றுதான் கோவாப்பரேடிவ் பிரஸ் இருக்கிறது என்றால், அதில் டைரக்டர்களாக இருப்பவர்களுக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரிவதில்லை. பைண்டிங் என்றால் என்னவென்று தெரியாது. கம்போஸிங் என்றால் என்னவென்று தெரியாது, இன்னின்ன எழுத்துக்கள் இன்னின்ன பாயின்ட்கள் என்று தெரியாது. எழுத்துக்களின் பாயிண்டைப் பற்றி தெரியாது; பாயிண்ட் என்றால் என்ன? எம் என்றால் என்ன? குவாடு, கொட்டேஷன் எவை? என்றுகூடத் தெரியாதவர்கள் எல்லாம் கோவாப்பரேடிவ் பிரஸில் டைரக்டர்களாக இருப்பதை பார்க்கிறோம். இது எதைக் காட்டுகிறது? இந்தத் துறையில் செல்வாக்குள்ள நபர்கள்—அரசியல் காரணமாகவோ அல்லது வேறு என்ன காரணமாகவோ—நான் யாரையும் தனிப்பட்ட முறையில் புண்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த குறைகளை சொல்லவில்லை—கொஞ்சம்கூட இந்த குறைகளை சொல்வதினால் எவருக்கும் மனப் புண் ஏற்படக்கூடாது என்று விரும்புபவன் நான்—இவ்விதம் செல்வாக்கு உடையவர்களின் கையில் கோவாப்பரேஷன் மாட்டிக்கொண்டுவிடுகிறது. இந்த நிலை மாறி, யார் யார் கன்ஸ்யூமர்ஸ்ஸாக இருக்கிறார்களோ அவர்கள் கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோரில் சேரக்கூடிய அளவுக்கு இதைக்கொண்டு வரவேண்டும். அதற்கு மேலாகப் பார்த்தால் கன்ஸ்யூமர்ஸ் சொஸைட்டிகளுக்கு இவ்வளவுதான் கடன் கொடுப்பது என்று நிர்ணயிக்கவேண்டும். கன்ஸ்யூமர்ஸ்ஸுக்கு மட்டும்தான் வழங்குவது என்ற நியதி இருந்துவிடுமேயானால், அதோடு இதில் ஏற்படுகின்ற நஷ்டங்களுக்கு அல்லது லாபங்களுக்கு இவர்கள்தான் பொறுப்பாளிகள் என்று நிர்ணயித்து விடுவோமேயானால் இவ்வளவு அநியாயங்கள், இவ்வளவு அக்கிரமங்கள், நியாயவிரோதங்கள், சட்ட விரோதங்கள் ஏற்படமாட்டா என்பதை நாம் நன்றாக மனத்தில் இருத்திக்கொள்ளவேண்டும். அதே காலத்தில் பல வருஷமாக சொல்லிக்கொண்டு வருவதுபோல், போடப்படுகின்ற வழக்குகள் பல நிரூபணம் ஆகாமல் போய்விடுகின்றன. இதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்கும்போது—இந்த வழக்குகளை நடத்துவது அங்கங்கு இருக்கின்ற அரசாங்க பப்ளிக் பிராஸிக்யூட்டர்தான்—ஆனால் இதற்கு எதிர் தரப்பாக லட்சக்கணக்கான ரூபாய்களைச் சாப்பிட்டுவிட்டவர்கள் பெரும் பொருள் செலவு செய்து, நல்ல, சிறந்த, மதியூகமுள்ள, நன்றாக வாதம் செய்யக்கூடிய, வழக்கறிஞர்களைக் கொண்டுவந்து வெற்றிபெற்று விடுகிறார்கள். அதே நேரத்தில், எந்த ஷேர் ஹோல்டரும் வக்கீல் வைத்து வாதாடுவதற்கு இப்போது விதியில் இடம் இல்லை; அதிகாரிகளும் பிற சிறந்த வக்கீல் வைத்து வாதாடி ஜெயிப்பதற்கு விதியில் இடம் இருக்கவேண்டும். அதை இந்தத் துறை—கோவாப்பரேட்டிவ் துறை—செய்யவேண்டும். அது அல்லாமல், பல பொது ஸ்தாபனங்களிடையிலே ஊழல் அல்லது தவறு நடைபெறுமானால் அதன்மீது வழக்கு நடத்தி, கோர்ட்டுக்கு கொண்டுவந்து அதன்மீது நல்ல தீர்ப்பு வழங்கப்படச் செய்வதற்கு—ஒரு கோவிலில் தவறு நடக்கின்றது என்றால், நான் வழிபடுகிறவன் என்ற ரீதியிலே,

[திரு. சா. கணேசன்] [24th March 1965

வழிபடுகிறவன் என்ற அந்த உரிமையிலே, என்னென்ன அக்கிரமங்கள் நடக்கிறது என்று, நானே வக்கீலை வைத்து சூட் போட வழி இருப்பது போல—ஷேர்ஹோல்டர் என்ற முறையிலே—அரசாங்கமோ, அல்லது இலாகாவோ அல்லது சர்க்காரின் மற்ற நிர்வாகத்தினர்களோ தலையிடா விட்டாலும்கூட, ஒரு தனிப்பட்ட ஷேர்ஹோல்டர், இன்னின்ன அக்கிரமங்கள் நடந்தன, இவ்வளவு நஷ்டம், இவ்வளவு தீமை என்பதைக் குறித்து தாமே நேரடியாக ஒரு வழக்கு போடுவதற்கு வழி இருக்கவேண்டும். அப்படி வழக்குப்போட்டு அதிலே நியாயம் நிரூபிக்கப்பட்டால் அப்படி வழக்குத் தொடர்ந்தவருக்கு ஏற்பட்ட நியாயமான, சட்ட ரீதியான செலவுகள் முழுவதையும் அரசாங்கமோ அல்லது அந்தத்துறையோ, அல்லது எதிர் வழக்காடியவரோ வழங்கக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். கோவாப்பரேஷன் அருமையான துறை. எங்குமே அருமை யான துறையில்தான் அக்கிரமங்களும் நடைபெறுகின்றன. கோவில் என்பது புனிதமான ஸ்தலம் என்றாலும் அங்கே பல தவறுகள் நடக் கின்றன. சந்நியாசம் என்பது புனிதமான நிலை என்றாலும் அங்கே தான் ஆஷாடபூதிகள் பெருகியிருக்கிறார்கள். இதெல்லாம் வழக்கிலே பார்க்கின்ற உண்மை. கோவாப்பரேஷன் அருமையான துறை—வைரத்திற்குத்தான் இமிட்டேஷன் வரும்; ரோட்டு ஜெல்லிக்கு வராது—அதைப் போல நல்ல துறையாக இருப்பதால்தான் ஊழல்கள் நிறைந் திருக்கின்றன. எப்படியோ சம்பாதிக்க வேண்டும். இந்தத் துறையில் சம்பாதிக்கலாம்; ஏனென்றால் பொறுப்பு இல்லை. டைரக்டர்களாக இருக்கின்றவர்களுக்கு அதிகப் பொறுப்பு கிடையாது. அக்கிரமங்கள் மலிகின்றன. அக்கிரமங்களை அகற்ற, அக்கிரமங்களை வாராமல் தடுக்க, அடிப்படையிலே கோவாப்பரேஷனுக்கு உள்ள வழிவகைகளை, அந்தப் பொருளை, பொருளை உணர்ந்து, அந்த நெறியிலே அது செயல்படும் படியாகச் செய்யவேண்டும். அது முதல் பணி; இரண்டாவது, தவறுகள் நடவாமல் காக்கவேண்டும். மூன்றாவது, தவறு நடந்தால் நிச்சயமாகக் கடுமையான தண்டனைகள் கொடுக்கக்கூடிய முறைகள், உரிமைகள், அந்த சொஸைட்டிக்கு அல்லது இலாகாவிற்கு இருக்கவேண்டும். அந்த நிலையில் பார்த்துக்கொண்டு போகக்கூடிய நேரத்திலே தவறு செய்தவர்கள் எவ்வளவு பெரிய வக்கீலை வைக்கிறார்களோ அந்த அளவுக்கு குறையாத சாமர்த்தியமான வக்கீல்களை வைத்து வழக்கு நடத்த அந்தத் துறைக்கோ, அல்லது அந்தச் சங்கத்திற்கோ அல்லது ஷேர் ஹோல்டருக்கோ உரிமை கொடுக்கும்படியான, வாய்ப்பு ஏற்படும் படியான நிலையைச் செய்யவேண்டும். இப்படியெல்லாம் செய்தால்தான் உண்மையிலேயே கோவாப்பரேஷன் கோவாப்பரேஷனாக இருக்கும். இல்லாவிட்டால் இது கோளாறுப்பரேஷனாகத்தான் முடியும். இதைப் புரிந்துகொள்ளவேண்டும். இந்த நிலையிலே இந்தத் துறையிலே கவனத்தைச் செலுத்தி, செம்மையான நெறியில் செயல்படவேண்டும். கோவாப்பரேஷனில் குல்மால் செய்தவர்கட்குக் கொடுக்கப்படக்கூடிய தண்டனை சாமான்யமாக இருக்கக்கூடாது. எல்லோருக்கும் பயன் தரக் கூடிய துறை இது. இவ்விதத் துறையில் மிகக் கடுமையான தண்டனை யைக் கொடுக்கும் அளவுக்கு—சாதாரண ஒரு மளிகைக் கடையில் திருடிய ஒரு குமாஸ்தாவுக்கு மூன்று மாத தண்டனை என்றால், கோவாப்பரேடிவ் துறையில் குற்றம் புரிந்தவருக்கு 15 ஆண்டு தண்டனை கொடுக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் இந்தத் துறை செம்மையாகும், நெறி செம்மையாகும், பொதுத்துறையில் நாணயம் செம்மையாகும். பொதுத்துறை, பொதுத்துறை என்று சொல்லிக்கொண்டு எல்லாவற்றையும் பொதுத்துறையாக மாற்றிக்கொண்டு போகும்போது இன்றைக்கு தனியார் துறையைவிட பொதுத்துறையில் ஊழல் அதிகமாக இருக்கிறது. நான் இப்போது எந்தத் துறையையும் ஆதரித்தும் பேசவில்லை. மறுத்தும் பேசவில்லை. பொதுத்துறை வளர்ந்து வரும்போது அதனுடைய தரம் குறைந்துவிடாமல், வளம் குறைந்துவிடாமல், ஒழுக்கம் சிதைந்துவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டுவது தவிர்க்கமுடியாத கடமை என்று கூறி, இவற்றையெல்லாம் மனத்திலே கொண்டு, கடுமையான, செம்மையான கண்காணிப்புடன் நெறிமுறை பிறழாமல் எல்லாம் செயல்படவேண்டும் என்று கூறி அமர்கிறேன், வணக்கம்.



24th March 1965]

**புலவர் கா. கோவிந்தன் :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நம் கூட்டுறவு அமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்த மான்யக் கோரிக்கை நாட்டு மக்கள் அத்தனை பேராலும் வரவேற்கப்படக் கூடிய ஒரு கோரிக்கை ஆகும்.

தேசீயச் செல்வத்தை நாட்டிலே இருக்கிற மக்கள் அத்தனை பேரும் ஒரு சேரப் பங்கிட்டுக்கொள்வதற்கும், ஒருவரால் முடியாத ஒரு காரியத்தை பலர் கூடி முடித்து வெற்றி பெறுவதற்கும் வாய்ப்பு அளிக்கக் கூடிய ஒரு துறை தான் இந்தக் கூட்டுறவுத் துறை. நாட்டிலே நகரங்களைக் காட்டிலும் கிராமங்களின் எண்ணிக்கை அதிகம். நகரத்திலே வாழுகின்ற மக்களைக் காட்டிலும் கிராமங்களிலே வாழுகின்ற மக்கள் எண்ணிக்கை அதிகம். நகரத்தில் இருக்கின்ற மக்களுக்கு தொழில் நிறுவுவதற்கும், வாணிபத்திற்கும் பண உதவி செய்யும் நிலையங்கள் பல இருக்கின்றன. கிராம மக்களுக்குப் பண உதவி செய்கிற ஒரே அமைப்பு கூட்டுறவு அமைப்பு தான். அந்த முறையில் பார்க்கிற நேரத்தில் அமைச்சர் கேட்டிருக்கிற மான்யத் தொகை போதாது, அது இன்னும் பல மடங்கு உயரவேண்டும் என்ற கருத்திலே நான் மாறுபட்டவன் அல்ல. ஆனால் அந்தத் துறை செயல்படுகிற முறையைப் பர்க்கிற நேரத்தில், இந்தத் துறை இருக்க வேண்டுமா, இருக்க விடலாமா என்ற அளவுக்குத் தான் கேள்வி கேட்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதற்கு முன்னே பேசிய கனம் அங்கத்தினர் ராஜாங்கம் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். மத்திய கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இந்த இயக்கத்தைப் பற்றிக் கொண்டிருக்கிற கருத்து, அது வேறு துறையைச் சேர்ந்த அமைச்சர்கள் கூறியிருந்தால் ஓரளவுக்கு ஐயம் கொள்ளலாம். ஆனால் இதே துறையில் அமைச்சராக இருக்கிறவர், மத்திய கூட்டுறவு அமைச்சர் அவர்கள் "போலிக் கூட்டுறவுகள், சுயநலமிகளின் ஆதிக்கம், சிலரது கைப்பாவை, வாய்ப்பந்தல், போலிக் கூட்டுறவுகளால் அசல் கூட்டுறவுகள் பரிதாபத்திற்கு உள்ளா கின்றன, நிர்வாக ரீதியான முடிவுகள் காண இயலவில்லை" என்ற அளவுக்கு இதைப்பற்றிய ஒரு வர்ணனை கொடுத்தால் நம் கூட்டுறவு இயக்கம் எந்த அளவுக்குச் செயல் படுகிறது என்று சிந்திக்கவேண்டும். இப்படிப்பட்ட பாராட்டுரை அந்தத் துறை அமைச்சரால் அளிக்கப்படுகிறது என்று சொன்னால், அந்தத் துறையை இன்னும் ஏன் விட்டு வைக்க வேண்டுமென்று கேட்கும் நிலையில் மக்கள் இருக்கிறார்கள். இதற் கெல்லாம் வழி இல்லையா என்று கேட்டால் நிச்சயமாக இருக்கிறது. வழி கூறுகிற நேரத்தில் நம் அமைச்சர் அதை ஏற்றுக்கொள்ள மறுக் கிறார்கள். அமைச்சர் ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம் கட்சியோ அல்லது மற்றவர்களோ பின்னணியில் இருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இந்தத் துறையிலே வருகிறவர்கள் நல்லவர்களாக இருக்கவேண்டும். ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒரு முறை வந்தவர் இடைவெளி விட்டு இன்னொரு முறை வர வேண்டுமென்று சொன்ன நேரத்தில், " எம்.எல்.ஏ-க்கள் மட்டும் தொடர்ந்து வரலாமா ? " என்று அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுக் கேட்டார்கள். கேட்க வேண்டிய கேள்வி. எம்.எல்.ஏ-க்களிடம் பணப் பொறுப்பு இல்லை. ஆனால் அவர் களுக்கு பணப் பொறுப்பு கொடுக்கப்படுகிற நேரத்தில் அவர்கள் நல்ல வர்களாக இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் தவறுகள் செய்யாதிருப்பதற்கு எந்தெந்த அளவிலே வரம்பு கட்ட முடியுமோ அவ்வளக்கவ்வளவு வரம்பு கட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பணத்தைக் கொடுத்து விட்டு, இஷ்டத்திற்குக் கையாளும் நிலையை உருவாக்கிவிட்டு விட்டால், நிச்சயமாகச் சொல்லுகிறேன், என்னையும் சேர்த்து, அமைச்சராக இருக்கக்கூடியவர்களும் மற்றவர்களும் அத்தனை பேரும் கூட்டுறவிற்குச் சென்றால் போலிகளாக ஆகி விடுகிறார்கள். பணத்தைக் கொடுத்து, வரம்பு இல்லை, இஷ்டம்போல் செலவு செய்யலாம் என்ற நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். அது மட்டுமல்ல. இந்த மன்றத்திலே பல குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்லுகிறோம். எடுத்துச் சொல்லுகிற குறைகள் மீது ஏதாவது செயல்முறையில் நடை பெறுகிறதா என்று சொன்னால், இல்லை. நான் இந்த மன்றத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு பெரியவர் செய்திருக்கிற ஊழலை எடுத்துக் கூறினேன். அப்படிச் கூறுகிற நேரத்தில் சொன்னேன், அவர்

இந்த மன்றத்தில் துணைச் சபாநாயகராக இருந்தார் என்று அவர் மீது நடவடிக்கை எடுக்காது விடக்கூடாது என்று கூறி எத்தனை திங்கள் ஆகியிருக்கின்றன ? ஏதாவது நடவடிக்கை வந்திருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. இன்னொன்று என்னுடைய தொகுதியில் ஒருவர் நெல்லை ஈடுகாட்டி 12,000 ரூபாய் வாங்கினார். பணத்தைக் கொடுப்பதற்கு முன்னே நெல்லை எடுத்து விற்று விட்டார். இந்த நிகழ்ச்சி அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதிகாரிகள் போய்ப் பார்த்தார்கள். நெல் இல்லை. பூட்டு உடைக்கப்பட்டு நெல் எடுக்கப்பட்டிருந்தது. பணம் தரப்படவில்லை. அவர் மீது வழக்கு தொடர்ந்தார்கள். போலீஸார் வாரண்ட் பிறப்பித்தார்கள். சென்னையில் வந்து தங்கியிருந்தார். இப்போது என்ன நிலை ? தெருவில் உலாவுகின்றார். என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியவில்லை. வாரண்ட் என்ன ஆயிற்று, கேஸ் என்ன ஆயிற்று என்று கேட்பாரே இல்லை. கேட்டதற்கு தகவலே இல்லை. அந்தத் துறையிலே கேட்டால், நாங்கள் போலீஸாரிடம் ஒப்படைத்துவிட்டோம், அதற்குப் பிறகு அவர்களுடைய பொறுப்பு என்று தான் கூறுகிறார்கள். இது எதைக் காட்டுகிறது ? அவர் ஒரு காங்கிரஸ்காரர். இந்த மன்ற முன்னாள் துணைச் சபாநாயகராக இருந்தவர் ஒரு காங்கிரஸ்காரர்; இப்படி காங்கிரஸ்காரர் என்று விட்டுக்கொண்டே போனால் எப்படி என்பதை சற்று எண்ணிப்பார்க்கவேண்டும். இன்னொரு தகவலையும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவரும் ஒரு காங்கிரஸ்காரர்தான்.

வந்தவாசி கோவாபரேட்டிவ் சூபர்வைசிங் யூனியன் நிர்வாகஸ்தர் தேர்தல் 1964-ம் ஆண்டு செப்டம்பர் 26-ம் தேதியில் நடந்தது. காட்டேரி பலநோக்கு கூட்டுறவு நாணயச் சங்கப் பிரதிநிதி ஏ. ஆதிமூலம் என்பவர் ஒரு டைரக்டராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், அந்த ஸொஸைடியில் பார்த்த நேரத்தில் ஆதிமூலம் அவர்கள் அந்தச் சங்கத்திற்கு பிரதிநிதியாக வரவில்லை, வேலூர் ஜில்லா பாங்கிற்கு பிரதிநிதி. வந்தவாசி யூனியனுக்கு அவர் டெலிகேட் அல்ல. வந்தவாசி யூனியனுக்கு திரு. கே. எம். கோவிந்தராஜன் என்பவர் டெலிகேட். வந்தவாசி யூனியன் பிரசிடெண்டு, காட்டேரி சங்கத்திலிருந்து வந்த தீர்மானத்தினுடைய " ட்ரூ காப்பியை " கையெழுத்துப்போட்டு கொடுத்துவிட்டார். மறுபடியும், இந்த நிகழ்ச்சி அவருடைய கவனத்திற்குக்கொண்டு வரப்பட்ட பிறகு, அவர் அந்த இடத்திற்குச் சென்று அந்த சொஸைடி மினிட்ஸ் புத்தகத்தில் என்ன செய்தாரோ தெரியாது, அதே 6–10–64 தேதியிட்டு காட்டேரி சங்கத்தின் தீர்மானத்தின்படி வந்தவாசி யூனியனுக்கும் திரு. ஆதிமூலம் பிரதிநிதி, வேலூர் ஜில்லா பாங்கிற்கும் திரு. ஆதிமூலம் பிரதிநிதி என்ற அளவுக்கு செய்யப்பட்டுவிட்டது. வேணுகோபால் அவர்களுக்கு வந்தவாசியிலிருந்து எழுதிய கடிதத்தில்

> " தங்கள் கடிதப்படி (5–10–64).... காட்டேரி சங்கத்தை 5–10–64-ல் பார்வையிட்டு சங்க தீர்மான புத்தகத்தை நேரில் பார்வையிட்டு அன்று தீர்மான புத்தகத்தில் உள்ளபடி நகல் இத்துடன் அனுப்பியிருக்கிறது. யூனியன் அலுவலகத்தில் உள்ள தீர்மான நகலுக்கும் தற்போது உள்ள தீர்மான நகலுக்கும் மாறுதல் உள்ளது. தற்போது கொடுத்த நகல் தான் தீர்மானப் புத்தகத்தில் இருக்கிறது "

என்று எழுதியிருக்கிறார். இதிலே வேடிக்கை என்னவென்றால் அவர் கொடுத்த இரண்டு கடிதங்களும் 6–10–64 தேதியிட்டது தான். காட்டேரி சொஸைடியில் பார்வையிட்டது 5–10–64-ல் என்றால், ஆதிமூலம் டெலிகேட்டாக அனுப்பப்பட்டிருப்பது தெரிந்தால், 6–10–64-ல் வந்தவாசி யூனியனுக்கு திரு. கே. எம். கோவிந்தராஜன் பிரதிநிதி என்ற கடிதம் கொடுத்திருக்க முடியாது. 5–10–64-ல் போட்ட தீர்மானம், எப்படி –10–64-ல் மாறிவிட்டது? இதுபற்றி திருவண்ணாமலை டி. ஆர்.-க்கு ர்பிட்ரேஷன் செய்யவேண்டுமென்று பெடிஷன் கொடுத்தும், எந்த விதமான தகவலும் இல்லை. பார்வையிட்டது 5–10–64-ல் என்றால், –10–64-ல் தப்பாகக் கொடுத்துத் திருத்துவானேன் ? இரு கடிதங்கள் ரப்பட்டிருப்பானேன் ?





வந்தவாசி தாலூகா கமிட்டி செயலாளர் கஜபதி அவர்கள் செய்யாறு காங்கிரஸ் கமிட்டி தலைவருக்கு எழுதுகிறார். " வந்தவாசியில் நம்முடைய ஜாதி ஜெயித்துவிட்டது. செய்யாறிலும் நம்முடைய ஜாதி ஜெயிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் " ஜாதி என்று சொன்னால், காங்கிரஸ் என்று பொருள். இப்படி ஜாதியின் பெயரால் காங்கிரஸ் குறிப்பிடப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் சிங்கம்புணேரி பஞ்சாயத்து யூனியன் தலைவர் தலைமையில் செட்டிகுறிச்சி கிரெடிட் யூனியன் செயல்பட்டு வருகிறது. சட்ட விரோதமாக பலர் பெயர் மேல் ஏராளமான கடன் கொடுத்து மோசடி செய்யப்பட்டுள்ளது. வசூலிக்க ஏற்பாடு செய்யவில்லை. கணக்குப்பார்க்கச் சென்ற அலுவலர் அந்தத்தலைவரால் தாக்கப்பட்டுள்ளார். இதே தலைவர் பேரில் ரூ. 10,000 மோசடி கிரிமினல் வழக்கு போடப்பட்டுள்ளது. இதையும் விட்டு வைத்திருக்கிறார்கள். இந்த நிலைமையை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காங்கிரஸ் சர்க்கார் இப்படிப்பட்ட ஒரு நிலையை ஏன் நாட்டில் வளரவிடுகிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராவது இந்த சங்கங்களில் சேரவேண்டுமென்று விரும்பினால், அவர்களை நுழையவிடுவதில்லை. கிராமத்தில் ஒரு சொஸைட்டிக்கு தேர்தல் வந்தால், வேலூர் மத்திய சொஸைடியிலிருந்து கார்கள், வான்கள் வந்து வேலை செய்கின்றன. அவர்களுக்கு பணம் கொடுப்பது, அவர்களை ஏற்றிக்கொண்டு போவது, அந்த அளவுக்கு நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. திருவண்ணாமலை சங்கத்தில் திரு. ப. உ. ஷண்முகம் உறுப்பினராகச் சேரவேண்டுமென்று பலமுறை மனுச் செய்துகொண்டும், இதுவரையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. எதிர்க்கட்சியில் இருப்பவர்களை வேண்டுமானால் விட்டுவிடட்டும். மேல் சபையில் அங்கத்தினராக இருக்கிற திரு. தேவராஜ் முதலியார் அவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், எந்தச் சங்கத்திலும் உறுப்பினராகச் சேர முடியவில்லை. வட ஆற்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட சில சங்கங்களில் சிலர் தங்கள் சொந்த ஆதிக்கத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று இந்த மன்றத்தில் சொல்லியும்கூட, மந்திரி அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இப்படிப்பட்ட திருடர்களுக்கு இந்த சர்க்கார் துணையிருக்கிறதா என்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த நிலையை வளரவிடுங்கள், இந்த நிலையை வளரவிட்டால், 1967-வது ஆண்டில் எங்களுக்குக் காரியம் மிக எளிதாக இருக்கும்.

இப்பொழுது இந்தக் கூட்டுறவு இயக்கம் வளரவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் கிராம மக்களுக்கு எந்த அளவுக்கு துணை செய்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். பலரும் பல நிலைகளைச் சொன்னார்கள். குறுகிய காலக்கடன் தரப்படவில்லை. நில அடமான பாங்கு, அவர்கள் முன் கடனைக் கட்டுவதற்கு, அதை ஈடுசெய்வதற்கு கடன் தருவதில்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. முன் கடன் பட்டிருந்தால், அந்தக் கடனைத் திருப்பித் தருவதற்கு வேறு எங்கே போகிறது என்ற நிலையை எண்ணிப் பார்க்கவேண்டும். தாலூகாவுக்கு ஒரு நில அடமான பாங்கு இருக்கிறது. ஒரு தாலூகாவில் சுமார் 200 கிராமங்கள் இருக்கின்றன. இருநூறுக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு ஒரு தாலூகாவுக்கு ஒரு சங்கம் இருந்தால், எப்படி பணியாற்ற முடியும்? குறைந்தது ஒரு பஞ்சாயத்து யூனியன் அளவுக்கு ஒரு நில அடமான பாங்கு இருக்கவேண்டும், அந்த அளவுக்கு வழிவகை செய்யவேண்டும் என்ற நிலையையும் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, நில அடமான பாங்கு அவர்களுக்குக் கொடுக்கிற பணத்திற்கு $1\frac{1}{4}$ வட்டி வாங்கிக் கொள்கிறது. நில மத்திய பாங்கு 100-க்கு ஒரு பங்கு எடுத்துக் கொள்வதனால் தான், வட்டி விகிதம் கூடுகிறது. மத்திய நில அடமான பாங்கு செய்யக்கூடிய வேலை எல்லாம், கொடுக்கலாமா கொடுக்கக்கூடாதா என்று பார்த்து, கையெழுத்துபோடுகிற ஒரு வேலை தான். அதற்கு $1\frac{1}{4}$ வட்டி வேண்டுமா என்பதை எண்ணிப்பார்த்து, அதைத் குறைத்துக்கொள்வதற்கு வழி செய்யவேண்டும். பாங்கில் வேலை

செய்கின்ற "டி.ஆர்., சி. எஸ். ஆர்." ஆகியோர்களுக்கு சர்க்கார் பணம் கொடுப்பதில்லை, அந்தந்த சங்கமே எற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்கள். அதனால் அவர்களுக்கு செலவு ஆகிறது, அதை சர்க்காரே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தவேண்டும்.

சர்க்கரை ஆலையைப் பற்றி சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு சர்க்கரை ஆலை ஆம்பூரில் இருக்கிறது. வட மேற்குக் கோடியில் இருக்கிறது. வட ஆற்காடு மிகப் பரந்த மாவட்டம். போளூரில் நிறைய கரும்பு இருக்கிறது. கள்ளக்குறிச்சியில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது என்று சொல்லலாம். அது 30, 40 மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய கரும்பை உபயோகப்படுத்த போளூரில் ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்தவேண்டும்.

வட ஆற்காடு மாவட்டம் நெசவாளர்கள் அதிகமாக உள்ள பகுதி. வந்தவாசியில் கூட்டுறவு நூற்பு ஆலை துவக்கப்படுவதாக இருந்தது. ஆனால் அந்த நூற்பு ஆலைக்கு 15 லட்ச ரூபாய் பங்குப் பணம் தர முடியாத காரணத்தினால் அது கைவிடப்பட்டது. நெசவாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் கூட்டுறவு முறையில் சங்கம் அமைக்கப்படுகிறது என்று சொல்லிவிட்டு, அவர்கள் ரூ. 15 லட்சம் கொடுக்கவேண்டுமென்றால் என்ன செய்வது? ஏதோ 10 பேர்கள் சேர்ந்து ரூ. 15 லட்சம் கொடுத்துவிடுகிறார்கள் என்று சொன்னால், அந்த இடத்திற்கு கூட்டுறவு நூற்பு ஆலை போய்விடுகிறது. அப்படிப்பட்ட நிலை இல்லாமல், ஏழைகள் எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்தால், மற்ற பகுதியை சர்க்காரே கொடுக்கவேண்டும். அந்த முறையில் வந்தவாசி, செய்யாறை அடுத்து ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியிலே சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம், முடிதிருத்துவோர் கூட்டுறவு சங்கம் அமைத்திருக்கிறார்கள். அம்மாதிரி சங்கங்கள் எல்லா நகரங்களிலும் பரந்த அளவில் அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விவசாய கூட்டுறவு காலனி அமைக்கிறார்கள். அம்மாதிரி அமைக்கப்பட்ட சில கூட்டுறவு விவசாய காலனிகள் செயல்பட முடியாத நிலையில் போய் இருக்கின்றன. காரணம், அந்த இடத்தில் இருக்கிற நிலங்களுக்கு அவர்களுக்கு உரிமை இல்லை. அந்த இடத்தில் பணி புரிகின்ற வரையில் அங்கு இருக்கலாம். பணி புரியவில்லை என்றால், வெளியே வந்துவிடவேண்டும். அந்த நில உரிமை அவர்களுக்கு இல்லாத காரணத்தினால், அவர்களுக்கு பணிபுரிவதில் ஊக்கம் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலை இல்லாமல் விவசாயம் பண்ணுகிறவர்களுக்கு அந்த நிலமெல்லாம் உரிமை தான் என்ற அளவுக்குச் சட்டத்தை மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைகளை எண்ணிப்பார்த்து, ஆவன செய்யவேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே எல்லோரும் நல்ல பல யோசனைகளைச் சொன்னதற்காக என்னுடைய நன்றியை உங்கள் மூலம் கனம் மெம்பர்களுக்கு சொல்லுகிறேன். இரண்டு மூன்று ஆண்டுகளாக இந்த கூட்டுறவு மானியத்தின் பேரில் பேசின முறையையும், இந்த ஆண்டு பேசின முறையையும் பார்க்கும்போது, இந்தத் துறை நல்ல முறையிலே நடந்துகொண்டு இருக்கிறது என்று இன்றைக்குப் பேசிய மெம்பர்கள் சொன்னார்கள். ஒரு சிலருக்கு வருத்தம் இருக்கலாம், யாராவது குறைகூறுகிறார்கள். கூட்டுறவு துறையிலே சில குறைகள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் பொதுவாக எல்லா மெம்பர்களும் நல்லமுறையில் பேசினார்கள். அந்த முறையில் எல்லோருக்கும் என் நன்றியை உங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் முன்பு பேசியபோதே எல்லா விஷயங்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறேன். அதைப் பற்றித் திரும்பவும் பேசவேண்டாம் என்று விட்டு, சில கனம் மெம்பர்கள் சொன்ன விஷயங்களுக்கு மாத்திரம் பதில் சொல்லலாம்



என்று நினைக்கிறேன். எனது உரையை முடிந்தவரையிலும் 40 நிமிஷத்திற்குள்ளே அல்லது 30 நிமிஷத்திற்குள்ளேயேகூட முடிக்க சிரமப்படுகிறேன் என்று சொல்லப்பிரியப்படுகிறேன்.

ஆரம்பத்திலே ஹாண்ட்லூம் டிமாண்டில் பேசும்போது, இரண்டு கனம் மெம்பர்கள் இந்தக் கூட்டுறவு விஷயத்தைப் பற்றிச் சொன்னார்கள். கனம் காஞ்சி மணிமொழியார் அவர்கள் கூட்டுறவிலே கட்சிகள் இருப்பதாகச் சொன்னார்கள். நிச்சயமாகச் சொல்லுகிறேன். கூட்டுறவு ஸ்தாபனத்திலே எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். எல்லாக் கட்சிக்கும் அங்கே இடம் இருக்கிறது. ஏதோ ஒரு கட்சிக்குத்தான் இடம் என்பதை நான் ஒத்துக்கொள்ள முடியாது என்று உறுதியாகச் சொல்லுகிறேன். கூட்டுறவு ஸ்தாபனத்தை எடுத்துக்கொண்டால், அதிலே அக்கறை உள்ளவர்கள் சேர்ந்து தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவ்வளவுதான். கூட்டுறவு ஸ்தாபனத்தில் காங்கிரஸ் கட்சிக்குத்தான் இடம் இருக்கிறது. அவர்களுக்குத்தான் சொந்தம், மற்றவர்கள் உள்ளே புகக்கூட முடியவில்லை என்று கனம் அங்கத்தினர் சொன்னதை நான் ஒத்துக்கொள்ள முடியாது. அந்த நிலை இல்லை, அங்கே எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் இடம் உண்டு என்று சொல்லப் பிரியப்படுகிறேன். நாங்கள் கேட்டுக்கொள்வது என்ன? நல்லவர்கள் இருக்கவேண்டும், ஒழுங்காக வேலை செய்பவர்கள் இருக்கவேண்டும், பொறுப்பானவர்கள் இருக்கவேண்டும் என்பதுதான். அதைக்கூடச் சொன்னார்கள், புலவர் கோவிந்தன். மந்திரியவர்கள் ஆரம்பத்தில் சொன்னார்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாக சொல்லுகிறேன், அது பண விஷயம், பணம் புழக்கத்தில் இருக்கிறது, பெருந்தொகை புழக்கத்தில் இருக்கிறது, ஆகவே அதைச் சரியாகச் செய்பவர்களாக இருக்கவேண்டும். எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தால் என்ன, நல்லவர்களாக இருக்கவேண்டும். அவர்களுக்கு என்று உபயோகிக்கும் நிலைமை இருக்கக்கூடாது. நல்ல தலைவர்கள், மெம்பர்கள் இருக்கவேண்டும் என்று உங்கள் மூலம் தெரிவிக்கிறேன்.

இன்னும் பல மெம்பர்கள் எனது ஆரம்ப உரையில் சொன்னதைப் பற்றியும் சொன்னார்கள். எனது ஊரைச் சேர்ந்த கனம் மெம்பர் நல்லசிவம் அவர்கள்கூட ஒன்றிரண்டு கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிச் சொன்னார்கள். நான்கூடச் சொன்னேன், அதற்கு வேண்டிய விஷயங்களை எழுதி அனுப்பினால், நிச்சயமாகக் கவனிக்கிறேன் என்று. கவனிப்பேன் என்று சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

கூட்டுறவு ஸ்தாபனங்கள் நன்றாக நடக்கவேண்டும் என்கிற அடிப்படையில்தான் செய்கிறோம். சற்று முன்பாகக்கூட, என்னிடத்தில், கனம் எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டு இருந்தபோது, கூட்டுறவு ஸ்தாபனம், மாணவர்களுக்குப் பயன்பட, கல்லூரிகளில், அதே போல உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில், அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும், அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று அவர்கள் பேசிக்கொண்டு இருந்தார்கள். இன்றைக்கு 400-க்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்களில், கூட்டுறவு முறையில் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவர்கள் கூட்டுறவு முறையிலே புஸ்தகங்களை வாங்கி, விற்பனை செய்யும் கடைகளை, ஸ்டோர்களை வைத்திருக்கிறோம். அங்கே இருக்கக்கூடிய மாணவர்களே அதிலெல்லாம் தலைவர், செக்ரடரி, கணக்கு பார்க்கிறவர்கள் என்று இருக்கிறார்கள். அப்படி அவர்களே செய்துகொண்டு இருப்பதால், அவர்களுக்கு நல்ல பயிற்சி, கூட்டுறவு இயக்கத்தில் நல்ல நம்பிக்கை ஏற்பட நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் உங்கள்மூலம் கனம் எதிர்கட்சித் தலைவருக்கு நான் இந்த சமயத்திலே சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

அடுத்தபடியாக அவர்கள் என்னிடத்தில் ஒரு யோசனையைச் சொன்னார்கள். விஜிலன்ஸ் விங் வைத்தால் நல்லது இல்லையா என்று கேட்டார்கள். அப்படி விஜிலன்ஸ் விங் அமைக்க வேண்டியது இல்லை என்று நான் கருதுகிறேன். நான் முன்பும் சொன்னேன், மறுபடியும் அதையே உறுதிப்படுத்துகிறேன். இந்தத் துறையில் தவறுகள் அதிகமாக இல்லை என்பதை. இங்கு ஒன்று, அங்கு ஒன்று என்று குற்றங்குறைகள் இருக்கலாம். அதற்காக விஜிலன்ஸ் விங் என்று தனியாக அமைக்க

வேண்டும், அதன்மூலம் வேலை செய்யவேண்டும் என்கிற அவசியம் இல்லை என்பதை கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள பிரியப்படுகிறேன். ஆங்காங்கே பாராலிக்யூஷன் லெவலில் பார்க்கக்கூடியதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அதை யெல்லாம் கவனிக்க டி.ஆர்.-கள்., வி.எஸ்.ஆர்.-கள் இவர்களை நியமித்து இருக்கிறோம். அவர்களெல்லாம் நல்ல முறையில் இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, தனியாக ஒரு விங் இதற் கென்று ஏற்படுத்தவேண்டும் என்கிற அவசியம் இல்லை, தேவை இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

அடுத்து, தணிக்கையாளர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று கனம் சுப்பிரமணியக் கவுண்டர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் ஒரு சில கனம் மெம்பர்களும் தணிக்கையாளர்கள் அதிகமாகத் தேவை என்று எடுத்துச் சொன்னார்கள். நானும் அதை ஒத்துக்கொள்ளு கிறேன். தணிக்கையாளர்களை அதிகப்படுத்தி, அதோடு அடிக்கடி தணிக்கை களை அதிகமாக செய்யவேண்டும என்பதை ஏற்படுத்தவேண்டும் என்பதை நான் வற்புறுத்திக்கொண்டு வருகிறேன். சற்று அதிகப்படுத்தியும் இருக்கிறோம் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

அதேபோல இன்னும் கனம் மெம்பர், நாராயணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது, சொன்னார்கள். எப்பொழுதும் பண்டார சன்னிதிக்கும் அவர்களுக்கும் தகராறுதான். நான் அவர்கள் ஊருக்குப் போனபோது கூடப் பார்த்தேன். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்கும் என்றால், நான் அந்த மடத்திற்குப் போய் சுமார் 20 ஆண்டும், மேலும் இருக்கும். நான் அவர்களுக்கு மிகவும் வேண்டியவர்கள், சிஷ்யன் என்று குறிப் பிட்டார்கள். சிறந்தவர்கள், பண்டார சன்னிதி மட்டுமல்ல, நாராயணசாமி நாயுடுவாக இருந்தாலும், பெரியவர்களாக, நல்லவர்களாக இருந்தால், நிச்சயமாக நான் அவர்களுக்கு சிஷ்யனாக இருப்பேன். அது ஒரு புறம் இருக்க, அவர்கள் சொன்ன காரியங்கள்கூட கவனிக்கவேண்டிய ஒரு நிலை இருக்கிறது என்பதைக்கூடச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல கனம் மெம்பர் தியாகராஜ பிள்ளை தொகுதிக்குச் சென்றிருந்தபோதுகூட, கோவில் நிலங்களில் 60, 40 பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறதைப் பார்த்தேன். சில இடங்களில் தகராறுகள் இருக் கின்றன என்றும் சொன்னார்கள். மடாதிபதிகளுடைய நிலைமை என்ன என்பதை நேரிடையாக, உடனடியாகச் சொல்லத் தெரியாமல் இருந் தாலும், தியாகராஜ பிள்ளை தொகுதிக்குச் சென்றிருந்தபோது தெரிந்து கொண்டேன், கோவில் நிலத்தில் இருப்பவர்கள், கோவிலுக்குத் தருவதை கூட ஏமாற்றுகிறார்கள், சொஸைடிகள் கோவில் நிர்வாகத்திற்குக்கூட பணம் கொடுக்காமல், நஷ்டம் ஏற்பட்டுவிட்டது, அதற்காகத் தள்ளிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய சங்கடமான நிலையைப் பார்த்தேன். சங்கங்கள் நல்ல முறையிலே நடக்கவேண்டும் என்பதற் காகத்தான், அரசாங்கம் அந்த நிலையையும் மனதில் கொண்டு, புதிதாகச் சங்கங்கள் ஏற்படுத்தவேண்டாம் என்ற ஒரு முடிவில் இருப்பதைச் சொல்லப் பிரியப்படுகிறேன்.

அதேபோல பல கனம் மெம்பர்களெல்லாம், பல விஷயங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். கனம் வடிவேல் அவர்கள், ஆரம்பத்தில் பேசும்போது, சில விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். சில ரெவின்யூ வில்லேஜ்களிலே இல்லை என்று சொன்னார்கள். நான் சொன்னேன், பெரிய ரெவின்யூ வில்லேஜ்களில் இருக்கும், சின்ன ரெவின்யூ வில்லேஜ்களில் ஒன்றிரண்டு அப்படி இருக்கலாம் என்று சொன்னேன். அவர்கள் கிராமத்தைக் குறிப்பிட்டார்களோ என்னவோ. கவனித்துப் பார்த்தால், சிறிய ரெவின்யூ வில்லேஜ் எப்படி இருக்கும் என்று சொன்னால், வரக்கூடிய சர்க்கார் நிலவரிகூட அங்கே இருக்கக்கூடிய மணியக்காரர்களுக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்குக்கூட வருவாய் இல்லாமல் இருக்கலாம். அப்படி ஆங்காங்கே ஒரு சில ரெவின்யூ வில்லேஜ்கள் இருந்துகொண்டு இருக்கின்றன. அங்கெல்லாம் நிச்சயமாக சொஸைடிகள் ஏற்படுவதில் சந்தேகம் இல்லை.





அதே போல இன்னும் சில விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஹௌஸ் மார்ட்கேஜ் பாங்கு பற்றிச் சொன்னார்கள். ஆங்காங்கே பல இடங்களில் தேவை என்பதை மிக நன்றாகச் சொன்னார்கள். தாலூகா விற்கு ஒன்று வேண்டும் என்பதுதான் திட்டம். உடனடியாக தாலூகா விற்கு ஒன்று ஏற்படுத்தவேண்டிய ஏற்பாடுகள் நடந்துக்கொண்டுதான் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளப் பிரியப் படுகிறேன்.

அடுத்து, கனம் அங்கத்தினர் ஸ்ரீமான் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் சில விஷயங்களைப் பற்றி மிக நன்றாக எடுத்துச் சொன்னார்கள். கூட்டு றவுத் துறையில் அவர் பல ஆண்டுக் காலமாகச் சேவை செய்து நேரடியான அனுபவம் அவருக்கு இருக்கிற காரணத்தால் அவர்கள் பல விஷயங்களை எடுத்துச் சொன்னார்கள். அவையெல்லாம் அரசாங்கத்தின் கவனிப்பிலே நிச்சயமாக இருந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். வட்டி விஷயத்தைப்பற்றி அவர்கள் சொன்னார்கள். அதிலே கூட, கூட்டுறவுத் துறையைப் பொறுத்து ரிசர்வ் பாங்கினுடைய நிலையைப் பார்த்துத்தான் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அட்வைசரி கமிட்டி பற்றி அவர்கள் சொன்னார்கள். அட்வைசரி கமிட்டியிலும் அவர் மெம்பராக இருந்து பணியாற்றும் காரணத்தால், அதைப்பற்றி யோசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கலாம். அதைப்பற்றியும் இப்பொழுது ஆலோசனையில் இருக்கிறது என்று நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உணவுக் கார்ப்பரேஷன் மூலமாகச் சில கடன்கள் கொடுப்பதிலே இப்பொழுது கவனம் செலுத்தவேண்டும். ஏதாவது பிரச்சினை ஏற்படக்கூடும் என்ற ஒரு நல்ல விஷயத்தையும் அவர்கள் சொன்னார்கள். உணவுக் கார்ப்பரேஷனைச் சேர்ந்தவர்களுடன் இதைப் பற்றிக் கூடிய சீக்கிரத்தில் நான் கலந்துபேசி அதற்கு என்ன ஏற்பாடு செய்ய முடியும் என்பதையும் கவனிக்கிறேன் என்று நான் அவர்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். ஆடிட்டைப்பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நான் முதலிலேயே குறிப்பிட்டேன். அவர் இன்னும் ஒருசில விஷயங்களைச் சொன்னார்கள். அந்த விஷயங்களையும் நாங்கள் நல்ல முறையில் கவனித்து அவற்றுக்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய் வதிலும் தீவிர கவனம் காட்டுவோம் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கனம் அங்கத்தினர் ஸ்ரீமான் ராகவ ரெட்டியார் அவர்கள் சில யோசனைகளைச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பாக மூன்று விஷய களைச் சொன்னார்கள். அவை அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து கொண்டிருக்கின்றன என்று நான் அவர்களுக்கு இப்பொழுது உறுதியாக சொல்ல முடியும்.

கனம் அங்கத்தினர் திரு. ஸ்ரீராமுலு அவர்கள் பேசும்போது, சர்க்கரை ஆலைகளைப்பற்றிக் குறிப்பிட்டு, சில காரியங்கள் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். இது தொழில் இலாகா மூலமாகப் பார்த்துச் செய்யப்ப வேண்டிய காரியம். அவர்கள் சொன்ன கருத்தை அப்படியே நா தொழில் அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி வேண்டிய ஏற்பாடுகளை செய்கின்றேன் என்று சொல்லிக்கொள்கின்றேன். கூட்டுறவுத் துறையி துவங்கக்கூடிய அரிசி மில்களை ஃபாரின் கொலாபொரேஷனுடன் நடத் வேண்டுமென்று பொதுவான ஒரு யோசனையைச் சொன்னார்கள். தி வாரூரில் ஏற்படுகிற அரிசி மில்லானது ஃபாரின் கொலாபொரேஷனுட கூட்டுறவுத் துறைக்கு கிடைத்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்ட அமைந்திருக்கிறது. நம்முடைய கூட்டுறவுத் துறைக்கும் ஃபாரின் கொல பரேஷன் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாக தான் அது ஏற்பட்டிருக்கிறது. 25 லட்ச ரூபாய் இதற்குச் செலவழிக்கிறோ என்றால் ஃபாரின் கொலாபொரேஷனுடன் தான், அவர்களுடை உதவியை வைத்துத்தான் இதைச் செய்துகொண்டிருக்கிறோம். கன அங்கத்தினர் திரு. ஸ்ரீராமுலு அவர்களுடைய யோசனைக்கு முன்பாகவே நாங்கள் அந்த வகையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்று நா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பெருமை அ

[ திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் ] [24th March 1965

களுக்கு என்று சொல்வதைவிட எங்களுக்குத்தான் சாரும் என்று நான் சொல்லப் பிரியப்படுகிறேன். அவர்கள் தெரிவித்த யோசனைக்காக அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்து கனம் அங்கத்தினர் திரு. ராமலிங்கம் அவர்கள் பேசினார்கள். அவர்கள் பல ஆண்டுகளாகக் கூட்டுறவுத் துறையிலே சேவை செய்து வருவதோடு நில அடைமான பாங்கின் தலைவராகவும் இருந்துகொண்டிருக்கிறார். அவர்களுடைய அனுபவத்தை வைத்து அவர் சில அரிய விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். நில அடைமான பாங்கிலிருந்து கடன் கிடைப்பது இன்னும் சிரமமாக இருக்கிறது என்றே சொல்கிறார்கள். எனக்கும் பல ஆண்டுகளாக அதில் அனுபவம் இருக்கிறது. பதினாறு, பதினேழு ஆண்டுகளாக நான் நில அடைமான பாங்கின் தலைவராக இருந்து, சென்னைக்கு வந்ததிலிருந்துதான் அந்தப் பதவியிலிருந்து விலகி வந்திருக்கிறேன். எனக்குத் தெரிந்த வகையில், முன்பு இருந்த கஷ்டம் இப்பொழுது இல்லை என்று தான் சொல்ல முடியும். கூடிய வரையில் கடன்கள் சீக்கிரமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்குப் பல வழிவகைகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். 2,000 ரூபாய்க் கடன் என்றால் அங்கிருக்கும் பாங்கின் பொறுப்பிலேயே கொடுக்கலாம், 3,000 ரூபாயாக இருந்தால், சென்ட்ரல் பாங்கின் பொறுப்பிலேயே கொடுக்கலாம், அதற்கு மேலாகக் கொடுக்கவேண்டுமென்றால், சென்னை மத்திய பாங்கினுடைய நிலைக்கு வரவேண்டும் என்றெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. கோரப்படுகின்ற கடன் தொகை கொடுக்கப்படாமல் ஓரளவு குறைக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. அப்படிக் குறைக்கப்படுவதற்குக் காரணம், நிலத்தின் மதிப்பைப் பொருத்ததாக இருக்கும். முன்பெல்லாம் நிலத்தின் மதிப்பை மிகவும் குறைத்துதான் மதிப்பிட்டு, கடன் தொகையைக் குறைத்துக் கொடுப்பார்கள். அது அப்போதிருந்த நிலை. இப்போதைய நிலை அப்படி அல்ல. மார்க்கெட் ரேட்டை வைத்து நிலத்தின் மதிப்பைக் கணக்கிட்டு, அதற்கேற்றபடி கடன் கொடுக்கிறார்கள். ஒரு நிலம் என்ன விலைக்கு பக்கத்தில் விற்றிருக்கிறதோ, அந்த விலையின் அடிப்படையில் மார்க்கெட் ரேட்டைக் கணக்கிலெடுத்துக்கொண்டு நிலத்தின் மார்க்கெட் மதிப்பில் பாதிக்கு மேல் கடன் கொடுக்கக்கூடிய ஏற்பாடு இருக்கிறது. ஒரு நிலம் சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமானமுள்ளதாக இருந்தால், இருபத்தையாயிரம் ரூபாய் வரையில் கடன் கொடுக்கலாம் என்ற ஏற்பாடு இருக்கிறது. இந்த ஏற்பாட்டை விவசாயிகள் நல்ல முறையில் வரவேற்பார்கள் என்று தான் நான் சொல்ல முடியும்.

அட்வைசர் கமிட்டியை அடிக்கடி கூட்ட வேண்டும் என்ற யோசனையை கனம் அங்கத்தினர் திரு. ராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கமும் அதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறது. சென்ட்ரல் பாங்கிலிருக்கும் அட்வைசரி கமிட்டி அடிக்கடி கூடவேண்டுமென்பது தான் உத்தேசம். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அட்வைசரி கமிட்டியைக் கூட்டுவது என்பது முன்பு இருந்த ஒரு ஏற்பாடு. இப்பொழுது எல்லாம் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கூடி, மற்ற துறையில் எக்ஸிக்யூடிவ் கமிட்டி இருப்பதுபோல், இது விஷயங்களைக் கவனிக்கவேண்டும் என்ற முறையில் தான் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிக நாட்கள் கழித்துக் கூடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடினால் மனுக்கள் அதிகமாகத் தேங்கிப் போய், காலதாமதம் ஆகும். அதைத் தவிர்க்க வேண்டும் என்ற நிலையில் தான் 15 நாட்களுக்கு ஒருமுறை கூடி முடிவு செய்யவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். அதேபோல, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கூட, கடன் கொடுக்கக் கூடிய நிலையில், சீக்கிரமாகக் கொடுக்கவேண்டும் என்பது தான் உத்தேசம். எப்படியும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள்ளாக விவசாயிகளுக்கு க்ரேடிட் சொஸைட்டி மூலமாகக் கடன் கிடைத்தாக வேண்டும் என்று முயற்சி எடுத்து, இப்பொழுது அதன் பிரகாரம் காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நானும் ஒரு விவசாயி என்ற முறையில் சொல்கிறேன். நில அடைமான பாங்கிலிருந்தோ, வேறு எந்தக் கூட்டுறவு சொஸைட்டியிலோ நான் கடன் வாங்கியது இல்லை என்றாலும், இப்படிப்பட்ட ஸ்தாபனங்களிலிருந்து



24th March 1965] [ திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் ]

கடன் வாங்குவதிலுள்ள கஷ்ட நஷ்டங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து நல்ல திருப்பம் ஏற்பட இருக்கிறது என்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையைக் குறித்துக் குறைபட்டுப் பேசக்கூடிய நிலை இன்னும் கொஞ்ச நாட்களுக்குத்தான் இருக்கும். அதிக நாள் குறை சொல்லிக் கொண்டிருக்கத் தேவை இருக்காது. ஏனென்றால் "ஸீஸனலிடி கடன்" திட்டம் வர இருக்கிறது. இப்பொழுதெல்லாம் ஆறு மாதக் கடன் வாங்கிவிட்டு, ஐந்தாவது மாதத்திலேயே திருப்பி வாங்கிவிடுவது போன்ற புகார் இருக்கிறது. அந்தப் புகாருக்குக் காரணம் இல்லை என்று சொல்லவில்லை. காரணம் இருக்கிறது என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். எனக்கே சங்கடமாகத்தான் இருக்கிறது. ஏனென்றால், நானும் ஒரு விவசாயி என்ற நினைவு எனக்கு உண்டு. விவசாயிகளுக்கு நல்லது செய்தோம் என்ற நல்ல பெயருடன் போகவேண்டும் என்ற எண்ணம் தான் எனக்கு. கேட்கக்கூடியவர்களும் கேட்பார்கள். ஸீஸனலிடி லோன் திட்டம் நல்ல பலன் அளிக்கும் என்று நான் நினைக்கிறேன். இந்தத் திட்டப்படி ஒரு ஆண்டில் மூன்று கடன் வேண்டுமானாலும் கொடுக்கலாம். இரண்டு போகம் பயிரிடும் ஒரு விவசாயி, முதல் போகத்தில் நெல்லை அறுவடை செய்து அந்த நெல்லை விலைக்கு விற்றுத்தான் கடனைக் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆனால், இந்தத் திட்டத்தின்படி நெல்லை அறுவடை செய்து, அதைத் தூற்றி கோடவுனில் வைத்திருந்தாலும் கூட, திரும்ப விற்பனை ஆவதற்கு முன்பாகவே கடன் கொடுத்து, அதிலிருந்து அடுத்த போகத்திற்கு வேண்டிய விதை, நெல், உரம் முதலியவற்றை வாங்குவதற்கு வசதி ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்ற வகையில் தான் ஸீஸனலிடி லோன் திட்டம் வருகிறது. எந்தச் சமயத்தில் கடன் கொடுப்பது, எந்தத் தேதியில் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்ற முறை இருப்பதால், இனி இந்தப் பிரச்னை இருக்காது என்று நான் எண்ணுகிறேன். இந்த மானியக் கோரிக்கை வருவதற்கு முன்பே, இந்த ஸீஸனலிடி லோன் திட்டம் பற்றி, என் வீட்டில் நடந்த கல்யாணத்திற்கு வந்திருந்த பல நண்பர்களிடம் நான் பேசிக்கொண்டிருந்தேன். நான் சார்ந்திருக்கும் கட்சி நண்பர்கள் மட்டுமல்ல, மற்ற தரப்பில் உள்ள நண்பர்களும் வந்திருந்தார்கள். அவர்களிடமும் நான் இதைப்பற்றிப் பேசினேன். அவர்கள் அதைக் கேட்டு சந்தோஷப்பட்டார்கள். "நல்ல வரவேற்கக்கூடிய நிலை" என்று தான் அவர்கள் எல்லோரும் என்னிடம் சொன்னார்கள். ஆக, இந்த ஸீஸனலிடி கடன் திட்டம் ஏப்ரல் மாதத்திலிருந்து வரப்போகிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. ராகவ ரெட்டி அவர்கள் பேசும்போது, ஏதோ கடன் கொடுப்பதில் ஆயிரம் ரூபாய் என்று வரையறுத்திருப்பதாகச் சொன்னார்கள். நபர் ஜாமீனுக்குத்தான் ஆயிரம் ரூபாய் என்ற வரையறை இருக்கிறதே தவிர, வேறு விதமாகக் கொடுக்கின்ற நிலை வரும்போது, 5,000 ரூபாய் வரைக்கும் கடன் கொடுக்கலாம் என்று தான் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் பேசும்போது சில விஷயங்களைச் சொன்னார்கள். உத்தியோகஸ்தர்களுக்குச் செய்ய வேண்டியதைப் பற்றிச் சென்னார்கள். கன்பர்மேஷனைப்பற்றிச் சொன்னார்கள். அதைச் செய்துவிட்டோம். அவர் குறிப்பிட்ட மற்ற விஷயங்களிலும் முயற்சி எடுத்து, என்ன செய்யவேண்டும் என்பது யோசனையில் இருந்துகொண்டிருக்கிறது என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக அவர், சலவையாளர்களுக்கு "ஸோடா ஆஷ்" தேவைப்படுவதைப்பற்றிச் சொன்னார்கள். அது எந்த அளவுக்குத் துணிகளை வெளுக்க வைக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. என்றாலும், சோடா ஆஷ் என்பது ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் மூலமாகக் கிடைக்கக் கூடிய ஒரு பொருள். அங்கேயே அதற்கு ஸ்கேர்ஸிடி இருக்கலாம். என்றாலும், இதுபற்றி நான் கூட்டுறவுப் பதிவாளரிடம் கலந்து பேசி, என்ன செய்யவேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்லியதன் பேரில்,

அவர்கள் ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுதி
30 யிருக்கிறார்கள். அதுபற்றியும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. போகப் போகத் தான் விவரம் தெரியும் என்று நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

Sir, may I take another 15 minutes?

MR. DEPUTY SPEAKER : I think the House has no objection to sit till 1-45 p.m.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அடுத்தபடியாக திரு. வடிவேல் அவர்கள் பேசும்போது கூட ரொம்ப சந்தோஷப்பட வேண்டியதாக இருந்தது. தொடர்ந்து பதவியில் ஒட்டிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதை மறந்து ஒருவர் தொடர்ந்து 2 வருஷம் இருக்கலாம், அப்புறம் ஒரு ஆண்டாவது இடையில் ஒரு பீரியட் இல்லாமல் இருக்க வேண்டும், அப்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்தினார். இப்போது நாம் கையைத்தூக்கித் தேர்ந்தெடுக்கும் முறையை வைத்துக் கொள்ளவில்லை. அதனால் ஒருவர் தம் செல்வாக்கைக் கொண்டு தொடர்ந்து பதவியில் இருக்க சந்தர்ப்பம் உள்ளது என்று சொல்வதற்கு. சீக்ரெட் பாலடிங் முறைப்படி தேர்தலை அங்கும் கொண்டு வந்து விட்டோம். ஆகவே நேராக முகத்திற்கு எதிரில் எப்படி எதிராக வோட்டுப் போடுவது என்கிற பயம் இடையாது. அப்படி இருக்கிறபோது தேர்ந்தெடுக்கப்படுகிற ஒருவரை எப்படி அவர் வாக்கூடாது என்று நாம் தடுக்க முடியும் என்பதையும் உறுப்பினர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

என்னுடைய ஜில்லாவைச் சேர்ந்த திருமதி குழந்தையம்மாள் அவர்கள் சில விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் எப்போதுமே சுறுசுறுப்பாகப் பேசக் கூடியவர்கள். நல்ல விவசாயக் குடும்பத்தில் இருந்து வந்து இருப்பவர்கள். அதனால் நான் பெருமைப் படுகிறேன். அவர்கள் பேசும்போது அந்தப் பகுதியில் சேகரிக்கப்படுகிற பாலுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாகத் தொகை கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். இதுபற்றி உணவு அமைச்சர் திரு. ராமையா அவர்களும் கவனிக்கவேண்டும். இதில் ஒரு சங்கடம் இருக்கிறது. லிட்டருக்கு நான்கு பைசா கூடுதலாகக் கொடுப்பதனால் எங்கள் பகுதியில் மாடுகள் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு கொஞ்சம் அனுகூலம் ஏற்படும். அதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதே சமயம் அங்கே லிட்டருக்கு 4 பைசா உயர்த்தினால் இங்கு சென்னையில் பால் வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் இருக்கிறார்களே—இவர்கள் லிட்டருக்கு நான்கு பைசா கூடுதலாகக் கொடுக்கும்படி வரும். இப்படியே விலை ஏறிக் கொண்டு போகும். இதையும் கனம் அங்கத்தினர்கள் யோசித்தாக வேண்டும்.

அடுத்து, சுதந்திராக் கட்சித் தலைவர் பால் சங்கத்தில் இருக்கிறவர்கள் பாலைக் குடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். வேறு எதையாவது குடிக்காமல் பாலைக் குடிக்கிறார்களே என்பதில் சந்தோஷம்தான். இருப்பினும் வருகிற பாலை எல்லாம் குடித்தால் ஜரித்துக்கொள்ள முடியாது. மாட்டைப்பற்றி, அதன் வளர்ப்பைப்பற்றி தெரியாதவர்கள் பால் சங்கங்களின் நிர்வாகிகளாக வருவதாகச் சொன்னார்கள். மாடு இல்லாதவர்கள் கூட மாடு வாங்கிக் கொள்ளத்தான் இந்தச் சங்கம். திரு. சா. கணேசன் சொன்னது அவ்வளவும் சரியல்ல. ஏன் அப்படிச் சொன்னார்கள் என்று தான் எனக்குத் தெரியவில்லை.

கனம் இராசாங்கம் அவர்கள், கனம் கார்ச்சா கவுடர் அவர்கள் ஆகியவர்கள் எல்லாம் பல யோசனைகளைச் சொன்னார்கள். கனம் அம்மையார் ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் மிகவும் சிறப்பாகப் பாராட்டினார்கள். அதற்காக நன்றி. ஆயினும் கடந்த நான்காண்டுகளின் அனுபவம்—பாராட்டுதல் முன்னால் இருந்தால், பின்னால் கோரிக்கையும் இருக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்—(சிரிப்பு) புகழ்ச்சி





கிடைக்கிறது என்றால் ஆபத்து இருக்கிறது என்று அர்த்தம். அவர்கள் வீடு கட்டும் திட்டத்தைப் பற்றித்தான் வற்புறுத்திச் சொன்னார்கள். அதற்கு ஸ்கீமே இருக்கிறது. சென்ற ஆண்டு நிதி பற்றாக்குறை காரணமாகக் கொடுக்கப்படாமல் இருந்தது. இந்த ஆண்டுத் தொகை கிடைக்கிறபோது அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்ல விரும்புகிறேன். இன்னும் மேலப்பாளையம் இண்டஸ்ட்ரி பற்றிச் சொன்னார்கள். அது கவனிக்கவேண்டிய விஷயம்.

கனம் சின்னராஜ் அவர்கள் சொன்ன விஷயங்களும் கவனிக்கப்படும். சர்க்கரையும், அரிசியும் கொடுக்கப்படவேண்டும் என்றார்கள். அதையும் கவனிக்கின்றேன். கனம் ராஜகோபால்சாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்ட விஷயம் ஏற்கனவே முடிவாகி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டாகி விட்டது.

கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் சில முக்கியமான விஷயங்கள் நல்லமுறையில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன, செய்யாறு விஷயத்தைப்பற்றித்தான் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். குற்றம் செய்பவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று பார்த்து நடவடிக்கை எடுப்பதில்லை. காங்கிரஸ் கட்சிக்காரர் தவறு செய்யவில்லை என்றால் நடவடிக்கை எடுக்க முடியுமா? அவர் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காகத் தவறு செய்கிறபோது நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியுமா? நானே தவறு செய்தால் அது சரியாகப் போய்விடுமா என்ன? வேண்டியவர் வேண்டாதவர் என்று பார்த்து ஒன்றும் செய்வதில்லை. அவர் குறிப்பிட்ட சம்பவம் போலீஸ் விசாரணைக்கு அனுப்பப்பட்டது. ஆதாரம் இருந்தால், நிச்சயமாக அந்தப் புகாரின் மீது நடவடிக்கை எடுத்திருப்பார்கள். அவர் கட் மோஷன் கொடுத்திருந்ததைப் பார்த்தவுடன் இதைப்பற்றித்தான் குறிப்பிடுவார் என்று எதிர்பார்த்தேன். அவர் குறிப்பிட்ட மற்ற இரண்டு விஷயங்களையும் நான் பரிசீலனை செய்கின்றேன். அதுபற்றி அவர் சந்தேகப்படவேண்டியதில்லைஎன்று—சபாநாயகர் அவர்களே—தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளப் பிரியப்படுகிறேன். இன்னும் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் " Police was directed to drop the investigation " என்றிருக்கிறது. இன்னும் அவர்கள் ஒன்றிரண்டு விஷயங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எந்த விஷயங்களாக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நிச்சயமாக உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. அநேகமாகக் கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் நல்ல முறையில் நடக்கின்றன. கூட்டுறவிலே நல்ல புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மக்களுக்கே கூட்டுறவு மூலம் கடன் வாங்கமுடியும், சுலபமாக வாங்கமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. சென்ற ஆண்டிலே 17 ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன என்று நான் சொன்னேன். ஆனால் இந்த ஆண்டிலே நான் சொல்ல முடியும், 19 ஆயிரத்துச் சில்லறை கூட்டுறவுச் சங்கங்கள் இப்பொழுது இருக்கின்றன. 20 ஆயிரத்திற்கு, நூற்றுக்கணக்கில், அல்லது இருபது கணக்கில்தான் குறைவாக இருக்கும். ஆகவே, உங்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். உங்களுக்கு என்றால் ஜனங்களுக்கு, ஏனென்றால் நீங்கள் ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறீர்கள். ஆகவே, உங்கள் மூலமாகச் சொல்கிறேன், கூட்டுறவு நல்ல முறையிலே நடந்து வருகிறது. கூட்டுறவினால் நாம் பல நன்மைகளை அடைந்துவருகிறோம், கூட்டுறவுத்துறை மக்களுக்கு நல்ல முறையிலே சேவை செய்யும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இந்த உறுதியை மக்களிடத்திலும் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்ததற்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** நான் அமைச்சர் அவர்களிடத்தில் பல குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கிறேன. அதில் இது எந்தக் குற்றச்சாட்டுக்கு என்று தெரியவில்லை. " **Police was directed to drop the investigation** " என்று சொல்லியிருக்கிறார்கள். டைரக்ஷன் கொடுத்தவர் யார் ? எந்த

[புலவர் கா. கோவிந்தன்] [24th March 1965

அடிப்படையை வைத்துக்கொண்டு அந்த டைரக்ஷன் கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் விளக்கமாகக் கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் உப தலைவர் அவர்களே, நான் சொன்னது, யாரோ நானோ, அல்லது எங்கள் டிபார்ட்மெண்டோ, அல்லது சர்க்காரோ ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று யாரும் நினைக்கக்கூடாது, போலீஸ் அளவிலே இது சென்று இதை விட்டுவிட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதற்காகச் சொன்னேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 2,42,68,900 under Demand No. XIX—Co-operation be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,42,68,900 under Demand No. XIX—Co-operation."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 3,82,000 under Demand No. XL—Capital Outlay on Consumers' Co-operatives be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,82,000 under Demand No. XL—Capital Outlay on Consumers' Co-operatives."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

165. *Notification issued with Proceedings Roc. No. 30922/64-F5, dated 28th September 1964, directing under section 3 (2) (c) fo the Madras Panchayats Act,* 1958 *the inclusion of certain areas in the Vilpatti Panchayat village in Kodaikanal taluk, Madurai district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayat Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

166. *Notification issued with Roc. No. 44743/64-F6, Rural Development and Local Administration, dated 22nd October 1964, regarding the area of jurisdiction of Vettuvakottai and Unjividuthi panchayat villages in Orathanad taluk, Thanjavur district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]



24th March 1965]

167. *Notification issued with G.O. Ms. No. 2879, Revenue, dated 8th December 1964, amending the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Rules*, 1962, *published with Revenue Department Notification S.R.O. No. A-836 of 1962, dated the 29th September* 1962, *in Part V of the* Fort St. George Gazette *Extraordinary, dated the 29th September* 1962, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 112 (2) *of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act*, 1961 (*Madras Act 58 of* 1961).]

### B. Reports, notifications and other papers.

* 87. *Review of the progress made in Co-operative Development Schemes*, 1964-65 (*English*).

---

* Circulated to Members on 23rd March 1965.

# APPENDIX.

[*Vide* answer to starred question No. 314 on page 503 supra.]

**Details of the Schemes under consideration for Improvement of Slums and for Housing Projects in Salem.—**

| Name of the Scheme/ Project. | Cost. | Number of tenements or open developed plots. | Number of families. | Remarks. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | RS. | | | |
| I. Slum Improvement Clearance— | | | | |
| Nalukalmandapam Slum Improvement Project. | 2,31,000 | 36 tenements (double storeyed). | 36 | Tenders settled. Work is being taken up. |
| Narayanaswamipuram Slum Improvement Project. | 1,84,000 | 28 tenements (double storeyed). | 28 | Tenders have been received and they are under scrutiny of the State Housing Board. |
| Raghava Reddiar Road Slum Improvement Project. | 3,65,000 | 64 tenements (double storeyed). | 64 | Do. |
| Annadanapatti Slum Improvement Project. | 1,76,000 | 32 tenements (double storeyed). | 32 | Do. |
| Slum North of Victoria Talkies. | .. | .. | .. | This area is proposed to be cleared and the displaced slum dwellers rehabilitated in Erumapalayam area as this site is required for the Municipal Bus Stand. |
| Erumapalayam Slum Improvement Project. | 5,17,400 | 362 open developed plots. | 362 | The project contemplates rehabilitation of surplus families from Annadanapatti (88 families), Raghava Reddy (76 families), Narayanaswamipuram (3 families), North of Victoria Talkies (77 families) with additional plots to absorb over-flow from other areas (118 families). Work in progress. |





| Name of the Scheme/ Project. | Cost. | Number of tenements or open developed plots. | Number of families. | Remarks. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | RS. | | | |
| I. Slum Improvement Clearance—*cont.* | | | | |
| Court Road Alternate Site Project. | 2,33,000 | 162 open developed plots. | 162 | Work in progress. |
| Ponnamapet Alternate Site Project. | 1,50,000 | 96 open developed plots. | 96 | Work in porgress. |
| II. Union Government Rental Housing Scheme. | .. | .. | .. | An integrated la out for vaca Government lan in the compou of District Judge Bangalow, Sale has been prepar by the State Hou ing Board a the matter is u der considerati of the Gover ment. |
| III. Low income Group Housing Scheme. | .. | .. | .. | Nil. |
| IV. Middle income Group Housing Scheme. | .. | .. | .. | Nil. |

சேலத்தில் சேரி அபிவிருத்திக்காகவும் வீட்டு வசதித் திட்டங்களுக்காக ஆலோசனையிலுள்ள திட்டங்களின் விவரங்கள்.—

| திட்டத்தின் பெயர். | திட்டத்திற்காகும் செலவு. | குடியிருப்புகளின் அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளின் எண்ணிக்கை. | குடும்பங்களின் எண்ணிக்கை. | குறிப்புகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. | | | |
| I. சேரி அபிவிருத்தி/சேரி ஒழிப்புத் திட்டம்— | | | | |
| நாலுகால் மண்டபம் சேரி அபிவிருத்தித் திட்டம். | 2,31,000 | 36 குடியிருப்புகள் (இரண்டு மாடி வீடுகள்). | 36 | டெண்டர் தீர்மான கப்பட்டது. வே எடுத்துக் கொ ளப்படவிருக்கிறது |
| நாராயணசுவாமிபுரம் சேரி அபிவிருத்தித் திட்டம். | 1,84,000 | 28 குடியிருப்புகள் (இரண்டு மாடி வீடுகள்). | 28 | டெண்டர்கள் வந்த ளன அவற் மாநில வீட்டு வ வாரியம் ப லித்து வருகிறது. |

| திட்டத்தின் பெயர். | திட்டத்திற் காகும் செலவு. | குடியிருப்புகளின் அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளின் எண்ணிக்கை. | குடும்பங்களின் எண்ணிக்கை. | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. | | | |
| I. சேரி அபிவிருத்தி/சேரி ஒழிப்புத் திட்டம்—தொடர்ச்சி. | | | | |
| ராகவ ரெட்டியார் சாலை சேரி அபிவிருத்தித் திட்டம். | 3,65,000 | 64 குடியிருப்புகள் (இரண்டு மாடி வீடுகள்). | 64 | டெண்டர்கள் வந்துள்ளன. அவற்றை மானில விட்டு வசதி வாரியம் பரிசீலித்து வருகிறது. |
| அன்னதானப்பட்டி சேரி அபிவிருத்தித் திட்டம். | 1,76,000 | 32 குடியிருப்புகள் (இரண்டு மாடி வீடுகள்). | 32 | ஷை |
| விக்டோரியா டாக்கீசுக்கு வடக்குப் பக்கத்திலுள்ள சேரி. | .. | .. | | இந்த இடம் நகராட்சி பஸ் நிலையம் அமைக்க தேவைப்படுவதால் இப்பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் சேரி வாழ் மக்களை எருமைப் பாளையம் பகுதியில் குடியேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| எருமைப்பாளையம் சேரி அபிவிருத்தித் திட்டம். | 5,17,400 | 362 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள். | 362 | அடியிற்கண்ட பகுதிகளிலிருந்து வரும் மக்களைக் குடியேற்ற இத்திட்டம் வகை செய்கிறது:—அன்னதானப்பட்டி (88 குடும்பங்கள்), ராகவரெட்டி (76 குடும்பங்கள்), நாராயணசுவாமிபுரம் (3 குடும்பங்கள்), விக்டோரியா டாக்கீசுக்கு வடக்குப்பகுதி (77 குடும்பங்கள்). மேலும் பிற பகுதிகளிலிருந்து வரும் மக்களுக்கு இடமளிக்கவும் (118 குடும்பங்கள்) கூடுதலான மனைகள் உள்ளன. வேலை நடந்துவருகிறது. |
| நீதிமன்றச் சாலை மாற்று மனைத் திட்டம். | 2,33,000 | 162 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள். | 162 | வேலை நடந்து வருகிறது. |
| பொன்னம்மா பேட்டை மாற்று மனைத்திட்டம். | 1,50,000 | 96 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள். | 96 | |



| ...த்தின் பெயர் | திட்டத்திற் காகும் செலவு | குடியிருப்புகளின் அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளின் எண்ணிக்கை. | குடும்பங்களின் எண்ணிக்கை. | குறிப்புகள்: |
|---|---|---|---|---|
| | (2) | (3) | (4) | (5) |
| மத்திய அரசாங்க வாடகை வீட்டு வசதித் திட்டம். | .. | .. | .. | சேலம் மாவட்ட நீதிபதியின் பங்களா சுற்றுப்புறச் சுவருக்குள் உள்ள பகுதியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களின் இணைந்த வரைப்படம் ஒன்றை மாநில வீட்டு வசதி வாரியம் தயாரித்துள்ளது. இது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது. |
| குறைந்த வருமானத் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம். | .. | .. | .. | இல்லை. |
| நடுத்தர வருமானத் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம். | .. | .. | .. | இல்லை. |

D (
V211,31 N65
N65.28.7
64903